
பாலமுனை பாறூக்கின்

# மூன்று நவீன காவியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலமுனைபாறூக்கின்
# மூன்று நவீன காவியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள்/ பாலமுனை பாறூக்/ 14,பர்ஹானா மன்ஸில், பாலமுனை-03 (32354), இலங்கை/ முதற்பதிப்பு: வைகாசி 2020/ © பாலமுனை பாறூக்/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 170/ விலை: 400.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி./தொலைபேசி:0775367712

Palamunai Farookin Montru naveena kaviyankal / Palamunai Farook/14,Farhana Manzil, Palamunai 03,(32354), SriLanka./ First Edition: May 2020/ © Palamunai Farook/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 170 / Price: 400.00/ Printed at Baranee Printers, Nelliady. / Tel: 0775367712

ISBN: 978-955-0958-35-1

ஜீவநதி வெளியீடு – 147



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 147 ஆவது வெளியீடாக "பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள்" தொகுப்பு வெளி வருகின்றது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பாலமுனை பாறூக் அவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியான ஆளுமைமிக்க படைப்பாளியாக திகழ்பவர் பாலமுனை பாறூக். குறும்பா, குறுங்காவியம், கவிதை, மொழிபெயர்ப்பு என கவிதையின் பல்துறைசார் வகைமை களிலும் திறம்பட இயங்கிக் கொண்டிருப்பவர். மக்கள் கதைகளை தன் சுவையான காவியங்களூடாக வெளிப்படுத்தி வருகின்றார். வாசகனை தன்னீர்ப்பு செய்யக்கூடிய வகையான எழுத்தாளுமை மிக்கவராக பாலமுனை பாறூக் காணப்படுகின்றார். இவரது ஏனைய நூல்கள் வாசகர்களிடையே பாராட்டையும் பல விருதுகளையும் பெற்றுள்ளன. இந்த நூலும் வாசகர்களிடையே பலத்த வரவேற்பை பெறும் என்ற நம்பிக்கையுடன் இந்நூலை வெளியிட்டு வைக்கின்றோம். மேலும் நூலாசிரியரின் பொன்விழாவை முன்னிட்டு இந்நூல் வெளி வருகின்றது. இறைவன் ஆசியோடு இன்னும் பல்லாண்டு காலம் பாலமுனை பாறூக் அவர்கள் வாழ்ந்து இன்னும் பல படைப்புகளை தர இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

– க.பரணீதரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலமுனை பாறூக்
# கவிதைகளும் காவியங்களும்

கல்முனைப் பிரதேசத்தின் முன்னணிக் கவிஞர்களுள் பாலமுனை பாறூக்கும் ஒருவர். கல்முனைக்குத் தெற்கே அமைந்துள்ள பாலமுனைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் கிராமத்தின் பெயரைத் தன் பெயருக்கு அடையாகக் கொண்டதன் மூலம் தன் கிராமத்துக்கும் ஓர் இலக்கிய இருப்பை வழங்கியவர்.

பாலமுனை பாறூக் 1970களின் தொடக்கத்தில் கவிதைத் துறையில் காலடிவைத்தவர். இலங்கை இலக்கிய உலகில் முற்போக்குச் சிந்தனை முனைப்பாக இருந்த காலகட்டம் அது. பாலமுனை பாறூக்கும் அச்சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர் என்பதில் ஐயம் இல்லை. இஸ்லாமியப் பற்றும், சமூக உணர்வும் மிக்க ஓர் இடதுசாரியாக நாம் இவரை அடையாளங் காணலாம். பதம் (1987), சந்தனப் பொய்கை (2009) ஆகிய இவரது முதல் இரு கவிதைத் தொகுதிகளும் இதற்குச் சான்று.

அன்னை ராபியா பஸ்ரியின் பிரார்த்தனையிலிருந்து இவர் மொழி பெயர்த்துத் தந்த பின்வரும் பாடல் வரிகள் அவரது மதப் பற்றையும் மன உணர்வையும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

ஏழைக் குருடன் கரங்களிலே
இருக்கும் கையின் தடியாக
என்னை ஆக்கி விடுபோதும்
இதற்கு மேலே என்னை நீ
வீர இளைஞன் கரங்களிலே
மின்னும் வீர வாளாக
ஆக்கி விடவுந் தேவையில்லை
அல்லாஹ் எனக்கு அதுபோதும்

அரச னொருவன் மாளிகைக்குள்
அமைந்தே உள்ள அரியணையாய்
அல்லாஹ் என்னை ஆக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையில்லை எனக் கதன்மேல்
வழிப்போக் கர்கள் அமருகிற
நிழல்தரு மரமாய் என்னை நீ
உருவாக்கி விட்டால் அதுபோதும்
உவகை பெறுவேன் அதனாலே (பதம்)

மத விழுமியங்களுக்கும் சமூக நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் இவருடைய பதம் தொகுப்பிலுள்ள பல கவிதைகளில் வெளிப்படுகின்றன. குறிப்பாக வறுமைப்பட்ட பெண்களின் சமூக நிலை இவரது பல கவிதைகளில் பேசப்படுகின்றது. பாலையில் ஓர் நீர்ச்சுனை, மச்சானுக்கு ஓர் மடல், பெண்ணே மறந்துவிடு, கண்ணீரைத் துடைத்துவிடு, பாதை மாறிய பாவை, களைகள் அகற்ற முதலிய கவிதைகள் இத்தகையன. இவருடைய சந்தனப் பொய்கையில் உள்ள கவிதைகள் பெரிதும் மத ஆன்மீகம் சார்ந்தவை.

கவிதையின் மொழி அழகை விட அதன் பொருள் வலிமையால் பேசப்படக் கூடிய கவிதைகளே இவரது முதல் இரு தொகுதிகளிலும் பெருமளவு காணப்படுகின்றன. சுமார் முப்பது ஆண்டுகளில் இவர் எழுதிய கவிதைகளுள் குறைந்த எண்ணிக்கையிலான கவிதைகளே இவ்விரு தொகுதிகளிலும் இடம்பெற்றிருக்கின்றன என்று எண்ணுகின்றேன். 2010வரை இவர் எழுதிய கவிதைகளை முழுமையாக நோக்கும் பொழுதே இவருடைய தனிக் கவிதைகள் பற்றிய ஒரு சரியான மதிப்பீட்டை நாம் செய்யமுடியும். ஆயினும், ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் இவருடைய முதல் தொகுதியில் இவர் திரட்டித் தந்த 33 கவிதைகளையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, மருதூர்க்கொத்தன் தன் முன்னுரையில் இவரைப் பற்றி உயர்வு நவிற்சியாகச் சொன்ன வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டுப் பார்த்தாலும், பாலமுனை பாறூக் புறக்கணிக்கப்பட முடியாத ஒரு கவிஞர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

2

2010ல் பாலமுனை பாறூக்கின் கவித்துவ ஆளுமையில் திடீரென ஒரு விகசிப்பை நாம் காண்கின்றோம். இவ்வாண்டில்தான் அவருடைய கொந்தளிப்பு என்ற குறுங்காவியம் வெளிவந்தது. தென்கிழக்கின், குறிப்பாகப் பாலமுனை, ஒலுவில் வாழ் முஸ்லிம் மக்களின் கொந்தளிப்பான வாழ்க்கையைப் பேசுகின்ற ஒரு நெடுங்கவிதை அது. சுனாமிப் பேரழிவில் தன் மனைவி மக்களை இழந்து தனித்துப்போன ஆதம் காக்கா என்ற தனிமனிதனின் விருத்தாந்தத்தை விவரிப்பதன் ஊடாக கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையின் சில அம்சங்களைப் படம்பிடிக்கும் முயற்சி அது.

சன சந்தடி மிகுந்த கடற்கரையில் ஒரு மாலை நேரத்துக் காட்சியுடன் ஆரம்பிக்கிறது காவியம். ஆதம் காக்கா தனியே ஓரமாய் ஒதுங்கி நின்ற ஒற்றைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னையின் கீழே வந்து அமர்ந்துகொள்கிறார். அவரின் நினைவோட்டமாகக் கவிதை விரிகிறது. ஆழிப் பேரலை அனர்த்தம் அவரின் நினைவில் எழுகிறது. அதில் அள்ளுண்டுபோன தன் மனைவி, மக்களின் நினைவு அவரைத் துயரத்தில் ஆழ்த்துகின்றது. அதையொட்டி அவரது 33வருட மணவாழ்வு, சுனாமிக்கு ஒருவாரம் முன்னால் மூத்த மகளுக்குத் திருமணம் பேசியது, அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் இளைய மகள் குமராகி சடங்கு செய்தது எல்லாம் அவரது நினைவில் வந்து மோதுகின்றன. பின்னர், சுனாமி நிவாரணத்தில் நிகழ்ந்த மோசடிகளை, பாதிக்கப்பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டு வசதியானவர்கள் நிவாரணம் பெற்றதை, நினைத்துப் பார்க்கிறார். ஒலுவில் துறைமுக வேலைகள் தொடங்கியதும் அவரது பாரம்பரியமான மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டதை நினைத்துப்பார்க்கிறார். அதையொட்டி மீன்பிடித் தொழில் நடைமுறைகள் அவர் மனத்திரையில் ஓடுகின்றன. மீன்பிடித் தொழிலையும் இழந்து, துறைமுக நிர்மாணத்தில் வேலை வாய்ப்புகளையும் இழந்து நிற்கும் அவரது பரிதாப நிலை, தன் பிரதேசத்தில் வெளியிலிருந்து வந்த பெரும்பான்மையினரின் மேலாதிக்க அச்சுறுத்தல் என்பவற்றால் அவரது மனச்சுமை அதிகரிக்கிறது.

மீன்பிடித் தொழிலை இழந்த பின்னர் போடியாரின் வயலில் வேளாண்மைச் செய்கையாளராக (வெளியான்) மாறிய தன் வாழ்க்கைபற்றி பின்னர் அவர் நினைத்துப்பார்க்கிறார். தன் வாப்பாவுடன் சிறுவயதில் வயலுக்குப் போன நினைவுகள் அவர் மனத்திரையில் எழுகின்றன. வேளாண்மைச் செய்கையில் இயந்திரம் நுழைவதற்கு முந்திய விவசாய நடைமுறைகளை விஸ்தாரமாக நினைத்துப்பார்க்கிறார். இப்போது எல்லாம் போய்விட்ட நிலை.

இலயித்து, அவர் மனம் சுவைத்து
வாழ்ந்திட்ட வாழ்க்கை
விலகியதாய், விட்டுவிட்டு
நழுவியதாய் உணர்ந்தார்?
கலங்கிவிட்டார் . . . மனசினிலே
கவலைவர நொந்தார்
இயந்திரமாய்ப் போனதிந்த
வாழ்க்கை என வெந்தார்

இருண்டே இருந்தது
இடி இடித்தது
ஒப்பாரி வைத்தே அழுதது வானம்!

ஓடிச் சென்றே
ஒதுங்கினார் காக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகட்டுக் கூரைத் தாழ்வாரத்தே

என்று முடிகிறது கொந்தளிப்பு குறுங்காவியம். 14 சிறு அத்தியாயங்களில் நினைவோட்டமாகச் சொல்லப்படும் இக்காவியம் பாலமுனை பாறூக்கின் கவித்துவ முதிர்ச்சியைக் காட்டுகின்றது என்பதில் ஐயம் இல்லை. புனை கதையின் விபரிப்பு முறையைப் பயன்படுத்தியிருப்பது அவரது காவியத்துக்கு வலுவூட்டுகின்றது எனலாம்.

3

இதைத் தொடர்ந்து 2011ல் தோட்டுப்பாய் மூத்தம்மா குறுங்காவியம் வெளிவருகிறது. இது கொந்தளிப்பின் வடிவத்தில் இருந்தாலும் அதிலிருந்து பெரிதும் வேறுபட்டது. கொந்தளிப்பில் ஒரு கதை இல்லை. ஆதம் காக்கா மட்டுமே அதில் வரும் பாத்திரம். ஏனையவர்களுக்கு முகமும் இல்லை, குரலும் இல்லை. ஆதம் காக்காவின் நினைவுகளின் ஊடாகச் சம்பவங்களைக் கவிஞர் விபரித்துச் செல்கிறார்.

தோட்டுப்பாய் மூத்தம்மாவில் ஒரு கதை உண்டு. சொந்த ஊரை விட்டு இளம் வயதில் அயலூருக்குத் தன் கணவனோடு வந்து, ஊரார் வழங்கிய ஒரு சிறு நிலத்தில் குடிசை அமைத்து அவனுடன் ஊர் மெச்ச வாழ்ந்து, கணவன் இறந்த பின்னரும் தானே உழைத்துத் தன் குடிசையில் தனித்து வறுமையில் வாழ்ந்து எழுபது வயதில் மரணித்துப்போன செய்னம்புவின் கதையைச் சொல்கிறது இக்காவியம். இந்தச் செய்னம்புதான் தோட்டுப்பாய் மூத்தம்மா.

"மூத்தம்மா மௌத்தாகி மூன்றாம் நாள் மூத்தம்மா வசித்திருந்த குடிசைக்குக் கொண்டாட்டம்." "கார்களிலும் சொகுசான பஸ்களிலும் எங்கிருந்தோ எவரெவரோ உறவுமுறை கூறி ஓடோடி வந்தார்கள். "கத்தம் கொடுத்து கடன் கழிக்க வேண்டுமென உற்சாகத் தோடவர்கள் உருண்டு புரண்டார்கள்! கோழி புரியாணி குடிசையிலே மணம் வீசி வேலிகளைத் தாண்டி விரைந்து பரவிற்று." அப்போதுதான் இந்தக் கேள்வி எழுகிறது.

"ஆர் இந்த மூத்தம்மா?"

இந்தக் கட்டத்தில் நீலாவணனின் "உறவு" கவிதையில் வரும் மரணித்தப்போன மானாகப் போடிப் பெரியப்பாவை நினைவுறுத்துகிறாள் தோட்டுப்பாய் மூத்தம்மா. ஆனால், உறவு கவிதையில் நீலாவணனின் நோக்கம் போலி உறவைக் கேலிசெய்வதுதான். தோட்டுப்பாய் மூத்தம்மா அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

செய்னம்பு பெரிய குடும்பத்துப் பெண். பரம்பரைப் போடியாரான பெரியம்பிப் போடியின் ஒரே மகள். அவள் பிறப்பை நாற்பது நாள்வரை அந்தக் குடும்பம் கொண்டாடியது. பள்ளிப் படிப்பு இல்லாவிட்டாலும் மார்க்கக் கல்வி ஊட்டி "அதபாய்" வளர்க்கப்பட்டவள் அவள். பன்னிரண்டு வயதில் அவள் பருவ மடைந்ததும் சொந்த மாமியே வந்து சம்பந்தம் கலக்கிறாள். உரியமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் பேசி சொந்த மச்சானுக்கே மணம் முடித்துவைக்கப்படுகிறாள். கணவனின் குடும்பமும் போடி குடும்பம். பெரியம்பிப் போடியின் சகோதரியின் கணவன் இளையம்பிப் போடி. அவருடைய மகன் அகமன். திமிரும் முன்கோபமும் உடைய சுடுதண்ணி என விபரிக்கப்படுகிறான். செய்னம்பு அவனுடன் ஐந்து ஆண்டுகள் குடும்பம் நடத்துகிறாள். காவியத்தில் அவளுடைய குடும்ப வாழ்க்கை பற்றிய விபரணங்கள் எவையும் இல்லை. எனினும் அது திருப்தியற்ற மணவாழ்க்கை என்று கதை சொல்லியான கவிஞரால் கூறப்படுகிறது. "ஒட்ட முடியாத உறவு." தகப்பன்மாரும் மரைக்கார்மாரும் சமரசம் செய்ய முயன்றும் முடியவில்லை. செய்னம்பு பிடிவாதமாக நின்று மணவிலக்குப் பெறுகிறாள்.

செய்னம்புவின் தனிமை வாழ்க்கை தகப்பனைத் துன்புறுத்துகின்றது. மகளுக்கு மறுமணம் செய்துவைக்க அவர் முடிவெடுக்கிறார். மறுமண முடிவெடுத்ததும் அவருக்குத் தன் வண்டிக்கார இசுமாயில்தான் நினைவுக்கு வருகிறான். அவன் "பார்வைக்கு நல்ல அழகன், நேர்மையுடன், தொழில் தேர்ச்சியுடன் செய்துவரும் பேர்பெற்ற நல்ல உழைப்பாளி." வண்டி இழுப்பதுடன் பெரியம்பிப் போடியின் குடும்ப அலுவல்களையும் பார்ப்பவன். செய்னம்பு சிறுமியாக இருந்த காலத்தில் அவளை ஓதப்பள்ளிக்கு வண்டியில் கூட்டிப்போய்க கூட்டி வந்தவன். அவள் கிண்ணம் பழம் கேட்டு அடம்பிடிக்க மரமேறி கிண்ணம் பழம் ஆய்ந்து கொடுத்திருக்கிறான். அவள் குமரான பின்னரும் அவள் போகும் இடத்துக்குக் கூட்டு வண்டியில் கூட்டிப்போய்க் கூட்டிவந்திருக்கிறான். போடி யாரின் நம்பிக்கைக்குரியவன். தகப்பன் மறுமணம் பற்றிய பேச்செடுத்தபோது முதலில் செய்னம்பு மறுக்கிறாள். "குணத்தினை விடுத்து, பரம்பரை குடும்பம் பார்த்து முடிக்கும் மறுமணம் எதற்கு என்றவள் நினைத்தாள்." ஆனால், இசுமாயில்தான் மாப்பிள்ளை என்று அவர் சொன்னதும் இணங்குகிறாள். "நேர்மையும் உழைப்பும் நேர்த்தியும் தொழுகையும் இளமையும் அழகும் ஒழுக்கமும் நிறைந்த உருவமொன்றவளின் கண்களில் தெரிய... சம்மதம் சொன்னாள்."

பின்னர் இசுமாயிலின் சம்மதம் கேட்க விரைகிறார் தகப்பன். மகளின் பரிதாபக் கதையைச் சொல்லி சொத்துகள் காணி தருவதாகச் சொல்லி மகளுக்கு மறுவாழ்வளிக்கும்படி வேண்டுகிறார். அவனோ சொத்துகளை நிராகரித்து இஸ்லாமிய முறைப்படி மஹர் கொடுத்து செய்னம்புவை மணமுடிக்கச் சம்மதிக் கிறான். கவிஞர் நமக்கு அதிக விபரம் தராவிடினும் இசுமாயிலுக்கும் செய்னம்புக்கும் இடையில் வெளிப்படுத்தப்படாத ஒரு ஊமைக்காதல் அவர்களின் நெஞ்சங்களில் உறைந்திருந்தது என்பதை நாம் எளிதாக யூகிக்கலாம்.

ஆனால் "போடியார் மகளுக்குக் கூலிக்காரனா" எனக் குடும்பம் எதிர்க்கிறது. அதனால் "இணங்கிக்கொண்ட இரண்டு மனங்கள் ஊரைவிட்டே போக நினைத்தன." உள்ள சொத்தெலாம் பள்ளிக்குக் கொடுத்து வக்பு செய்தபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடம் அமைத்துப் பிள்ளைகள் ஓதவும் படிக்கவும் உதவும்படியாய்க் கோரிக்கைவைத்து ஊரைவிட்டே போய் பத்துமைல் தொலை தூரப் பயணத்தில் வரும் இந்தச் சிற்றூரை வந்தடைந்து வாழ்ந்தார்கள். புறப்பட்டு இங்கிருந்தே போயிற்று மையத்து. இதுவரை மையத்து வீட்டிலிருந்து பின்னோக்குப் பார்வையில் கதை சொல்லிவந்த கவிஞர், மீண்டும் வாசகரை அந்தக் குடிசைக்குக் கொண்டுசெல்கிறார். மூன்றாம் நாள் மையத்து வீட்டுக்கு வந்தவர்கள் அவளுடைய சொந்த ஊரார்தான். அவள் வக்பு செய்த சொத்துகளால் பயனடைந்து, பட்டங்கள் பெற்றவரும் பதவிகளில் உயர்ந்தவரும் வந்திருந்தார்கள். அவளுக்காய் கிரியைகளும் பிரார்த்தனையும் புரிந்தார்கள். அவர்களின் வழிகாட்டுதலில் அந்த ஊரிலும் "செய்னம்பு நாச்சியார் கல்விச் சகாய நிதி" என்ற பெயரில் ஒரு நம்பிக்கை நிதியத்தையும் தாபித்தார்கள்.

விண்ணில் படர் இருளும்
விலகிற்று!
விண்மீன்கள் புடைசூழ
நிலவுமகள் உலாவந்தாள்!

குளிர் நிலவின்
ஒளி மழையில்
நனைந்திற்றே ஊரெல்லாம்!

நிலவுக்குள் ஒளிமுகமாய்
நிறைந்தாளோ செய்னம்பூ?

என்று காவியத்தை முடித்துவைக்கிறார் கவிஞர். நான் இதுவரை இங்கு விபரித்த கதை காவியத்தின் எலும்புக்கூடுதான். அளவில் சிறிய 18 அத்தியாயங்களில் தன் கவிதை நடையில் இந்த எலும்புக் கூட்டுக்கு உருவமும் உயிரும் கொடுத்திருக்கிறார் கவிஞர். ஒரே இருப்பில் வாசித்து முடிக்கக்கூடிய சிறிய படைப்புத்தான். எனினும், அதன் ஊடாக ஒரு முக்கால் நுற்றாண்டுகால முஸ்லிம் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை, சமூக அசைவியக்கத்தை மையக் கதையின் ஓரங்களில் இழையோட விட்டிருக்கிறார்.

இக்கதை நிகழும் காலம் பற்றிய வெளிப்படையான குறிப்புகள் எவையும் இதில் இல்லை. எனினும் செய்னம்பு எழுபது ஆண்டுகளுக்கு முன் பற்றூரில் பிறந்தாள் என்று சொல்லப்படுகின்றது. அவள் இறந்தது சமகாலத்தில் என்றால் அவள் பிறந்தது 1950களில் என்று கொள்ளவேண்டும். ஆனால், அவள் சிறுமியாக இருந்த காலத்தில் மிசனரிப் பள்ளிக்கூடங்களைத் தவிர முஸ்லிம் கிராமங்களில் வேறு பள்ளிகளே இல்லை. மாட்டுவண்டிதான் பிரதான வாகனம். இதில் விபரிக்கப்படும் சாமர்த்திய, திருமணச் சடங்கு சம்பிரதாயங்கள் இன்று பெரிதும் வழக்கில் இல்லாதவை. அவ்வகையில் இந்தக் கதை 1930களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்குவதாகக் கொள்ளலாம். அன்றிலிருந்து கல்வி முன்னேற்றம், பட்டம் பதவிகள் பெற்ற ஒரு மத்தியதர வர்க்கத்தின் உருவாக்கம், மையத்து அடக்கம் செய்யும்போது தல்கீன் ஓதுவது கூடுமா கூடாதா என்பன போன்ற மத முரண்பாடுகள் என்பன காணப்படும் சமகால முஸ்லிம் சமுதாயம் உருவாகியது வரையிலான வரலாற்றினை இக்காவியம் மெல்லிதாகத் தொட்டுச் செல்வதைக் காணமுடிகிறது. அவ்வகையில் ஒரு யதார்த்த நாவலுக்குரிய பொருளை இக்காவியம் தன் கவிப் பொருளாகக் கொண்டுள்ளது என ஒருவர் கூறமுடியும்.

யதார்த்த நாவலுக்குப் பழக்கப்பட்ட வாசகன் இக்காவியம் பற்றிப் பல்வேறு வினாக்களை எழுப்புவான்: அகமனுக்கும் செய்னம்புக்கும் இடையிலிருந்த உண்மையான முரண்பாடு என்ன? ஏன் செய்னம்பு விவாக விலக்கில் தீவிரமாக இருந்தாள்? அதை நியாயப்படுத்துவதற்கான வலுவான காரணிகள் எவை? பெரியம்பிப் போடிக்கிருந்த செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் அவருக்குத் தகுதியான குடும்பத்தில் இருந்து தன் மகளுக்கு இரண்டாவது மாப்பிள்ளை தேடியிருக்கலாமே. அப்படி இருந்தும் ஏன் அவர் வண்டிக்கார இசுமாயிலிடம் போய் தன் மகளுக்கு மறுவாழ்வு தரும்படி இரந்து நிற்க வேண்டும்? செய்னம்பு இசுமாயில் திருமணம் ஊரில் செல்வமும் செல்வாக்கும் உள்ள அவளுடைய தகப்பன் பேசிச் செய்த திருமணம்தானே. அப்படியிருந்தும் சுற்றத்தவர் விரும்பவில்லை என்பதற்காக கள்ளக் காதலர்கள் போல் அவர்கள் ஏன் ஊரைவிட்டுச் சென்று அஞ்ஞாத வாசம் செய்ய வேண்டும்? இசுமாயில் சீதனமாக சொத்துகள், காணி எதுவும் வேண்டாம் என்றவன். செய்னம்பு தகப்பனின் சொத்தில் உரிமை உடையவள் எனினும், தகப்பன் எழுதிக் கொடுக்காதவரை அவள் சொத்துடையவள் அல்ல. இந்நிலையில் அவர்கள் சொத்துகளையெல்லாம் பள்ளிவாயலுக்கு வக்பு செய்தது எப்படி? தகப்பன் முழுவதையும் எழுதிக்கொடுத்தாரா? அப்படியானால் பின்னர் தாய், தகப்பனுக்கு என்ன நடந்தது? இசுமாயிலும் செய்னம்புவும் சொந்தக் கிராமத்திலிருந்து பத்துமைல் தூரத்தில்தான் வாழ்ந்தார்கள். செய்னம்பு சுமார் ஐம்பது ஆண்டுகள் அங்கு வாழ்ந்திருக்கிறாள். அதுகாலவரை அவளுக்கும் அவளது குடும்பத் தினருக்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லையா? அவளுடைய வக்பு செய்த சொத்துகளினால் பயன் பெற்று பட்டமும் பதவிகளும் பெற்றவர்கள் அவள் மரணிக்கும் வரை அவளைப்பற்றி அறியாமல் இருந்தார்களா? அவளது மௌத்துக்குப் பின்னர் திடீரென அவள் பற்றி அவர்களுக்கு ஞானம் கிடைத்தது எவ்வாறு? இது ஒரு யதார்த்த நாவலாக இருந்தால் வாசகர் மனதில் இத்தகைய கேள்விகள் எழுதல் இயல்பே. ஆனால், இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதாயிருந்தால் பாலமுனை பாறூக் இந்தக் காவியத்துக்குப் பதிலாக ஒரு நாவலைத்தான் எழுதியிருப்பார்.

ஒரு யதார்த்த நாவலில் நாம் எதிர்பார்ப்பதை எல்லாம் யதார்த்த வாழ்வைப் பிரதிபலிக்கும் ஒரு காவியத்தில் நாம் எதிபார்க்க முடியாது. நாவலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளம் வேறு. காவியத்தின் தளம் வேறு. அதனால்தான் இந்தக் காவியத்தைப் பற்றி எழுதிய யாருக்கும் இத்தகைய கேள்விகள் எழவில்லை என்று நினைக் கின்றேன். ஒரு யதார்த்த நாவல் யதார்த்த வாழ்வின் நுட்ப விபரங்களையும் ஊடுருவிச் செல்லும் இயல்புடையது. அது விபரிக்கும் சம்பவங்களுக் கிடையே ஒரு தர்க்க ஒழுங்கைப் பேணும் கடப்பாடு அதற்கு உண்டு. உண்மைக்குக் கிட்டியதாக, நம்பும் படியான ஒரு பிரமையை வாசகனுக்குள் ஏற்படுத்துவதே அதன் அழகியல் எனலாம். அத்தகைய தர்க்க ஒழுங்குக்குக் கட்டுப்பட வேண்டிய கடப்பாடு காவியத்துக்கு இல்லை. அதனுடைய அழகியல் வேறு. அது யதார்த்தத்தைக் கற்பனையாகவும் கற்பனையை யதார்த்தமாகவும் மாற்றக்கூடியது. யதார்த்தவாதத்தை விட இலட்சியவாதம் அதில் மேலோங்கி இருக்கும். தர்க்கரீதியான நுட்ப விபரங்களில் அது அதிகம் மினக்கெடுவதில்லை. கற்பனையான புனைவுலகம் அதற்கு மிகவும் உவப்பானது.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை காவியம் பெரிதும் கற்பனை உலகு சார்ந்ததாகவே இருந்தது. யதார்த்த உலகுக்குரிய இலக்கிய வடிவமாக நாவல் வளர்ச்சிபெற்றது. யதார்த்த வாழ்வையும் காவியத்தையும் இணைக்கும் முயற்சி இருபதாம் நூற்றாண்டுக்கு உரியதுதான். தமிழில் அதில் வெற்றிபெற்றவர்கள் மிகச் சிலரே. மஹாகவியை அதில் முக்கியமானவராக நான் சொல்வேன். அவருடைய சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை என்பன அவ்வகையில் தமிழில் முன்னுதாரணம் இல்லாத படைப்புகள். இப்பொழுது பாலமுனை பாறூக் அந்த ரசவாதத்தைச் செய்துபார்க்க முயன்றிருக்கிறார். கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா ஆகிய இரண்டிலும் அவர் பெருமளவு வெற்றிபெற்றிருக்கிறார் என்றே சொல்லவேண்டும்.

4

இப்போது அவருடைய மூன்றாவது குறுங்காவியம் எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு வெளிவருகின்றது. வடிவால் முன்னைய இரு காவியங்களையும் ஒத்தது எனினும் பொருளால் அவற்றிலிருந்து இது பெரிதும் வேறுபட்டது. கடந்த முப்பது ஆண்டுகளில் இலங்கையில் நிலவிய இன முரண்பாடு, யுத்தம் என்பவற்றுக்கு மத்தியில் கிழக்கில் முஸ்லிம் தமிழ் இன உறவில் ஏற்பட்ட விரிசலையும், தனிமனித அவலங்களையும் பொருளாகக் கொண்டது இக்காவியம். குறிப்பாக இந்திய அமைதிப்படை இங்கிருந்த காலத்தில் (1987 -1989) நிலவிய சூழலை இது மையமாகக் கொண்டது.

இக்காவியத்தின் பிரதான பாத்திரத்துக்குப் பெயர் இல்லை. அவன், இவன் என்ற படர்க்கைப் பெயராலேயே அவன் குறிப்பிடப்படுகிறான். பாதிக்கப்பட்ட பொது மகனைச் சுட்டுவதற்காக படர்க்கைப் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலா பக்கமும்
கடலாய்ச்
சூழ்ந்துள இலங்கைத் தீவில்
இவன் ஒரு பொது மகன்
எப்பிழை செய்தான்
எதனைக் கேட்டான்
கிழக்கில் பிறந்தான்
இது பிழையாவதா?

என்ற கேள்வி எழுகின்றது. எனினும், அவன் ஒரு முஸ்லிம் பொதுமகன் என்ற இன அடையாளம் வெளிப்படையாகவே உள்ளது. தமிழ், முஸ்லிம் கிராமங்களின் எல்லைப் புறத்தில் வாழ்ந்தவன் அவன். இரு கிராமங்களையும் ஒரு வீதிதான் பிரித்தது. இரு இனத்தவரும் அக்கம் பக்கமாய் அன்னியோன்னியத்துடன் வாழ்ந்தவர்கள்.

வண்டிக்கார முஸ்லிம்கள்
தமிழர்
ஒன்றாய்ச் சேர்ந்து
ஒற்றுமை யாகவே
காட்டினிற் சென்று
கம்புகள் வெட்டி
கோயிலைப் பள்ளியைக்
கட்டிக் கொண்ட...
ஒருவருக் கொருவர்
உதவி வாழ்ந்த..

பள்ளி வாசலில் கந்தூரி ஆக்க
கொள்ளி தறித்துக்
கொடுத்து மகிழ்ந்த ..
கோயில் வைபவக் கலைவிழா நிகழ்ச்சியில்
பேதம் இன்றி
முஸ்லிம் கலைஞரும்
கூடிக் கலந்து
குதூகலித் திருந்த..

அந்தக் காலம் போயிற்று. "கண்பட்டுப் பெய்த்திடா தம்பி, என்னமாய் இருந்தம் ஒருதாய் வகுத்துப் புள்ளைகள் போல..." என்ற அந்தக் காலம் கனவாய்ப் போயிற்று. இப்போது எல்லை வீதி யுத்த

களமாயிற்று. அது
முழங்கும் அதிரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுமாரி பொழிவது கேட்கும்
வாகனம் உடைந்து
மல்லாந்து படுக்கும்
வீதி இரண்டாய்
வெடித்துக் கிடக்கும்..
வாகனத் தொடரணி
புழுதி கிளப்பும்..
அழுகை ஒப்பாரி
ஊரெலாம் கேட்கும்

இந்தச் சூழலில் அவன் குடும்பத்துடன் இடம் பெயர்ந்து உள்ளூரில் தன் உறவினர் வீட்டில் அகதியாகத் தங்கியிருக்கிறான். ஒரு நாள் அவன் தன் சொந்த வீட்டைப் பார்க்க வருகிறான். வந்தவன் அமைதிப் படையின் சுற்றிவளைப்பில் அகப்பட்டுக்கொள்கிறான். அதிலிருந்துதான் காவியம் தொடங்குகின்றது. "ஆசிரியர்கள், மாணவர் தினமும் கூலித் தொழிலே செய்து வாயை வயிற்றைக் கட்டிக் கொள்வோர் வைத்தியர், இனங்களுக் கிடையில் உறவுப் பாலம் அமைக்க விரும்பி சமாதான சங்கம் அமைத்தோர் என்று பலரும் இன, பால் வயது வேறுபாடின்றி அமைதி காக்க என்று வந்த அந்த நாட்டுப் படையினராலே அள்ளப்பட்டனர்." சொந்த நாட்டில் சொந்த ஊரில் சொந்த வீட்டைப் பார்க்க வந்தவன் அந்த நாட்டுப் படையினராலே அள்ளப் பட்டான்

உறுமிக் கொண்டும் உதைத்துக் கொண்டும் விரைந்தது வாகனம்! யுத்த காலத்தில் வட கிழக்கு மக்களின் பொது அனுபவமாக இது இருந்தது. அமைதிப் படையோ, அரச படையோ சுற்றிவளைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள்தான். அடுத்துவரும் 12 அத்தியாயங்களிலும் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவனின் மன உணர்வுகளும் அனுபவங்களும் சித்திரிக்கப்படு கின்றன. அதன் ஊடாக யுத்தத்தில் இரு சமூகங்களும் தனிமனிதர்களும் பட்ட இன்னல்களை வெளிக்கொண்டுவர முயல்கிறார் கவிஞர். சுற்றி வளைப்பில் அமைதிப் படையால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவன் தான் தங்கியிருந்த உறவினர் வீட்டுக்கு வருகிறான். அங்கு ஒருவரும் இல்லை. மனைவி குழந்தைகளும் இல்லை. சுற்றாடலில் அச்சம் கவிந்திருக்கிறது. எல்லோரும் அவனைக் கண்டு ஒதுங்குகிறார்கள். விசாரித்ததில் அவன் கைது செய்யப்பட்டபின் ஆயுதக் குழுவினர் அடிக்கடி அவனைத் தேடிவந்து தொல்லை கொடுத்ததாகவும், "அவனால் ஏதும் தகவல் கசிந்து அவர்களில் யாரும் பிடிக்கப்பட்டால் தொலைப்போம் என்று எச்சரித்ததைச் சொல்லக் கேட்டான்." அச்சப்பட்ட கோழியும் குஞ்சும் ஊரைவிட்டே உறவினரோடு ஒளித்துப் போன பரிதாபத்தை கூறக் கேட்டுக் குமுறி அழுதான்

இனி என்ன? எஞ்சியிருந்தது பிரார்த்தனை மட்டும்தான். எல்லை வீதியில் சொந்த வீட்டுக்கு வருகிறான். வீடு சிதிலமடைந்து குப்பை மேட்டுக்குள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிழ்ந்திருக்கிறது. பசிக் களைப்போடு விறாந்தையில் அமர்கிறான். பக்கத்து வீட்டுப் பார்வதி அக்கா அவனைக் கண்டு பரிவோடு அரவணைக்கிறாள். உணவு கொடுத்து, பணமும் கொடுத்து இங்கிருந்தால் அவனுக்கு ஆபத்து என்று அவசரமாக அவனை அனுப்பிவைக்கிறாள். அவன் இலக்கின்றி நடந்து நகருக்கு வருகிறான். பஸ்நிலையத்தில் பஸ்கள் இல்லை. கடைகள் மூடிக்கிடக்கின்றன. "உறைந்துபோய் இருந்தது ஊர்." திகில் படர்ந்த சூழலில் "அச்சப்பட்ட உடம்பு வியர்க்க" ஓடுகிறான். சனம் குழுமியிருந்த ஒரு இடத்துக்கு வருகிறான். அங்குதான் அவனுக்கு நிலைமையின் அர்த்தம் புரிகிறது. ஆட்கடத்தல் நிகழ்ந்திருக்கிறது. "அந்தப் பக்கம் நேற்று கோழிவாங்கச் சென்ற காக்கா ஊரை வந்து சேரவில்லை. இந்தப் பக்கம் மேசன் வேலையாய் வந்த இருவர் பணயக் கைதியாய்ப் பிடிபட்டிருக்கிறார்." அப்பாவிகளும் தொழிலாளர்களும் அடிக்கடி இப்படி அமுங்கிப் போவதை அகதி யாவதை எண்ணிப் பார்த்து மனசு துவண்டது தன்னைப் பற்றியும் எண்ணம் எழுந்தது என்ன பிழை நான் செய்திருக் கின்றேன் இனத்தின் பெயரால் எவர்க்குத் துன்பம் இழைத்திருக் கின்றேன்!

முடுக்கி விட்டவர் தடுக்கி விழாமல் இருக்கும் இடத்தில் இருந்துகொள்ள பாதிப்படைகிற மக்களை நினைக்க வேதனைப் பட்டு மேனி சுட்டது கடத்தல் விரைவில் ஒரு முடிவுக்கு வருகிறது. கடத்தப்பபட்ட கோழிக் காக்கா குஞ்சு முகம்மது தமிழர் பகுதியில் பிரபலமானவர், நல்லுறவு கொண்டிருப்பவர். ஊர் மக்களே ஒன்று திரண்டு அவரை விடுவிக்கின்றனர். பதிலாக பிடித்து வைக்கப்பட்ட மேசன் மாசிலாமணியும் விடுவிக்கப்படுகிறான். அவன் முஸ்லிம்கள் மத்தியிலேயே தொழில் செய்து வாழ்பவன். இனக்குரோதம் துளியும் இல்லாதவன். இவனுடன் ஒன்றாகப் படித்தவன். ஊர் வளமைக்குத் திரும்புகின்றது. கடைகள் திறக்கப்படுகின்றன. தன் குடும்பம் பற்றிய மனச் சுமையுடன் இவன் பஸ் நிலையத்துக்கு வருகிறான். தன் உறவினரைச் சந்திக்கிறான். அவனது மனைவி பிள்ளைகள் பயத்தில் ஊரூராகத் திரிந்து கடைசியில் ஓணேகமையில் ஒரு தூரத்து உறவினர் வீட்டில் இருப்பதாக அறிகிறான். "அகதி வாழ்வே ஊர்ஜித மானதாய் எண்ணி எண்ணி ஏங்கி அழுதான்... ஊரைவிட்டு ஓடிச் சென்று கோழி குஞ்சொடு கூடி இருப்பதா? தேடும் குழுவைத் தேடிச் சென்று உண்மை நிலையை விளக்கி வைப்பதா? .. ஊரை விட்டு ஓடிச் சென்ற கோழியைக் குஞ்சைக் கூட்டி வருவதா?" விடைதெரியாத இந்தக் கேள்விகளோடு அல்லாடுகின்றது அவன் மனம்.


எஞ்சி இருப்பது பிரார்த்தனை மட்டுமே! இருகரம் ஏந்தினான் புரிந்துணர் வோடு வாழ்வதற்கான சரிசமமான சமாதானம் நாடியே! என்று முடிகிறது காவியம். யுத்தகால அனுபவத்தை, அது ஏற்படுத்திய மன உழைச்சலை ஒரு கழைக்கூத்தாடியின் நிதானத்துடன் காவிய மாக்குவதில் பாறூக் வெற்றிகண்டிருக்கிறார் என்பதில் ஐயம் இல்லை. சரிசமமான சமாதானம் என்பது இன்னமும் நமக்கு ஒரு கனவே எனினும் அந்தக் கனவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவாக்குவதற்கான ஒரு சமூக உளவியல் தேவையை இக்காவியம் வலியுறுத்துகின்றது எனலாம். அவ்வகையில் கவிஞரின் முன்னைய இரு காவியங்களையும் விட இதன் சமூக அரசியல் முக்கியத்துவம் அதிகமாகும். மூன்று காவியங்களின் அமைப்பும் உத்தி முறையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி யானது. பெரும்பாலும் அகவல் யாப்பு வடிவத்தையே கவிஞர் கையாண்டிருக் கிறார். ஒரு அகவல் அடியை இரண்டு வரிகளாக உடைத்திருக்கிறார். புதுக் கவிதைக்குப் பயிற்றப்பட்ட வாசகர் எளிதாக இதற்குள் உள் நுழையலாம். இம்மூன்று காவியங்களையும் படிக்கும்போது கவிஞர் பாலமுனை பாறூக்கினுள் ஒரு நாவலாசிரியனும் ஒளிந்திருக்கிறான் என்று தெரிகின்றது. காவிய வடிவத்தை அவர் தேர்ந்திருக்காவிட்டால் சிலவேளை அவர் நல்ல நாவல்களை எழுதியிருக்கக் கூடும். சமகாலச் சமூக அரசியல் அனுபவத்தைக் கையாள்வதற்கு காவியத்தை விட நாவலே வலுவான ஊடகம் என்று நான் நினைக்கின்றேன். ஆயினும், இரண்டினுடைய வெற்றியும் தோல்வியும் படைப்பாளியின் தனித்திறனில் தங்கியுள்ளது. சிலவேளை பாறூக் இவற்றை நாவலாக எழுதித் தோல்வி அடைந்திருக்கலாம். காவியமாக்கியதில் அவர் பெருமளவு வெற்றிபெற்றிருக்கிறார் என்பதே என் கருத்து. அவருக்கு என் பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

– பேராசிரியர் எம். ஏ. நுஃமான்


"பாலமுனை பாறூக்கின் குறுங்காவியங்கள்" - ஓர் ஆய்வு

ஆய்வாளர்

நெறியாளர்

Ya Allah
Increase My Knowledge

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை

புதுக்கல்லூரி (தன்னாட்சி)


சென்னை - 600 014

செப்டம்பர் - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொந்தளிப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.**

*ஆழிக்கட லெனும் அழகுப் பெண்ணாள்*
*நீலச்சேலை*
*அணிந்தே இருந்தாள்..!*
*வெள்ளைக் கரையொடு*
*வண்ணச் சேலை*
*கொள்ளை அழகு, கொள்ளை அழகு !*
*நிலவு மங்கை இருட்திரை கிழித்து*
*எழில்தான் எதுவென*
*எட்டிப் பார்த்தாள்!*
*மஞ்சள் பூசிய*
*மங்கை அவளும்*
*விஞ்சிய அழகொடு விண்ணில் மிதந்தாள்*

*அமர்ந்து மேலெழும்*
*ஆழியள் மார்பில்*
*மிதந்து ஊர்ந்திடும்*
*தோணிப் பூச்சிகள் !*
*குனிந்து, பார்த்து, மகிழ்ந்தாள் நிலவாள்,*
*ஒளிர்ந்தது குளிராய்*
*ஓ..அவள் சிரிப்போ ?*

*அழகை இரசிக்கவா*
*அமைதியைப் பெறவா*
*பழகவா பேசவா*
*பாடி மகிழவா*
*ஆடவர் பெண்டிர்*
*அருகருகிருந்து*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிக் களிக்கவா
கொஞ்சவா குலவவா ?

உண்ணவா ? பருகவா ?
ஒளியினில் நனையவா ?
பிள்ளைக ளோடும்
பேச்சைப் பகிரவா ?

பட்டம் விடவா ?
பறக்கும் பிள்ளையின்
வெள்ளை மனதுடன்
விரும்பி இணையவா ?

எத்தனை பேர்கள்
எத்தனை பேர்கள் !

ஒருவராய்... இருவராய்
உறவினர் சிலராய்
தெரிந்தவர் பலரும்
தெரியாதவர்களும்
வருகிறார் செல்கிறார்
வழமையைப் போலவே !

ஓரமாய்த் தனியாய்
ஒதுங்கியே நின்ற
ஒற்றைத் தென்னையின்
கீழே வந்து...
அமர்ந்து கொள்கிறார்
ஆதம் காக்கா[1] !

காக்கா[1] - மூத்த சகோதரன். வயதில் மூத்தவர்களை மரியாதையாக காக்கா என்றே இப்பகுதி முஸ்லிம்கள் அழைப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.

பொந்தில் இருந்து
புறப்பட் டாங்கொரு
நண்டு, நடந்து
நடந்து திரிந்தது !
கடற்கரை மணலில்
களிப்போடு பிள்ளைகள்
வீடுகள் கட்டினர் விளையாட்டாகவே
மணல்வீ டொன்றைக் கட்டிய பிள்ளை
மகிழ்ந்தது பூவாய்
மலர்ந்து சிரித்தது !

இடையில் வந்த
இன்னொரு பிள்ளை
எட்டி உதைத்து மிதித்துச் சரித்தது

அழுதது பிள்ளை
அழிந்தது வீடென
விழுந்து புரண்டு
விம்மி அழுதது !

மழையொன்றடித்தது மனசில்
நனைந்தார் காக்கா !
பின்னர்-
விழிகளை விலக்கி
சுழியினில் வைத்தார்

ஆழியைப் பார்த்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதம் காக்கா
ஏனோ சட்டென
எழுந்து நடந்தார்

பீடியைப் புகைத்தார்
பின்னால் கைகளைப் பின்னிய படியே
நடந்து, அலைகளை
அடைந்து.., திரும்பி
மீளவும் வந்து
அமர்ந்தார் அவரே !

ஆழிப் பேரலை அனர்த்தம்
நினைவாய்
வேதனை தரவே
விழிகள் பனித்தன !

அழகுக் குள்தான்
ஆபத் ததிகமோ ?
பிழைகள் நடந்ததோ பேரலை பொங்க ?

கொந்தளிப் பென்று கொடூரம் புரிந்த
அந்தக் கடல்தான்
இந்தக் கடலா ?
எண்ணிப் பார்த்தார் இதயம் வலித்தது

இந்தப் பூனையும் குடிக்குமா பால்என
எண்ணும் படியாய்
இருந்தது கடலும் !

கொந்தளிப் பென்று
கொடூரம் புரிந்த
அந்தக் கடல்தான் இந்தக் கடலா ?

ஒருசிறு பொழுது...!
ஊரே உருண்டது
கடலலை பாய்ந்து காவு கொண்டது,
உறவுகள் பிரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடமைகள் உடைய
உரித்துகள் அகல
கடலலை பாய்ந்து காவு கொண்டது,

அடுக்கடுக்காக மையத்துக்கள்[2]
அந்த ஊரெலாம்
நிறைந்து கிடந்தது !
எடுக்கக் கழுவ கபுறினுள்[3] வைக்க
எவரும் இலாத
நிலையும் இருந்தது !

அழிந்தன உயிர்கள்
அழிந்தன பொருட்கள்
அலைந்தனர் மக்கள்
அகதியாய்த் தெருவில்

மரண வீடுகள்
இருந்ததா ?
இல்லையே...!
மரணம் இருந்தது
இருப்பிடம் இல்லையே !

கடலலை பாய்ந்து காவு கொண்டது !

மனைவியைத் தேடி
பிள்ளையைத் தேடி
தினந்தினம் அலைந்தார்
ஆதம் காக்கா !
மனைவியை ஒருநாள்
சடலமாய்க் கண்டார்..!
மறுநாள்.., பிள்ளைகள்
ஒருவரை ஒருவர்
தழுவிய வாறு
மரணித் திருந்ததை
உறுதிப் படுத்தினார் !

பேரலை புரிந்த கொடுமையை நினைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமூச் செறிந்தார்
ஆதம் காக்கா !

பிள்ளைகள் இருவரும்
மனைவியும் சேர்ந்து
முன்னால் வந்து, நின்றனர் நிழலாய் !
உள்ளம் கனத்து
உடலும் நடுங்க
ஒருகணம் அவரே
தன்னையும் மறந்து
பொருமினார், அழுதார், பூமியில் புரண்டார் !

மையத்து' உயிரற்ற சடலம்

கபுறு' புதைகுழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.

மனைவி யவள் நினைவுடனே
மக்களுமே சேரக்
கனத்த தவர் நெஞ்சமெலாம்
கலங்கித் தான் போனார்
எனையும் ஏன் எடுக்கவில்லை
இவர்களுடன் சேர்த்தே !
எனஅழுது மனம் வெதும்பி
கடலினையே கேட்டார் !

இல்வாழ்வில் அவரோடு
இணைந் திருந்த பெண்ணாள்
இல்லாமல் போனாளே
எண்ணுகின்ற போதே
இல்லையினி வாழ்வென்று
ஏங்கித்தான் போனார்
எல்லாமே அவள் தானே
இயங்க வைத்த பாதி !

"இஞ்ச மஃசூறா"
என்றவளும் அவரை
முந்திப் பிறந்தவளின்
பெயர் சொல்லி அழைப்பாள்
"சீ "யென்று ஒரு நாளும்
சொல்லியவ ளில்லை
தேவையெதோ அவருக்காய்
தெரிந்தோடிச் செய்வாள் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி யவள் நினைவுவர
மனங் கசிந்து போனார்
அழகியவள், குறிஞ்சி மலர் !
அரிதான பெண் தான் !

குடமெடுத்து நீர் மொண்டு
கொண்டு வந்த போதே
அழகியவள் தனக் கென்றே
அவர் உறுதி செய்தார்

பலர் அவளில் கண்வைத்துப்
பார்த் திருந்த போதும்
முறைமாப் பிள்ளைகள்
முன் நின்ற போதும்
உழைப்பாளி காக்காவே
என்றறிந்து கொண்டே
தடையின்றிப் பெண்தரவே
தாரமென ஏற்றார் !

முப்பத்து மூன்றாண்டு
முழுவதுமாய்ச் சேர்ந்து
அர்ப்பணித்து அவரோடு
அவள் வாழ்ந்த வாழ்வு
இப்பொழுதும் நெஞ்ச மெலாம்
இனிக்கிறது, ஆயின்
விட்டு விட்டுச் சென்றாளே
முந்தியென நொந்து
விம்மியது அவர் மனசு
விழிநீரைச் சொரிந்தே !

உறங்குதற்கு முன்னாலே
ஒருபொழுதைத் தெரிந்து
பிரச்சனைகள் குடும்ப சுமை
பேசவென வருவாள்
வட்டாவைக் கொண்டு வந்து
விறாந்தையிலே வைத்து
வெற்றிலையும் மடித்து அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினயமுடன் தருவாள் !

சுனாமி வந்து அழிப்பதற்கு
ஒரு வாரம் முன்னால்,
மனைவி யவள் அருகிருந்து
மனு ஒன்றை வைத்தாள் !

"வயசேறிப் பெய்த்து ஒங்குட
மஃசூறாப் புள்ள
பெரிய புள்ள யாகி இப்ப
வரிசங்கள் அஞ்சி"

மணம் முடித்துச் சில வருடம்
மழலை இன்றி இருந்து
மலடர் என ஊரார்கள்
பழித்துரைக்கக் கேட்டு

நேர்ச்சை[4] வைத்துப் பள்ளிக்கு[5]
நிய்யத்தும்[6] ஆக்கி
பெற்றெடுத்த பிள்ளையவள்
மஃசூறாக் கண்ணே !

சீனிமா[7] வறுத்தெடுத்துப்
பணியாரம்[8] சுட்டு
ஆட்களினை அல்லயலில்
அழைத் தெடுத்துக் கொண்டு
மாப்பிள்ளை கேட்டுப் போய்
மோதிரமும் போட்டு
நிச்சயமும் செய்து வைத்த
நினைவுகளை மீட்டார்

இளையவளோர் இளையநிலா
உம்மாவின் சாயல்
குறுநகையோ(டு) எப்பொழுதும்
குறிப்பறிந்து ஓடி

பணிவிடைகள் செய்து தரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமிகு பிள்ளை
சுறுசுறுப்பாய் இயங்கு மவள்
வாப்பாவின் செல்லம்

முப்பது ஜூஸு[9] வினையும்
முழுவதுமாய் ஓதி
தலைப்பாத்திஹா[10] வுமவள்
சிறுவயதில் முடித்தாள்
படிப்பினிலும் சிறப்பான
முடிவுகளே பெற்றாள்
நினைவலையில் அவள் மிதக்க
நிலைகுலைந்தார் காக்கா

சுழிவந்து அழிப்பதற்கு
இருமாதம் முன்னால்
பிரிவறிஞ்சாள்[11] பிள்ளையென
அறிவித்தல் வரவே
பள்ளிக்கு[12] ஓடிப்போய்க்
கூட்டி வந்து அவளை
உள்ளறையில் இருப்பாட்டிச்
சீர் செய்தாள் உம்மா

அல்லயலில் உள்ளவர்கள்
ஆலாத்தி[13] எடுத்து
குலவையிட்டு[14] வெடிச்சுட்டு[15]
கொண்டாடி மகிழ்ந்து
கோழிமுட்டை பிள்ளைக்குக்

கொண்டு வந்து கொடுத்து
பிட்டவித்து நல்லெண்ணெய்
புரட்டி அதை எடுத்து
ஒத்தடமும் கொடுத்ததனை
உளம் நினைக்க அழுதார்

அழுதழுது விழிக ளவை
குளமாகிப் போக
விழுந்து அவர் மணலினிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறைத்தபடி கிடந்தார்
இழந்திட்டார் உணர்வுகளை
இயலவில்லை: காக்கா
கடல் மணலில் கால்நீட்டிக்
கண்ணயர்ந்து போனார்.

நேர்ச்சை நேர்த்திக்கடன்
பள்ளி பள்ளிவாசல் - முஸ்லீம்கள் தொழும் இடம்
நிய்யத்து நேர்த்திக்கடன் வைத்து பாற்சோறு ஆக்குதல்
சீனிமா - இனிப்பு தீன் பண்டம்
பணியாரம் பலகாரம்
முப்பது ஜுஸ் - திருக்குர்ஆனிலுள்ள முப்பது அத்தியாயங்கள்
தலைப்பாத்திஹா - பாத்திமா நாயகியைப் புகழ்ந்துபாடப்பட்ட அரபுத் தமிழ் காவியம்.
பிரிவறிதல் - பருவமடைதல்
பள்ளி - பாடசாலை
ஆலாத்தி - ஆரத்தி
குலவை - பெண்கள் நாக்கை மடித்து மங்கள ஒலி எழுப்புதல்
வெடிச்சுடுதல் - பட்டாசு கொளுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.

அலையொன் றடித்து
அவரை நனைத்தது
விழித்தார் காக்கா !

பீடியொன்றின் தேவை இருந்தது
வார்ப்பை[16] நோக்கி
கையும் நீண்டது,
பீடியை தேடி விரல்கள் துழாவின !

இழுத்தார் காக்கா பீடியைப் புகைத்தே
இழந்த உணர்வே
மீண்டதாய் உணர்ந்தார் !

இன்னும் இன்னும் சுனாமியின் அழிவு
நெஞ்சிற் பதிந்து
நினைவைத் துளைத்தது !

இல்லிடம் இல்லா திருப்பவர் இன்னும்
அல்லற் படுகிற
அவலம் தீர்ந்ததா ?

மந்திரி எம்பி
என்று பலரும்
வந்து பார்த்து
வாக்குரை தந்தார் !

காற்றில் போன வாக்குகள் அவையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிய மானதா?
கவலை தீர்ந்ததா ?

உள்ளூர் வெளியூர் நிறுவன மெல்லாம்
உதவி புரிந்தன
உண்மைதான் ஆயின்
இல்லா தவர்களும்
இழந்தவர் களுமா
எல்லா வற்றையும் பெற்றெடுத் தார்கள் !

நெத்தலிக் கென்று போட்ட இரையை
சுறாக்கள் வந்து
சுருட்டிக் கொண்டதாய்
கட்டிட மிருந்தோர்
தொழில் இழக் காதோர்
கடலே எதுவெனக் காணா தவர்கள்
பெற்றெடுத் தார்கள்
பெருந்தொகை யாகவே !

கூரைத் தகடுகள்
குவிந்தன அங்கே..,
மாடி வீட்டில்
வசித்தவ ரிடத்தே !
ஏதொரு இழப்பும்
இல்லா திருந்தவர்
கூடுத லாகவே
குவித்தனர் அள்ளி !

கடலின் பக்கம் வந்தறி யாதோர்
படகை இழந்ததாய்ப்
பத்திரம் வைத்தார்
புதிது புதிதாய்ச் சங்கம் அமைத்து
பழைய எண்ணில்
பணிகள் முடித்தார் !

பூரணமாகவே முடிந்த வீடுகள்
காரணமின்றிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடப் பட்டன
ஏனோ கட்டிய
வீடுகள், இன்னும்
இழந்தவர் கரங்களை
எட்டா திருந்தன !

ஆரிடம் கேட்பார் ஆரிதைத் தருவார்
அறியா திருந்தனர்
அவ்வூர் மக்கள் !

எட்டாக் கனியவை
என்று நினைக்க
துக்கம் தொண்டையை
கட்டிக் கொண்டது !

இழந்தவர்க்(கு) இல்லம்
இல்லை யென்றாகி,
இனப்படி தான் என
எவரோ சொல்லி.
கணக்கும் போட்டுக்
காட்டிய வீட்டுத்

தொகையினை நினைத்தும்
துவண்டார் காக்கா !

மறக்க முயன்றார் சுனாமியை அவரே !
மெல்ல எழுந்து,
இருப்பிடம் செல்லவே
எண்ணி நடந்தார் !

வார்ப்பை" - உடைகளை இறுக்கிக் கொள்ள அணியும் வாரில் உள்ள பை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.

இருட்டிக் கொண்டது
கடலின் நீரை
சுருட்டிக் கொண்டுபோய்
மேக இமைகளில்
சொருகிக் கொண்டது
வானம்-
இரண்டொரு முறையது
இருமிக் கொண்டது
இடியாய்.!
அழுதும் விடலாம்
மழையாய்.!
அதற்குள் காக்கா
செல்ல முயன்றார்

"காத்து வாங்கவா
காக்கா" என்று
கேட்ட குரலை
கேட்டுத் திரும்பினார்

பதிலெதும் சொல்ல விரும்பா நிலையில்
பாஈர்த்துச் சிரித்து
பசப்பி மழுப்பினார் !

காற்று வாங்கிய
கடல்தான், ஆயின்
காற்று வாங்கிய
கடற்பரப் பிதுவா ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் பரப்புக்
குறைந்து போனது.
கற்கள் கொண்டு
கொட்டியே கடலை
வற்றச் செய்யும்
வழிவகை செய்வதால்
இயற்கை வனப்பே
சுருங்கிக் கொண்டதாய்...
உணர்ந்தார் காக்கா
உரைத்திட வில்லை !

துறைமுக வேலை தொடங்கிய தாலே
தொழிலில் இருந்து
விடுபட நேர்ந்ததும்...
வெளியேற் றங்கள்
விரைவாய் நடந்ததும்...
மீன்பிடி யாளர்
அகற்றப் பட்டதும்...

காக்கா மனதில்
காட்சியாய் விரிந்தது !

தொழிலை இழந்த துயரம் மிகுந்தது,
சுமையே வாழ்வில்
சோர்வைத் தந்தது,

பரம்பரையான மீன்பிடித் தொழிலே
சிறுசிறு தொகைக்கு
ஏலம் போனது்

பின்னால் உள்ள
பேரிழப் பெதுவென
அன்று எதையும் அறியா மீனவர்
முன்னால் பாய்ந்து நிவாரணம் பெற்றார்
தண்டயல்[17] முகாமை[18] என்று சிலரோ
முந்திக் கொண்டு
பெயர்கள் பதிந்தார் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரம் புரிந்தே தனக்குக் கிடைத்த
பங்கொடு சேர்த்து
மேலும், மேலும்,..
கூலிகள் பங்கிலும்
கைகள் நனைத்தார் !

சிலநாள்... அவர்கள்
சேட்டும் சாரனும்
புதிதாய் அணிந்து
மோட்டார் சைக்கிளில்
ஓடித் திரிந்தார் !

காக்கா முகத்தில் கவலை தெரிந்தது !
எனினும் அவரோ
இலேசாய் சிரித்தார்
எதனை நினைத்தோ ?

புல்லரை எண்ணிய
புன்சிரிப் பதுவோ ?

பகலில் மீன்களைப் பிடிக்க வென்றே
கரைவலைத் தோணி
கடலில் இறங்கும் !

கரைவலைத் தோணி மீன்பிடி யாளர்
தொழிலே இன்றித்
துரத்தப் பட்டனர் !
கடலில் செல்லும்
கரை வலைத் தோணி
கரையி லிருந்தும் அகற்றப் பட்டது !

கரைவலைத் தோணியின்
காட்சி இன்னும்
காக்கா மனதில் களிப்பைத் தந்தது !
ஊரே திரண்டு நிற்பதைப் போல
காலை வேளையில்
கடற்கரை இருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தூரி[19] கொடுக்கும் பள்ளிகள்[20] போல
காட்சி தருமே
கடற்கரை அன்று !

ஆதம் காக்கா அதனை நினைத்து
மேலே பறந்தார்
இறக்கை கட்டி !

தண்டயல்[17] தோணியைச் செலுத்துவதில் பிரதான பங்கு வகிப்பவர்
முகாமை[18] தோணி வலைச் சங்கத்தை நிரவகிப்பவர்
கந்தூரி[19] இறைவனிடம் பிரார்த்தித்து ஊரைக் கூட்டி சோறு கொடுத்தல்.
பள்ளி[20] பள்ளிவாசல் முஸ்லிம்களின் வணக்கஸ்தலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.

கரைவலை யோடு
கடலினில் இறங்கி
அலைகளி னோடு
அடிபட் டெழுந்து
படகுகள் ஓடப்
பாடிப் பாடி
கரையினில் நிற்போர்
வலையினை இழுப்பர்

"அம்பா" பாடியே
அவர்கள் தோணியை
இழுக்கும் காட்சி
நினைவில் பூத்தது !

பாடிப் பார்த்தார் பாடலைக் காக்கா
பாடப் பாட
பரவசம் நெஞ்சில் !

"ஏலேலோ ஏலேலோ
ஆடடா வல ஐயட வல
கொள்ளுங்க மாதுள
மாதுள சீருள
சீருள வேருள
வேருள வெங்காயம்
வெள்ள வெங்காயம்
வெள்ளி உறுவா
உறுவா கறுவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுவா சீரகம்
சீரகம் இஞ்சி
இஞ்சி மிளகாய்
மிளகாய் ஏலம்
ஏலேலோ ஏலேலோ
ஆடடா வல ஐயட வல"

களைப்பை மறக்க
கவலை மறக்க
தொழிலில் புதிய தெம்பு பிறக்க
இழுத்து இழுத்துப்
பாடும் பாடலில்
வேளைக் கேற்ப
வார்த்தைகள் மாறும் !

அருகில் நின்று
வலையினை இழுப்போர்
உறவு முறையில் மச்சினன் என்றால்
பாடல் மாறும்
படித்தார் காக்கா !

ஏலேலோ.... ஏலேலோ...
ஒன்ட ராத்தாவ.... பாயில...
ஏலேலோ... ஏலேலோ...
தனகிக் கொள்வார் காக்கா !
அதனை - நினைத்து நினைத்து
சிரித்தார் அவரே !

தண்டயல் தோணியில்
நின்று கொண்டே
சால்வையை எடுத்து அசைத்து அசைத்து
சைகை புரிவார் !

தரையில் நிற்கும்
முகாமை, கைகளை
அங்கும் இங்குமாய்
ஆட்டிய வாறே ஆணை இடுவார் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இழுடா இழுடா
இந்தப் பக்கம் மடியைப்[21] பார்ரா
வெடிச்சாப் போச்சு
விர்ரெனப் போகும்
வெளியே மீன்கள்"
என்றே கத்தி இழுப்பார் அவரும் !

மீன்கள் வலையில்
கூடிக் கிடந்தால்
ஊரே மகிழும், உறவினர் தெரிந்தோர்
வந்து பார்த்து
வலைமீன் கழற்றி
அன்பளிப் பாகவும் அதனைப் பெறுவர்

பங்குகள் கிடைக்கும், வலை இழுத்தோரும்
தண்டயல் முகாமை
முதலாளி மாரும்
கணக்குப் பிள்ளையும்
காசைப் பிரிப்பர் !

முழுப்பங் கென்றும் அரைப்பங் கென்றும்
முதலாளிக் கென
விசேட பங்கும்
தண்டயல் முகாமை கணக்கர் பங்கும்
கழித்தே எடுத்து
இருப்பும் வைத்தபின்
இருக்கும் பங்கையே
இழுத்தவர் பெறுவார் !

பங்குப் பிரிப்பில்
சங்கடம் அங்கும் !
எங்குதான் இல்லை
எனினும் காக்கா
நொந்தவ ரானார்
நினைவும் வரவே..!

மடி" வலையில் மீன்கள் பிடிபட்டுக் கிடக்கும் இறுதிப்பகுதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.

பொந்தில் இருந்து புறப்பட் டாங்கொரு
நண்டு நடந்து நடந்து திரிந்து
அங்கு கடலை அடைந்து இறங்கி
மீளவும்
வந்தது மேலே
கரையில் நண்டு மீண்டும் நடக்க
காத்தே இருந்த சிறுவன் அதனை
அடித்துப் பிடித்து அடக்கினான் கைக்குள் !

விழிகள் நனைய
விலகி எழுந்து
கடலைப் புதிதாய்ப்
பார்ப்பது போலவே
பார்த்தார் காக்கா

இரைகளைக் கொளுவி தூண்டிலில் இட்டு
முறையோடு
சிறுசிறு தோணிகள் கடலினில் ஓடும்
இரைதேடி
இராக்கடல் தோணி மீன்களை தேடும்
வலையோடு
கடலினில் கிடந்து: காலையில் கிடைத்தால்
கரைசேரும்

அரிக்கன் லாம்பின் சிறு சிறு வெளிச்சம்
ஆழ்கடல் மீன்பிடி
இருக்கும் கடலும் வானமாய் மாறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவொரு புதுஎழில்
சிமிட்டும் தாரகை கடலினில் தோன்றும்

சிறு விளக்கே
ஒளிரும் தாரகை விழியினை மூடும்
வழி நடுவே !

கடலினில் இந்த காட்சிகள் எங்கே
காணலையே !
படகுகள் எங்கே பார்க்கிறார் காக்கா
தோணலையே !
பெரியமீன் பிடிக்கும் ஆழ்கடல் மீன்பிடி
மறைந்ததுவே !
அழுகிறார் காக்கா எழுகிறார் மெல்ல
நடந்திடவே !

கடலை வனப்பை
தொழிலை இழப்பை
நினைக்க நினைக்க
கடலின் உப்பாய்க்
கசிந்தது கண்ணீர்

துறைமுக வேலை
தொடங்கிய தாலே
பலரும் அங்கே
பாதிப் படைந்ததை
நினைக்க நெஞ்சில்
நெருப்பே எரிந்தது

துறைமுக வேலை
தொடங்கிய வுடனே
பெறலாம் சிறிய
வேலைகள் என்றே
நம்பி இருந்தோர்
வேதனைப் பட்டனர் !
வெளியூர் இருந்து
வந்த பேர்களே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக் கென்றும் அமர்த்தப் பட்டனர் !

அமைதியைப் பெறவே
அமர்ந்த காக்கா
சுமையினை இறக்க
முடியா திருந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.

எல்லை வரைந்தது
பிள்ளை,
கடற்கரை மணலில்
முள்ளிக் கோடு !

கல்லைத் தலையில்
வைத்துக் கொண்டே,
கண்களை மூடி
எட்டி எட்டி
வைத்தது காலை !

"றைற்றா, றைற்றா
றைற்றா...!"
"இல்லை இல்லை
இல்லை
முள்ளி முள்ளி"
வெளியே வந்தது சின்னப் பிள்ளை

"றைற்றா றைற்றா
றைற்றா"
"றைற் றைற் றைற்"
எல்லாப் பழத்தையும்
வென்றது மூத்தது !

"ஒரு பழம் ரெண்டு பழம்
மூண்டு பழம்"......
அடித்தது மூத்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதது சிறிசு !

துண்டு பீடியின்
தொங்கலில் கடித்து
துப்பினார் காக்கா
"தம்" மொன் றிழுத்தார் !

எண்ணப் பறவையின்
இறக்கை ஒடிக்க
இன்னும் அவரால்
இயலவே இல்லை !

"இடமினிப் போகும்
இருக்கும் இடங்களில்
குடியேற் றங்கள்
நிகழவும் கூடும்
பெரும் பான்மைக்கே
முதலிடம் கிடைக்கும்
வழியெது மில்லை
வந்தமர்ந் திடுவர்"

என்று எவரோ அரசியல் மேடையில்
பேசிய பேச்சு
ஞாபகம் வந்தது !

"வந்தால் என்ன

வரட்டும் அவர்களும்
ஒன்றாய் இணைந்து
ஒருதாய் பெற்ற
மக்களைப் போல
வாழ்ந்தால் தப்பா
வாழ்வோம் இணைந்தே
நம்பினார் காக்கா
நல்லது என்றே !"

பக்கத்து பக்கத்து வீடுகளில் இருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசைகள் இரண்டையும்
பேசி மகிழ்ந்து
நட்புற வோடவர் விட்டுக் கொடுத்து
நல்லது கெட்டதில்
கூடிக் கதைத்து
அற்புத மாகவே உறவை வளர்த்து
அமைதிக் குடும்ப மாய்
வாழ்ந்தனர் அங்கே !

அகத்தில் மலர்ந்ததோர்
அழகுக் காட்சி

பேச்சின் தொடர்ச்சி
இரப்பராய் நீண்டு

காக்கா காதில்
மீண்டும் ஒலித்தது

காட்சி கலைந்தது !

"அடக்கப் படலாம்" நமது
அடையாளங்கள்
அகற்றப் படலாம்
நமது இருப்பே கேள்வி யாகி
ஒடுக்கப் படலாம்

நமது கலை கலாசாரங்கள்
மார்க்க அனுமதி
இல்லா தொழியலாம்

நடந்த நிகழ்வுகள்
நடந்து கொண்டிருப்பவை
இவற்றை வைத்தே
இதனைச் சொல்கிறோம்..

என்று தொடர்ந்த
அந்த உரையிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ இருப்பதாய்
உணர்ந்தார் காக்கா !

கேள்விப் பட்டவை
கண்ணால் கண்டவை
அயற் கிராமத்தார்
வயல்களி லிருந்தும்
ஓட ஓட
விரட்டப் பட்டமை

காக்கா மனதில்
படமாய் ஓட
குழம்பிப் போனார் காக்கா
அங்கே..
குந்தி இருந்தவர்
குறுகிப் போனார் !

"இலங்கைத் தாயின்
பிள்ளைகள் நாமே
இதனால்-
இணைந்து வாழ்வதை
எவர்தான் வெறுப்பர்
இனம் மதம் மொழியென
இருக்கும் நமது
தனித்துவத் தோடு
அனைவரும் இணைந்து
புரிந்துணர் வோடு
அதிகாரங்களை
சமமாய்ப் பகிர்ந்து
வாழ்வதைத் தானே
விரும்பிக் கேட்கிறோம்
தவறா தப்பா
நியாய மில்லையா?

உரத்த குரலில்
ஓங்கி ஒலித்த
உரையின் மிகுதியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவியில் நுழைந்தது !

உரையில் நியாயம் இருப்பதாகவே
உணர்ந்தார் காக்கா !
எண்ணப் பறவையின்
இறக்கை உடைக்க
ஏதொரு வழியும்
இல்லா திருந்தவர்

பீடியை எடுத்து
விரல்களில் இடுக்கி
இழுத்தார் கன்னம்
குழிவிழு மாறே !

கண்களை இமைக்குள்
ஒளித்தவ ராக
கால்களை நீட்டி
மரத்தில் சாய்ந்தார் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.

“வெள்ளாமை[22] நாளக்கி
வெட்டு றாக்கா“
வினாவின் பக்கம்
தலையைத் திருப்பி
“இல்லை“ யென்றே தலையால் சொன்னார்

கடலை விட்டு இடரே பட்டு
தொழிலே இன்றி
துயரப் பட்டு
சிலநாள் அவரே சிரமப் பட்டு
வெளியா னானார்[23], போக மிரண்டாய்
வெள்ளத் தம்பிப் போடியின்[24] வெளி[25]க்கே !
கிழக்கே கடலும் மேற்கே வயலுமாய்
இரண்டே தொழில்கள்
இருந்த இவ்வூரில்
கடலும் போக
கமம் தான் மிச்சம் !

இருக்கும் நிலமோ
எவர்க்கோ சொந்தம்
பாய்ச்சல் வடிச்சல் உள்ள நிலத்தின்
போடி மார்களோ
வெளியூர்க் காரர் !

ஏழை எளியோர்க்கு
என்று இருப்பவை
காடு வெட்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகளே தான் !

காடு வெட்டி பேமிற் எடுத்தும்
கனநாள் ஆச்சு, ஆயினு மின்னும்
பாய்ச்சலு மில்லை வடிச்சலு மில்லை
பராமரிப் போர்க்கோ
உறுதியு மில்லை !

மழையை நம்பி
முதலைப் போட்டு
அழிந்தே போனார் ஏழை எளியோர் !

ஆண்டு பலப்பல
கடந்து போயின்
அஸீஸ்துரை[26] தந்த
அந்தக் காணிகள்
சூரியன் காணாத் தாமரை போல
பாசன மின்றிப் பயனற்றுப் போயின.

அஸீஸ்துரை வழங்கிய அந்தக் காணியில்
முடிந்த வரையில்
முயன்றனர் ஊரார்
திருந்திய தாகப்
பயிரினைச் செய்ய
விரும்பிய போதும் முடியவே இல்லை !

காணிகள் நமக்குக்
கிடைத்த நாள் முதல்
பாசன வசதியும்
பெற்றே இருந்தால்
நிலையிது மாறி
நிமிர்ந்தே இருக்கலாம்...
வெளியானி லிருந்தும்
விடுபட் டிருக்கலாம்

காக்கா நெற்றியில்
கவலைக் கோடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்க மாகவே தெரிந்தன
மிகுதம் !

வெள்ளாமை வெட்டும்
வேலை இருந்தது
வெள்ளத் தம்பிப் போடியின் வெளியில் !
செல்லும் வழியில்
“தடங்கல்“ இருந்ததால்
இல்லை யென்றே செய்தி வந்தது !

அரிவி வெட்டும் மெசினே வந்து
அரித்துக் கொன்றது

வெளியான் மார்களை !

கடப்பொலி[27] இல்லை
தலப்பொலி[28] இல்லை
கதிர்கள் பொறுக்கும்
பெண்டுகள் இல்லை !

தாக்கத்தி[29] இல்லை
ஏக்கத்தி லானோம் !

ஏங்கினார் காக்கா
எழும்ப முயன்றார்
தாங்கா மனசு
தவியாய்த் தவித்தது !

வெள்ளாமை - வேளாண்மை
வெளியான் - வேளாண்மை செய்பவர்
போடி - நெற்காணி சொந்தக்காரர்
வெளி - பரந்த நெற்காணி
அஸீஸ்துரை - அறிஞர் ஏ.எம்.ஏ.அஸீஸ் இப்பகுதியின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராக இருந்து அளப்பரிய சேவையாற்றியவர்.
கடப்பொலி[27] - (கடைப்பொலி) நன்கு தூற்றாத நெற்குவியல்
தலப்பொலி[28] - (தலைப்பொலி) நன்கு தூற்றிய நெற்குவியல்
தாக்கத்தி[29] - அரிவாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.

பற்றுக் கோடாய் தந்தையின் கரத்தைப்
பற்றிக் கொண்டே
ஆங்கொரு பிள்ளை
எட்டி எட்டிக் கால்களைப் போட்டு
எண்ணி எண்ணியே
நடந்தது மணலில் !
கடற்கரை மணலில் கால்கள் புதைய
களிப்பொடு வந்த
பிள்ளைக்கு, தந்தை
அடுக் கடுக்காக அறிமுகம் செய்தார்
அலையை கடலை
அதற்குள் ளிருக்கும்
பெரும் மீன் வகையை !

மகிழ்ந்தது பிள்ளை
மலர்ந்தது மனமே..!

நல்ல வேளையாய்
வாப்பா அங்கே
சொல்லவே இல்லை
சுனாமி அடித்ததை !

பார்த்தார் காக்கா
சிரித்துக் கொண்டார் !

காக்கா மனசில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் வாப்பா!

தொப்பியொடும்
தாடியொடும்
தோளிலொரு சால்வையொடும்
அப்படியே மனக்கண்முன்
அவர் நின்றார்
அழகாக!

பச்சைவடச் சிறுவாலில்[30]
பதினாலு வயசில்
வட்டைக்குள் அப்பொழுதே
வாப்பாவொடு சென்ற
அக்காலம் நினைவி லெழ
அவர் மனசு பூத்தார் !
சித்திரமாய்த் துலங்கி வர
தெரிந்த தெலாம் சேர்த்தார்

வாரிக்கா லனையே[31]
வட்டைக்குள்[32] இறக்கி
ஏரினையே பூட்டி அதில்
இழுத் திழுத் தடித்து
சேறெல்லாம் கால் குத்திச்
சிக்குண்டு நடந்து
சீர் செய்து பதமாக்கிப்
பண் செய்த காட்சி !

பெரு வகுறன்[33] கால் வயிற்றை
முளை கொண்டு நிரப்பி,
வரவைக்கு[34] வரவை அதைக்
கொண்டு போய் இறக்கி
எறிகின்ற முளை கட்டிக்
கைப் பெட்டி, கொடுத்த
சிறுபருவ நினைவி லவர்
சிந்தையினை இழந் தார் !

குருவிகளை விரட்ட வெனக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிக்குப் பொருந்தி
ஒரு மூடை நெல் லெனவே
ஊதியமும் பேசி,
வரம்புகளில் மகிழ்வோடு
தொழிலோடு நடந்து
குரல் கம்மக் கத்தியதும்
நினைவில் வரச் சொன்னார்

டய்யோ... ஓ.. டய்யோ...
குருவி வந்த தைய்யோ..
குருவி வந்த தைய்யோ...
பாலக் கடிச்சி பதக்கடையாக்குது
டய்யோ... ஓ.. டய்யோ..

பேணிகளில்[35] கல்வைத்துக்

கயிற் றினிலே கட்டி
மூலைக்கு மூலை யதைக்
கம்பு களில் நிறுத்தி
கொடிகட்டி நூல் கட்டிக்
கொண்டு வந்து சேர்த்து
பறனி னிலே[36] கொளுவி வைத்து
படுக்கையிலும் ஆட்டி
குருவியினை விரட்டு மந்த
நினைவு வந்து காதில்
மணி யொலிக்க மணி யொலிக்க
மகிழ்ந்த தனைக் கேட்டார்

பச்சைவடச் சிறுவால் - சிவப்பு நிறத்திலான முழங்காலுக்கு கீழ் வரை மறைக்கும் காற்சட்டை ஒத்த ஒருவகை உடை
வாரிக்காலன் - எருமை
வட்டை - வயல்
பெருவகுறன் - -சாக்கு
வரவை - வயலினுள் சிறு சிறு துண்டாக பிரிக்கப்பட்ட பகுதி
பேணி தகரக்குவளை
பறன் - வயலில் தங்குவதற்காக கம்புகளால் கட்டப்பட்ட தற்காலிக இருப்பிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11.

கடலி லெழும் அலைக ளவை
கரை காண ஓடும்
கரையி லவை குலவியபின்
கடலி னையே நாடும்

ஆணலையே துரத்தி வர
பெண்ணலையும் ஓடி
கரையினிலே முத்த மிட்டுப்
பின்வந்து சேரும்

உரசல்களில் அலைக ளொன்றி
உணர்ச்சி பெறும் போது
சுவையேறிச் சுதியேறிச்
சுழியாகிப் போகும்

நிதமிவையே கடலி னிலே
நிகழ் வுற்ற போதும்
நினைவுகளில் நவ நவமாய்
கதை வந்து சேரும்

காக்கா கதையாய்
எதை நினைத் தாரோ ?
பார்த்தார் சிரித்தார்
படுத்துக் கொண்டார்

மரத்தில் முதுகைச்
சாய்த்தே இருந்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணலில் மெல்லச்
சரிந்து படுத்தார்

அக்கம் பக்கமாய்...
அங்கும் இங்குமாய்...
சற்றுத் தொலைவிலும்
சரிந்த நிலையிலும்
அரிந்து, அரிந்து...
ஆட்கள் இருந்தனர்

பற்றைக்குள் இருந்து

பாய்ந்தது எதுவோ ?
பக்கத்தில் இருந்தோர்
பதறித் துடித்தனர்
சற்றவர் தயங்கித்
தயங்கி தேடினர்

பற்றைக்குள் ளிருந்துதான்
பாய்ந்ததோ ? அன்றேல்
மரத்தில் இருந்துதான்
விழுந்து உருண்டதோ ?
தெரியவே இல்லை
தேடினர் தேடினர் !

காணவே இல்லை
கதைக்கத் தொடங்கினர்
கதை கதையாகவே
கதைத்துக் கொண்டனர்

அந்த நிகழ்வு அவரை அங்கே
வயலின் பக்கம் வளைத்துக் கொண்டது
பன்றி வயலில் பாயும் நினைவு
வந்தது, காக்கா
வயலை நினைத்தார்

வீரக் கொள்ளி[37] வெட்டி முறிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியான் மார்கள் வெளிக்கிட் டெழுந்து
ஈறல் காட்டில் இடம்பல சென்று
எடுப்பார் கொள்ளி
எடையது பெரிதாய் !

தீநா[38] போட்டு வெளிச்சம் வைத்து
தினமும் இரவில் கூ....கூ.... போட்டு
காவல் நடக்கும் கலகலப் பாக
கண்கள் மூடாக் காவல் நடக்கும்

"முறுகம்"[39] வந்து கிண்டிக் கிளறி
புரியும் நாசம்
பொறுத்திட லாமா?
வருவார் அதனால் வட்டான[40] இரவில்
அதியாரி[41] யாரும் அவரொடு வருவார்

ஒவ்வொரு வயலிலும் சோதனை இருக்கும்
ஊ... ஊ... போட்டு கத்தியே பார்ப்பார்
பறனில் விளக்குப்
பத்திட வேண்டும்
பதிலுக்கு வெளியான்
ஊ... சொல்ல வேண்டும்

பறனின் மேலே உயரக் கம்பில்
கணவா லாம்பின்[42]
வெளிச்சம் தெரியும்
கொடியேற்றப் பள்ளியின் "மினாரா"[43] போல
தெரியும் அங்கே
வட்டைக ளெல்லாம் !

வீரக் கொள்ளி பறனின் கீழே
தீநா போட்டு சிவப்பாய் எரியும்
அரண்டு அரண்டு ஊருள மக்கள்
வரவைக ளெல்லாம் வருவார் போவார்

காவல் செய்யும் கடின உழைப்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிச் சேர்ந்து செய்வதனாலே
இலேசாய்த் தெரியும்
எளிதாய்ப் போகும் !
இதனைக் காக்கா
எண்ணிப் பார்த்தார்

வீரக் கொள்ளி" வீர மரத்தின் விறகு வலிமையான விறகு
தீநா" நின்று அனலாய் எரியும் நெருப்பு
முறுகம்" - பன்றி
வட்டான" - வட்டை விதானை
அதியாரி" - வடடை விதானையின் உதவியாள
கணவா லாம்பு" - அணைந்து விடாமல் எரியும் விளக்கு
மினாரா" - வெளிச்சம் பரவும் உயர்ந்த கோபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12.

முதுகில் வலியெனச்
சொல்லவே இல்லை
முந்திக் கொண்டது
நுளம்பு !

ஊசி போட்டது,
உறிஞ்சிக் குருதியை
எடுத்துக் கொண்டது
பரிசோ திக்கவோ ?

காதில் வந்து "கிணு கிணு"த்தது
காசு கேட்டதோ
நுளம்பு.
சொறிந்தார் காக்கா
புரண்டு படுத்தார்

அழுதே விட்டது வானம்
கடலின் நீரைச் சொருகி இருந்த
மேக இமைக்குள் தூசுகள் படிய...
அழுதே விட்டது வானம்
சிறு சிறு தூறல்

எழுந்தார் காக்கா
இருப்பிடம் செல்லவே...

பரபரப் பிருந்தது இன்னும் !
பாய்ந்ததா உருண்டதா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்த தாகவே
பகர்ந்தனர் சிலபேர் !
உருண்டதாய்ச் சிலபேர்
உறுதிப் படுத்தினர் !
பற்றைக்குள் ளிருந்து
பாய்ந்ததா அன்றேல்

மரத்தில் இருந்து
விழுந்து உருண்டதா?

உருண்டது தா னெனில்
உண்மைதான் அதுதான்
அதுதான்...

வயோதிபர் ஒருவர்
முன்னால் வந்து
விளக்கம் சொன்னார் !

முன்னொரு நாளில்
நடுநிசிப் போதில்
பனங்காய் விழுந்ததாய்ச்
சத்தம் கேட்டதும்
ஓடிச் சென்று
எடுக்க முனைந்ததும்...

உருண்டு உருண்டு
பனங்காய் சென்று
பனையிலும் உருண்டு
இருந்த இடத்தில்
ஒட்டிக் கொண்டதும்

காயினை எடுக்கத்
தொடர்ந்த வயோதிபர்
"பேய்" எனக் கத்தி
வீழ்ந்து கிடந்ததும்
அங்கே
கதையாய் விரிந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீதி சிலரின்
முகத்தில் தெரிந்தது

ஓரமாய்
ஒரு மட்டையின் கீழே
பட்டுத் தெறித்த
புச்சுத் தேங்காய்
மறைந்து கிடந்து,

காக்கா செல்கையில்
பல்லைக் காட்டி
இளித்ததைக் கண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.

“மெசின் வரல்ல யாக்கும்
என்னாக்கா”
முந்திக் கேட்ட அந்த நபரே
பின்னரும்..
திரும்பும் வேளையில்
திரும்பக் கேட்டார்

ஆமாம் என்ற கருத்தில் தலையை
மேலும் கீழுமாய் அசைத்தார் காக்கா
வட்டைக்குள் மெசின் வந்து
இறங்காத காலம்
மொத்தமாய் ஆள் உழைப்பை
நம்பிய அக் காலம்
தத்தி[44] வைத்து ஆள் சேர்த்து
கதிர் அறுத்த காலம்
இப்பொழுது நினைவு வர
இவர் மகிழ்ந்து போனார்

முளக் கம்பைக்[45] கைக்கொண்டு
மோனையுமே[46] வருவார்
அளந்தளந்து பங்கு களை
ஆட்களுக்காய்ப் பிரிப்பார்
குடுதி[47] வைத்து எல்லையினை
வரையறை யே செய்து
முறை முறையாய் வெட்ட வென
வழி செய்து வைப்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டி வைத்த கதிர்ப்பிடியை
உப்பட்டி[48] யாக்கி
கட்டுகளில் சேர்த்து வைக்க
பெண்டுகளும் உதவ
பக்குவமாய் தலை யேற்றி

பாரத்தைச் சுமந்து
கொட்டாமல் சிந்தாமல்
கொண்டு வந்து சேர்ப்பார்

களவெட்டி வெளிசாக்கி[49]
இட மொன்றைத் தெரிந்து
பொருத்தத்தை வெளியானே
பலதடவை பார்த்து
அறிவிப்பார் போடியிடம்
அவர் பறனில் இருந்தே
உறுதி செய்வார்: களவெட்டி
ஊர்ஜிதமாய்ப் போகும்

தத்தி - வேளாண்மை அறுவடை செய்வோரின் அமைப்பு
முளக் கம்பு - வேளாண்மையை அளந்து கொடுப்பதற்காக உபயோகிக்கும் கம்பு
மோனை - தத்தியை முகாமை செய்பவர்
குடுதி - ஒவ்வொருவரும் வெட்ட வேண்டிய எல்லையை குறிப்பதற்காக மோனைக்காரரால் நெற்கதிர்களால் போடப்படும் முடிச்சு
உப்பட்டி - கதிர் பிடிகளின் ஒரு தொகை
களவெட்டி வெளிசாக்கி - சூடு வைக்கும் இடத்தை தெரிந்து துப்பரவாக்கி ஆயத்தப்படுத்துதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14.

காவல் நடக்கும்:
களவெட்டிக் காவல்
மந்திரம் தெரிந்தோர்
முணுமுணுப் பார்கள்
மற்றவ ரெல்லாம்
பாத்திருப் பார்கள்

துஆ[50] ஓதத் தெரிந்தோர்
உரத்தோது வார்கள்
அமர்ந் திருப் போர்கள்
ஆமீன்[51] சொல்வார்கள்
காவல் நடக்கும்
களவெட்டிக் காவல்
“வெட்டுவாயன்[52] மூலைக்கு மூல
நிப்பாட்டி வச்சா
பூதம் வராது
பொலி குடிக்காது”
நம்பினார் காக்கா
நம்பிக்கைதான் வாழ்க்கையோ நடந்தார்.

இருண்டே இருந்தது வானம்!
சிறுசிறு தூறல்
பெரிதாக வில்லை
வயலில் இருந்து, அவர்
மனம் மீள வில்லை
வாரிக்காலனை மெதுவாய் இறக்கி
வளைத்து வளைத்து சூட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதித்து
வேலைக்காரனைக்[53] கையில் எடுத்து
வெளிவரும் கதிர்களை வாட்டிப்[54] பிடித்து
பொலிக்கொடி[55] போகாமல் கவனமாய்ப் பார்த்து
கூழனைக்[56] கூட்டிக்
குவித்தெடுப் பாரே

ஆளொருவர் அவரியினில்[57]
வளம் பார்த்து நிற்க
கூழனொடு குஞ்சுவாயன்[58]
கரங்க ளெலாம் மாறி
ஏறியவர் கரங்களிலே
இடறாமல் சேர்வான

கூழனதைக் கழித்து விட
இரணமணி[59] சேர்க்க
காற்றினிலே திசை பார்த்து
தூற்றிடுவார் அங்கே

கட்டைமாறு[60] தூசுதட்டக்
காத்திருப்பாள் கீழே
விட்டுவிட்டு பொலியை அவள்
தடவிவிடு வாளே
கச்சிதமாய் : புத்துணர்வே
பெற்றதுவாய் நெல்லும்
பட்டென்று பளிச் சிடுமே
பரவசமே பார்த்தால் !

கணக்கன்[61] இனி வருவானே
அளந்தளந்து கொட்ட
லாபம்[62] அவணம்[63] எனக்
கணக்கிட்டுப் பிரிப்பான்
பெருவகுறன் நிமிர்ந் திடுவான்
வயலெல்லாம் நிற்பான்

அழகான காட்சியது
அதை எண்ணுந் தோறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந் திடுமே மனப் பூங்கா
மகிழ்ந்தாரே காக்கா

பறனினிலே உட்கார்ந்து
பார்த்திருப்பார் போடி
விதவிதமாய் சமைத்து வரும்
வெளியானின் சோறு
பகிர்ந் துண்பார், வெளியானைப்
பாராட்டிக் கொள்வார்
இடையிடையே பெண்டுகளை
இவர் தனகிக் கொள்வார்

சோத்துப் பெட்டியதன்[64]
சுவை கூடக் கூட
சேர்ந்துவரும் : கட்டுகளும்[65]
வெளியானின் பங்காய் !

குருவி மூலைக்குள்[66]
இன்னுமொரு கட்டு
விரட்டியவர் பங்காக
வந்தங்கு சேரும்
உப்பட்டி புரட்டி விடும்
பெண்டுகளுக் கென்றும்
ஒரு கட்டோ இரு கட்டோ
தருவாரே போடி

விளைச்சலிலே கணக்கிட்டு
முதலுக்கு என்றே
நாலவணம் ஏக்கருக்கு
கழித்துவிட்டுப் பிரிப்பார்
நாலிலொரு பங்குவந்து
வெளியானைச் சேரும்
நல்லதொரு வாழ்க்கையது
நினைத்தாரே காக்கா

பெறுகின்ற கூலியதன்
பெறுமானத் தாலா ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகின்ற இன்பத்தின்
அளவுகளி னாலா ?

தொழி லொன்றின்
உயர்ச்சி யெது
பெருமைதான் என்ன
வினாவொன்றை எழுப்பி, அவர்
விடை கண்டு கொண்டார்

இலயித்து, அவர் மனம் சுவைத்து
வாழ்ந்திட்ட வாழ்க்கை
விலகியதாய், விட்டு விட்டு
நழுவியதாய் உணர்ந்தாரா ?
கலங்கி விட்டார்... மனசினிலே
கவலை வர நொந்தார்
இயந்திரமாய்ப் போனதிந்த
வாழ்க்கை என வெந்தார்

இருண்டே இருந்தது
இடி இடித்தது
ஒப்பாரி வைத்தே அழுதது வானம் !


ஓடிச் சென்றே
ஒதுங்கினார் காக்கா
தகட்டுக் கூரைத் தாழ்வாரத்தே...

துஆ" பிரார்த்தனை
ஆமீன்" - இறைவனிடம் "ஏற்றுக் கொள்வாயாக" என வேண்டுவது
வெட்டுவாயன்" - மண்வெட்டி
வேலைக்காரன்" - சூடடிப்போர் கதிர்களை இழுக்கவும் வாட்டவும் உபயோகிக்கும் கொளுவக்கூடிய கம்பு
வாட்டுதல்" - நெற்கதிர்கள் களவெட்டியில் இருந்து வெளியேறாமல் வேலைக்காரனால் கொளுவி பிடித்து அடித்து நெல்மணிகளை வேறாக்கி பிரித்தல்
பொலிக்கொடி" நெற்கதிர்கள் இருக்கின்ற வைக்கோல்
கூழன்" - வைக்கோல் துகள்கள், தூசி, மண் என்பவை நிறைந்திருக்கும் நெற்குவியல்
அவரி" - மூன்று கம்புகளை வைத்து வைக்கோலினால் கட்டப்பட்டு தூற்றுவதற்காக ஏறி நிற்கும் முக்காலி
குஞ்சுவாயன்" - சிறிய கைப்பெட்டி
இரணமணி" நெல்
கட்டைமாறு" தூசி தட்டி துப்பரவு செய்வதற்காக சிறிய மிலாறுகளை வைத்து கட்டப்பட்ட ஓர் உபகரணம்
கணக்கன்" -மரக்கால்
லாபம்" - ஒன்பதுக்கு பின்னர் பத்து என்பதற்கு பதிலாக லாபம் என்றே சொல்லப்படும்
அவணம்" - முப்பது மரக்கால் சேர்ந்தால் அவணம்
சோத்துப் பெட்டி" வெளியானால் போடியாருக்காக விசேடமாக சமைத்துக் கொண்டுவரப்படும் பல கறிகள், பொரியல்களை கொண்ட உணவுப்பெட்டி
கட்டு" - உப்பட்டிகள் பல சேர்ந்த நெற்கதிர்களை சேர்த்து கட்டப்பட்டது
குருவி மூலை" குருவிகள் அதிகம் வந்து நெல் கொறித்த பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டுப்பாய் மூத்தம்மா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. தோட்டுப்பாய் விரித்த மூத்தம்மா

*தோட்டுப் பாய் விரித்தாள்*
*மூத்தம்மா...!*
*வெட்டும் கட்டும்*
*சூடடிப்புமாய் இருந்த வட்டைக்குள்*
*கதிர் பொறுக்கி*
*களவெட்டி அறுத்தும்*
*நெல்கூட்டி*
*கொண்டு வந்து*
*முடாப்பானைக் குள்ளிட்டு அவித்தாள்!*

*பதர், சுள்ளி கலவன் கட்டியெனப்*
*பிரித் தெடுத்து வீசினாள்!*
*நெல்மணிகள் சேர்த் தெடுத்து*
*துழாவிக் காய வைத்தாள்*
*கோழி காகமிவை*
*கொத்தாமல் பார்த்தாள்*
*கண்ணாடி வைத்தும்*
*ஒளிகாட்டி விரட்டினாள்!*

*பூண்போட்ட உலக்கை யினால்*
*நெல் குத்தி*
*கைக்குத் தரிசியிலே*
*இரவுணவைத் தயாரிக்க எண்ணினாள்!*

*கோழியொன்று எங்கிருந்தோ*
*குறுக்காலே பாய்ந்து வர*
*ஓடித் துரத் தினாள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாசமாப்போ" என்றும்
நறுநறுத்தாள்!

மூச்சிரைக்கத் திரும்பி வந்து
உட்கார்ந்தாள் மரத் தடியில்!
அப்போதே
ஓங்காளம் வருவது போல்
உணர்ந்து "ஓக்" என்றாள்
வாந்தி வர வில்லை..
சாய்ந்தாள் அம்மரத் தடியில்
சாய்ந்தாளே...!

"காலமாய்ப் போனாள் கிழவி" யெனக்
கதைத்தார் சில பேர்கள்
ஓலமிட் டழுதார்கள்
ஒருசில பேர்!
தானாய்த் தன் கை காலை
நம்பி வாழ்ந்த அவள்
போனாள் எனச் சிலபேர்
புலம்பி அழுதார்கள்!
பக்கத்துக் குடிசை பதறியது
பள்ளிக்கும் "வியளம்"
சொல்லி அனுப்பியது!

அப்பொழுதே தொடங்கிற்று
அடக்கும் கருமங்கள்!

கப்று வெட்ட வெனக்
கதைத்து முடிவெடுத்து
சென்றார் சிலர் சேர்ந்து
மண்வெட்டி வாளியோடு..
மஞ்சு கூட்ட வென
முன்னின்றார் சிலரங்கே!
சந்தூக்கைக் கொண்டு வரத்
துணை நின்றார் சில இளைஞர்!
கடல் நீரைக் கொண்டு வர
உடன் எழுந்தார் சில சிறுவர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிப்பாட்ட வென்றே
கூடிவந்தார் சில பெண்கள்

வெள்ளைப் புடவை, சுறுமா
பன்னீர் அத்தரென
எல்லாமே
ஒவ்வொன்றாய்ச் சேர்த் தெடுத்தார்
ஊரார்கள்!

புறப்பட்டு மையத்து
போயிற்று சந்தூக்கில்!

இத்தோடு

கடமை முடிந்த தெனக்
கலைந்து சிலர் சென்றார்கள்!
அமைதியாய்ப் போவதுதான்
ஆகுமெனச் சில பேர்கள்
மையத்தின் பின்னால்
மௌனமாய்ச் சென்றார்கள்
கலிமாவை மொழிவதுதான்
அழகென்று சில பேர்கள்
உரத்துக் கலிமாவை
ஓதியே சென்றார்கள்!

இதுவொன்றும் சொல்லாமல்
எதுவென்றும் கேளாமல்
அரசியலை ஊர்க் கதையை
அளந்தளந்து சில பேர்கள்
சிரித்துக் கதைத்த படி
பின்னாலே தொடர்ந்தார்கள்

புறப்பட்டு சந்தூக்கில்
போயிற்று மையத்து!

தோட்டுப்பாய்....!
மூத்தம்மா தொட்டளைந்த தோட்டுப்பாய்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்டு மடிந்து
கசங்கிப் போய்
சுருண்டு கிடந்த தங்கே
தேவையற்ற ஒன்றாகி!

01. தோட்டுப்பாய் - நெல் காயவைக்கப் பயன்படும் நீண்ட பாய்

02. கப்று புதைகுழி

03. மஞ்சு மையத்தை வைத்து மூடுவதற்காகப் பலகையால் செய்யப்படும் உபகரணம்

04. மையத்து உயிரற்ற சடலம்

05. சந்தூக்கு - மையத்தை தூக்கிச் செல்ல பயன்படுத்தும் பாடை

06. சுறுமா கண் இமைகளுக்கு தீட்டும் பதார்த்தம்

07. கலிமா உறுதி மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. அகலக் கண் திறந்த அடக்கத்தலம்

ஊரின் கோடியிலே
ஒதுக்குப் புறமாக
பார்க்கப் பயங்கரமாய்
பாதைகளின் குறுக்காகப்
பற்றை வளர்ந்து, காடாகி
முட்செடிகள் நீண்டிருந்த
அடக்கத் தலம்...!

உட் புகுந்து உட் புகுந்து
ஒருவாறாய்க்
கொண்டு வந்த மையத்தைக்
கீழிறக்கி...
"ஆ"வென்று வாய் பிளந்து
அமைத் திருந்த கப்றுக்குள்
இட்டார்கள்!

மண்மூடி மேடமைத்து
மீஸான் கட்டைகளைக்
குத்திய பின்
ஓதென்றார் ஒருவர்...!

"தல்கீனை ஓதுவதே
தகும்" என்றார்!
"தல்கீனா சீவனற்ற கட்டைக்கா....?
இப்பொழுது நாம் சொல்லி...
இதுகேட்டு ஏற்றெடுத்து...
இனிப்போய்ப் பதில் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுது...?
விட்டு விட்டு
குத்பாவை ஓதுங்கள்
கொண்டு வந்தோர் கேட்டிருந்து
நற்பயனைப் பெற்றிடுவர்"
என்றொருவர் கூற....!
பிரிந்தார்கள் ஜமாஅத்தார்!

தல்கீனைச் சிலர் ஓத
தாமதித்து,
குத்பாவைச் சிலர் ஓதிப்
பிரிந்தே கலைந்தார்கள்!

வெட்கித்து மையத்தில்
குத்தி யிருந்த கொத்துகளும்
இதுகண்டு
கூனிற்று, குறுகிற்று!

வானம் இருண்டு
முழங்கிற்று...!
பற்றிப் பிடித் திருந்த
ஒற்றுமை யெனும் கயிற்றை
விட்டுப் பிரிந்தவர் யார்...?
மின் வெட்டி, பளீரென்று
வெளிச்ச மிட்டுப் பார்த்து
பின் அழுதிற்று
மழையாய்... மழை... மழையாய்!

ஆ...!
அடக்கத் தலம்..
அகலக் கண் திறந்து
பார்த்து.. பின் உறங்கிற்று!

ஆரோ இவர் யாரோ?
ஆரென்றால் தான் என்ன..?
ஆராரோ வெல்லாம்
ஆடி முடித்த பின்னர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்ச்சேர வாய்த்த இடம்
பொதுப் பெயரில் "மையத்தாய்" வருபவரை
ஏற்றெடுக்கக் காத் திருக்கும்
சமபூமி உறங்கிற்று!

ஆண்ட பரம்பரையும்
அடிமையாய் வாழ்ந்தவரும்
நல்லவரும்
நல்லவராய்ப் பெயரெடுத்த
நடிகர்களும்
காசைப் புதிதாகக் கண்டவரும்
கடத்தல்களும்
முதியவரும் சிறியவரும்
நோயில் கிடந்தவரும்
நோய் தீர்க்க வந்தவரும்

தலைவர்களும் தொண்டர்களும்
அர்த்த ராத்திரியில்
குடை பிடிக்கும் அற்பர்களும்
பிரித்தவரும் சேர்த்தவரும்
என்று

எல்லோருமாய் வந்து
இடம்பிடிக்கும் மைதானம்
கொடுப்புக்குள் வந்த
சிரிப்படக்கி உறங்கிற்று!

01. மீஸான் கட்டை கப்ரில் குத்தும் கட்டை

02. தல்கீன் - மரண விசாரணையை ஞாபகமூட்டி விசாரணைக்கு எவ்வாறு விடையளிப்பது என்பதைக் கூறி ஓதப்படுவது.

03. குத்பா பிரசங்கம் - மரணத்தைப்பற்றி எச்சரிக்கை செய்யப்படும் பிரசங்கம்

04. ஜமாஅத்தார் - கூட்டத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. குடிசைக்கு வந்த குதூகலம்

குடிசைக்கு வந்த தொரு
குதூகல நாள்!

மூத்தம்மா மௌத்தாகி
மூன்றாம் நாள்
மூத்தம்மா வசித் திருந்த
குடிசைக்குக் கொண்டாட்டம்!

கார்களிலும் சொகுசான பஸ்களிலும்
எங்கிருந்தோ எவரெவரோ
உறவுமுறை கூறி
ஓடோடி வந்திருந்தார்

"கத்தம்" கொடுத்து
கடன் கழிக்க வேண்டுமென
உற்சாகத் தோடவர்கள்
உருண்டு புரண்டார்கள்!

கோழி புரியாணி
குடிசையிலே மணம் வீசி
வேலிகளைத் தாண்டி
விரைந்து பரவிற்று
ஊரெல்லாம் வாசனையை
உறுதிப் படுத்திற்று!

ஆர் இந்த மூத்தம்மா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக் குத்தரிசியிலே
இரவுணவைத் தயாரிக்க
எண்ணி அதை உண்ணாமல்
போய்ச் சேர்ந்த
மூத்தம்மா !
கனநாளாய்
ஒரு நேர உண வினையே
உண்டு கழித் திருந்த
மூத்தம்மா!

மாப்பிள்ளையோடு
மாட்டு வண்டியிலே
வந்திங்கு சேர்ந்த வளாம்!
ஊரார்-
ஒரு துண்டு நிலம்
உபயம் என அளிக்க
வேர் பிடுங்கிக் காடழித்து
வசிக்கவென இல்லிடத்தை
ஏற்படுத்திக் கொண்ட வளாம்!

மாப்பிள்ளையோடு
மனமொன்றிச் சேர்ந் திருந்து
பார்த் திருந்தோர் கண் படவே
பாசத்தைப் பிழிந்த வளாம்!

கிளியும் மொழியும் எனப்
பழகி அவள் அன்பினையே
பொழிந்து அவரோடு
பொருந்தியே வாழ்ந்த வளாம்!

இருவர் என எண்ணாமல்
ஒருவர் என நினைத்து
எது வேலை என்றாலும்
இருவருமாய் மனமொத்து
இது உனது இது எனது
என்றெதையும் பிரியாமல்
பணிபுரிந்து அவரோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந் தெதையும் செய்த வளாம்!

நோய் வந்து, மூச்சிழுத்து
போய் அவரும் பாயினிலே
சாய்ந் தொரு நாள்
ஓய்ந்து விட
தேய்ந்தவளாம் மூத்தம்மா!

கூட்டி வந்த "மகராசன்"
போட்டு விட்டுப் போய்ச் சேர
மாட்டு வண்டி அவருடைய
மருந்துக்கே கரைந்து விட
தோட்டுப் பாய் கம்போடு
தொழில் செய்து வாழ்ந்த வளாம்!

"இத்தா" இருந்த வளாம்
இரண்டொரு "நாள்"
என்றாலும் தொடராது

விட்டு விட்டு இடையினிலே
விரைந்த வளாம் வட்டைக்கு!
வயிற்றுப் பாட்டுக்கே
வழியின்றித் தவித்த வளாம்!

"எத்தனை வரிசங்கள்
இவள் வாழ்ந்தாள் அவரோடு!
இத்தா இருந்தாளா
என்ன மனுசி இவள்!"
என்று சிலர்
குத்தலாய்க் கேட்டு
குடைந்ததுவும்,
"இத்தா இருக்க
இவளுக்குத் தேவ இல்ல
வயசு போன மனுசி"
என்று சிலர் சொன்னதுவும்
கேட்டது தான் - என்றாலும்
கேளாதவள் போல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சென்றவளாம் மூத்தம்மா!*

*ஆரிந்த மூத்தம்மா...?*

*எங்கிருந்து வந்தவளோ?*
*ஏன் இவள் தான் வந்தாளோ?*
*அந்தக் கதை அறிய*
*அநேகம் பேர் முயற்சித்தார்!*

1. மௌத்து மரணம்
2. கத்தம் - மரணித்தவர்களுக்காக குர்ஆன் ஓதப்படுவது.
3. இத்தா கணவனின் மறைவையொட்டிய மனைவியின் துக்க அனுஷ்டானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. சிற்றூரில் பூத்த செய்னம்பூ!

*சிற்றூரில் பூத்த திந்தச்*
*செய்னம் பூ*
*இற்றைக்கு*
*ஏழ் பத்து ஆண்டுகளின் முன்பாக,*
*இங்கிருந்து*
*பத்து மைல் தொலை தூரப்*
*பயணிப்பில் வரு மந்தப்*
*பற்றூரில் மலர்ந்த திந்தப்*
*பாசப் பூ!*

*பிறந்ததுமே நிறைந்த தெனப்*
*பெற்றோர்கள் மகிழ்ந் தார்கள்*
*பரம்பரையின் பெயர் விளங்கப்*
*பிறந்ததிந்தப் பிள்ளையென*
*அரவணைத்துக் காத்தார்கள்*
*அழகியெனப் புகழ்ந்தார்கள்!*
*உறவினர்கள் வந்திருந்து*
*உளம் பூத்தே*
*வாழ்த்துரைத்தார்!*
*பற்றூரில் அன்றைய நாள்*
*பரவசமே!*

*பள்ளியிலே நிய்யத்தைப்*
*பகிர்ந் தார்கள்!*
*இல்லாத மிஸ்கீன்கள்*
*இடங்களையும் கணக் கெடுத்து*
*இலை போட்டு வைத்தார்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொட்டியினைச் சுட்டெடுத்து
ஆற்றோர ஆலீமை...
அழைத் தவர்கள்
ஓது வித்தார்...

காட்டு மஸ்தான் அவுலியாவின்
கபுறடிக்கு றொட்டி சில
சேர்த் தெடுத்துக் கொண்டு வந்து
தலை மாட்டில் வைத்தார்கள்
றாத்தீபும் செய்தார்கள்

எண்ணெய் வைத்து,
விளக்கேற்றி
எடுத்தந்த எண்ணெயினை
கண்களிலே ஒற்றி
கிரியைகளை செய்த பின்னர்
பிள்ளைக்கும் அப்பிப்
பிரார்த் தனையும் புரிந்தார்கள்!
றொட்டி சில பிய்த் தெறிந்து
காகத்தை வரவழைத்து
உணவளித்தும் பூரித்தார்!

பூத்திருந்த பூ நல்ல
"வங்கிசப் பூ"
போடிப் பூ
செல்வப் பூ - செய்னம் பூ
ஆதலினால் -
நாற்பதாம் நாள் வரையும்
நடந்த தங்கே கொண்டாட்டம்!

மூணாங்கால் பெண் பிள்ளை
முஸீபத்தை நீக்கி விடும்
இலங்கும் பரக்கத்தாய்
இருக்கும் இட மெல்லாம்
என்றவர்கள் எண்ணியதால்
எழுந்தோடிப் பணி செய்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் பிள்ளைச் சுன்னத்தை
பிசகின்றிச் செய்யவென
வத்திருந்தாள் மாமி, உடன்
வட்டாவைத் தழைத்த தனால் -

இந்தத் தொழிலில்
எமக்கு நிகர் யாருமில்லை
எங்கள் குலத் தொழிலே
இதுவேதான், எனத் தங்கள்
மங்காப் புகழை
தேர்ச்சியினை
மாமியவள் தன் மொழியில்
அங்கிருந் தோர்க் கெல்லாம்
அறிக்கை யிட்டுப் பணி செய்தாள்!

சுன்னத்தை முடித்து
தலை மழித்து நீராட்டி
அரை மூடி சலங்கை யென
அணிகலன்கள் தான் இட்டார்!

சாணைக் கூறை யிட
சம்பந்தம் வந்திருந்தாள்
மாம நூல் போட வென
மகிழ்வோடு காத்திருந்து
உம்மாவின் கடைத் தம்பி
ஒருமுடிச்சைப் போட்டு வைத்தார்

காது குத்துக் கலியாணம்
கல கலப்பாய் நடந்தேற
வாதுக்குப் பெண்டு களும்
வந்திருந்து குலவையிட
பாவாக்கள் பைத் ஓதி
தஹராவில் தூள் கிளப்ப
ஆலாத்தி எடுத்தார்கள்
அதைக் கொண்டே
தலை சுற்றிப் பிள்ளைக்குக்
கண்ணூறும் கழித் தார்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பூட்டுக் குள்ளே
சரிந்து படுத் திருந்த
பெரியம்பிப் போடி
பேசா தெழுந் திருந்து
நோட்ட மிட்டார் உள்ளூட்டை
கட்டளைகள் இட்ட படி
காரியங்கள் நடந்தேற
உற்சாகப் பட்டார்
உள்ளூரப் பூரித்தார்!

பச்சை உடம்போடு
படுத் திருந்த பெண்சாதி
பார்த்தாள் அவரைப்
பரவசத்தில் முகஞ் சிவந்தாள்!

பரிவோடு நன்றியினைப்
பரிமாறும் நோக்கோடு
விழிய சைத்தாள் பெண்சாதி
புரிந்ததனை ஏற்றவராய்
புன்னகைத்தே தலைய சைத்தார்
போடி பெரியம்பி !

1. நிய்யத்து நேர்ச்சை செய்து வழங்கும் பாற்சோறு
2. மிஸ்கீன்கள் - ஏழைகள்
3. ஆலிம் - கற்றறிந்தவர்
4. அவுலியா மனிதரில் சிரேஷ்டமானவர்
5. றாத்திபு பிராத்தனை- இறைநினைவு 6. வங்கிசப்பூ - வம்சப்பூ
7. மூன்றாங்கால் - மூன்றாவதாக 8. முஸீபத்து - அபசகுனம அல்லது தரித்திரம்
9. பரக்கத்து அருள் மாரி ஃ பொலிவு
10. பெண் பிள்ளை சுன்னத்து பெண் விருத்த சேதனம்
11. மாமி ஒஸ்தா மாமி - பெண் விருத்த சேதனம் செய்பவள்
12. பாவா கைப்பறை தட்டிப் பாடும் இஸ்லாமிய பாடகர்
13. தஹறா - கைப்பறை - ஒரு பக்கம் மூடப்பட்ட தட்டு வாத்தியம்
14. பைத் - பாடல்
15. வட்டாவைத்தல் - வெற்றிலைத்தட்டம் இதில் அன்பளிப்புக்களை வைத்துக் கொடுப்பது
16. சாணைக்கூறை பிறந்த பிள்ளைக்கு சாணையைக் கூறையாகக் கொடுத்து சம்பந்தி பெண்ணை மகனுக்கு அடையாளப்படுத்துவது.
17. மாம நூல் - தாயின் தம்பி கட்டும் காவல் நூல்
18. குலவை பெண்கள் நாக்கை மடித்து எழுப்பும் மங்கள ஒலி-குரவை
19. சாப்பூடு வீட்டின் ஒரு பக்கத்தில் உள்ள நீண்ட அறை
20. உள்ளூடு பிரதான உள்ளறை / படுக்கை அறை
21. ஆலத்தி ஆரத்தி
22. கண்ணூறு கண் திருஷ்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. பெருமைகள் நிறைந்த பெரியம்பி

கட கட வென வரும்
மிதியடி ஒலி யெழ
கர கர குரலொடு
வருகிற பெருமகன்

தலை முறை
தலை முறை யாகவே
போடியார்!

பரிவாரங்களின்
நடுநாயகமாய்
குடைதரு நிழ லினில்
வருகிற அன்னவர்
இடுகிற கட்டளை
எடு படு மூ ரிது!

பெரியம்பிப் போடி
பெரியவர்!
பள்ளியில் காழி
படையான் குடியின்
தலை மரைக் காயர்!

சங்கையும் மேன்மையும்
சந்ததிப் புகழும்
அங்கவர் தலைமையின்
அலங்கா ரங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியை ஆண்ட
பரம்பரைப் பெருமையும்
பள்ளியைக் கட்டிய
வரலாற்று மகிமையும்
உள்ளவர் போடியார்
உண்மையில் பக்தி மான்!

கனவினில் அவரின்
தந்தையின் தந்தை
கண்டதோர் காட்சியின் பயனாய்
அமைந்தது பள்ளி
அச்சிறு ஊரில்
அனைவரும் தொழுதிடற் கென்றே!

கனவினில் வந்த
ஹயாத்து நபியின்
கட்டளை ஏற்றவர் சென்றார்
கனவினில் கண்ட
காட்சிகள் ஒட்டி
காசான் பற்றைகள் வெட்ட
வாளொடு ஜூப்பா
பச்சை நிறத்தில்
பளீரெனத் தெரிந்தது அங்கே!

கட்டளை ஏற்று
கம்புகள் கொண்டு
கட்டினர் ஆங்கொரு பள்ளி
இப்பொழு திங்கே
இருப்பதும் அதுவே
ஹயாத்து நபியப்பா பள்ளி!

போடியார் ஹாஜி
போனவர் மக்கா
போடியின் தந்தையும் சென்றார்
ஹாஜியாய் முதலில்
ஆனவர் ஊரில்
ஆமவர் கப்பலில் சென்றார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதைப்போல்
இல்லையப் போதாம்
சொத்துகள் சுகமெலாம் துறந்து
பற்றறுத் திட்ட
பயணமே போனார்
பாலக னாகிட முனைந்து!

வழிப் பயம், கொள்ளை
மீள்தலே அரிது
என்றிருந் திட்ட அக்காலை
இறுதிப் பயணமாய்
ஏற்றவர் சென்றார்
இத்தாவில் மனைவியும் இருந்தார்!

பெரியம்பிப் போடி
பெரியவர், குடும்பப்
பெருமைகள் நிறையவே
பெற்றார்!

சொத்துகள் நில புலன்
கொண்டவர், ஆயின்
அற்புத குண நலன்
வாய்த்தார்! ஊர்
மக்களின் நட்பினை
பெற்றவர் வாழ்ந்தார் -
மிக்க
மதிப் பொடு தலைவராய்
மிளிர்ந்தார்

01. காழி பள்ளி வாசல் தலைமை நிர்வாகி
02. குடி குடும்ப அமைப்பு
03. படையான் - குடியின் பெயர்
04. மரைக்கார் - குடியின் தலைவர்
05. ஹயாத்து நபி -ஹிழ்று (அலை) அவர்கள்
06. ஜுப்பா நீண்ட அங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. அதபாய் வளர்ந்த அழகு

*கண்ணெனப் பிள்ளையை*
*காத்து வளர்ப்பதில்*
*கவனஞ் செலுத்தினர் பெற்றோர்!*

*அன்பினைச் சுரந்தாள்*
*அமுதமே பொழிந்தாள்*
*ஆபிதா தன்மகள் மீது!*

*பண்பினில் சிறந்து*
*படித்தரம் உயர்ந்த*
*பிள்ளையாய் வளர்த்திட வென்று....,*

*தன்னால் முடிந்ததை*
*தவறாமல் செய்தார்*
*தந்தையார் பெரியம்பிப் போடி!*

*வளர்ந்தது பிள்ளை*
*வசிகரத் தோடு*
*அதபாய் பிள்ளை*
*அழகாய் வளர்ந்தது*

*முப்பது ஜூஸுவும்*
*தலைப் பாத்திஹாவும்*
*யாஸீன் கிதாபும்*
*புறுதாவும் சேர்த்து*
*ஓதி முடித்தது*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக் கூடப்
படிப்பு மாத்திரம்
இல்லாமற் போனது!

படிப்பதற் கென்று
பள்ளிக ளில்லை
பாதிரி இருந்த
கிறிஸ்தவ மிஷனரி
காலை மதிய
உணவு கொடுத்து
பிள்ளைகள் சேர்த்தது!

ஏழை எளிய பிள்ளைகள்
சேர்ந்தனர்!
இரண்டொரு பிள்ளைகள்
இரண்டாம் மூன்றாம்
வகுப்பு வரையும்
படித்துக் கொண்டன!
போடிமார் பிள்ளைகள்
போகவே இல்லை!

குருவனார் வந்து
சோதித்துப் பார்த்து
கெட்டிக் காரப் பிள்ளையைத்
தேர்ந்து
பட்டினப் பள்ளியில்
கொண்டு போய்ச் சேர்த்தார்!

“இங்கிலீசு படிப்பிச்சு
எங்கிட புள்ளயள
மதம் மாத்திருவான்“
என்று ஊரார் நம்பியதாலும்

“பொம்புளப் புள்ளயள்
ஊட்டுக்கு அடக்கமா
இருக்கிற புள்ளயள்“
என்றொரு கொள்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிலைத்த தனாலும்*
*பள்ளிக் கூடப் படிப்பு நின்றது!*

*ஆதலால் -*
*ஆலிமு, மௌலவி*
*ஒஸ்தாது ஷேகு,*
*என்று பலரையும்*
*அண்டி, அணுகி*
*பிள்ளைக்குப் போடியார்*
*கல்விப் பால் ஊட்டினார்*

*பிள்ளை வளர்ந்தது*
*பெருமிதத் தோடே!*

01. அதபு - ஒழுக்கம்
02. முப்பது ஜுஸ்- அல் குர்ஆன்
03. தலைப்பாத்திஹா - பெண்கள் கற்பமுற்றிருக்கும் போது ஓதும் பாத்திமா நாயகியை புகழ்ந்து பாடிய அறபுத் தமிழ் காவியம்
04. யாஸீன் கிதாப் - குர்ஆனின் இதயமாகக் கருதப்படும் ஸூறா
05. புறுதா - இமாம் பூசரி எழுதிய நபி காவிய நூல்
06. குருவனார் - வெள்ளைக்காரக் கல்வி அதிகாரி
07. மௌலவி - சமயக் குரவர்
08. ஒஸ்தாது - ஆசிரியர்
09. ஷேகு - குரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. பருவம் பூத்த பளபளப்பு

பன்னிரு வயது
பருவ மடைந் தனள் செய்னம்!
கண்க ளிரண்டும்
துரு துரு வென்று
கன்ன மிரண்டும்
கொழுக் கட்டை யாகி
பள பள வென்று
மேனி வெளுத்து
பொங்கு மிடங்கள்
அளவாய்ப் பொங்கி
புடைக்கும் தலங்கள்
புடைத்துப் பொலிந்து
பூத்தனள் செய்னம்
புது மெரு கோடு!

சங்கதி அறிந்தாள்
சம்பந்தக் காரி
சந்தோஷப் பட்டாள்
அங்கவள் இருந்த
அல்லயல் முழுவதும்
ஆட்களைக் கூட்டி
அமர்க்களப் படுத்தினாள்!

பிட்டோடு எண்ணெய்
ஊற்றிப் பிசைந்து, கோழி
முட்டையும் சேர்த்துக்
கொண்டு போய்க் கொடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூகலப் பட்டாள்!

"காக்கா பெண்டிக்கு ஒத்தணம் குடு"
எனக்
கூப்பிட்டுச் சொன்னாள்
தன் சின்ன மகளிடம்!

சாடை மாடையாய்
சம்பந்தக் காரி
சாணைக் கூறையை
உறுதி செய்ததை
புரிந்து மகிழ்ந்தாள்
போடியார் மனைவி!

சிரித்துச் சிரித்து
சின்ன மகளார்
அரைத்த மஞ்சளை
அளவாய்த் தடவி
செய்னம்பு மேனியை
தொட்டு அளைந்து...

பிட்டும் எண்ணெயும்
பிசைந்தே இருந்த
ஒத்தண முடிச்சால்
ஒற்றி எடுக்கையில்
ஓரக்கண்ணால்
பார்த்த சம்பந்தி
பாட்டுப் படித்தாள்...!

"வட்டாப் படிக்கம்
வளைச் சிருந்து
நிறைஞ் சது போல்
எங்கிட
சந்தனப் பூ மாப்பிளைக்கு
சாஞ் சிருக்கப் பொண்ணழகு"
என்று
தனக்குத் தெரிந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் கவியை
மாற்றிப் படித்தாள்!

"அல்லாஹ் அறிய
ஆஹிறத்துப் பாம்பறிய
பள்ளி அறிய
எங்கிட
வங்கிசப் பூ ஒங்களுக்கே"

பாட்டுக்குப் பாட்டாய்
பதிலுக்கு கவியை
மாற்றிப் போட்டாள்
போடியார் மனைவி!

பாட்டும் கதையும்
பகடியுமாக
கூட்டமாய் இருந்து
கும்மாள மடித்த
பெண்டுகள் எழுந்தனர்

வந்த வேலை ஹைறாய் முடிந்ததாய்
சந்தோஷப் பட்ட
சம்பந்தக் காரி
"வரட்டா மதினி" என்ற வாறே
புறப்பட லானாள்
பெண்டுகள் சகிதம்!

இடை வழிப் பாடு வரையும் வந்து
விடை கொடுத் தனுப்பினாள்
பெரியம்பி பெண்டு!

01. காக்கா பெண்டி - மூத்த சகோதரனின் மனைவி
02. ஒத்தணம் - ஒத்தடம்
03. ஆஹிறத்து - மறுமை
04. ஹைர் - நலவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. "சுடுதண்ணி" என்ற மறு நாமம்

ஓடித் திரிந்தே
உழைக்கத் தெரிந்தவன்
போடியார் சொத்தைப்
பெருக்கத் தெரிந்தவன்..

பரம்பரைப் பெருமையில்
பவிசு பெறுபவன்
பிரித்துப் பார்க்கும்
பேதம் கொண்டவன்..,

போடியார், வெளியான்
கூலி யென்று
இருக்கும் இடத்தில்
இருக்கவே வைத்து...

கட்டளை இட்டுக்
காரிய மாற்றும்
புத்தம் புதுசு...

இருபது வயது நிரம்பிய
இளைஞன்,
இளையம்பிப் போடியின்
எச்சம் - அகமன்!

பேரும் புகழும் பணமும்
என்று
ஓடித் திரியும் சுபாவம்.. இதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிப் பேசிப் பழகுதல் சிரமம்!
எப்பொழு தெப்பொழு(து)
எது எது நடக்கும்
என்று எவரும் இயம்புதல் கடினம்!

சீறும் சினக்கும்
சில நாள் இறங்கும்
இதனால் -
கூடித் திரியும்
கூட்டாளி மார்க்குள்
"சுடுதண்ணி" என்றொரு
மறு நாமம் புழங்கும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. "மஞ்சக்குருவி" வடிவு

செய்னம்பு வீட்டில்
சிறப்புகள் முடித்து
பெண்டுகள் சகிதம்
வந்தவள்.., வீட்டு
வாசல் கடவலைக்
கடப்பதற் கிடையில்
"இஞ்ச" என்று
இழுத்தாள்... அவளின்
இனிப்புக் குரலில்!

இளையம்பிப் போடி
எட்டிப் பார்த்தார்
மலர்ந்த முகத்துடன்
மனைவிதான் நின்றாள்!

"மஞ்சக் குருவி வடிவு
மரு மகள்.
எங்கிட காக்காட
பொக்கிசம் எலவா"

என்று சொன்னவள்
இலங்கினாள் அலர்ந்து!
பின்னணி கொடுத்தனர்
பெண்டுகள் இணைந்து!

இளையம்பிப் போடி
இலேசாய்ச் சிரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்ர
அக்கச்சாப் பொக்கிசம்
அவவப் போலயோ"

என்று சீண்டினார்!

"பத்தியம் இல்ல
எங்களத் தனகாட்டி,
பின்னால பின்னால
ஒளிச்சுப் பார்த்து
எங்கிட காக்காட
கைல கால்ல உழுந்து கேட்டு..."

என்றவள் தொடங்க...
இளையம்பிப் போடி
இன்னும் எதையோ சொல்ல நினைக்க
ஓடிச் சென்று
அவரின் வாயைச்
செல்லமாய்ப் பொத்தி

"உட்டுப் போட்டு
புள்ளட அலுவலப் பாருங்க"

என்று சொன்னவள்
உள்ளே சென்றாள்

பின்னால் பார்த்து
இன்னும் இரசித்தார்
இளையம்பிப் போடி

வீட்டுக் குள்ளே சாக்குக் கட்டிலில்
புரண்டு புரண்டு
படுத்துக் கிடந்த
அகமன் இதனைக் கேட்டுக் கொண்டான்!

"மஞ்சக் குருவியா
மாம்பழக் குருவி போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவா?"
பச்சக் கிளிபோல்
பேசும் குரலா?"
எப்படி இருப்பாள்
எண்ணி யெண்ணிப்
பார்த்தான் அகமன்

கற்பனைச் சிறகைக்
கட்டிக் கொண்டான்
கட்டில் பறந்தது!

1. அக்கச்சா - சகோதரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. மருக் கொழுந்து வாசம்

எண்ணெய் மரமென்று
இருந்த தந்தத் தென்னை மரம்!

கலியாணம் காட்சிக்குக்
காய் பிடுங்கிக் காய வைத்து...

எண்ணெயினை ஊற்றி
எடுப்பதற்கு ஏற்ற படி

நல்ல பழுத் தேங்காய்
தருகின்ற தென்னை மரம்
தன்னை இழந்த தன்று!
தன் காய்களினைப் பறி கொடுத்து!

செப் பெடுத்து குலவையிட்டு
சீர் செய்து பிள்ளைக்கு
மாப் பிள்ளை
கேட்ப தெனும்
மனதோடு காய் பறித்து

ஒரு மரத்துத் தேங்காயில்
ஊற்றி வைத்த
எண் ணெயினால்
பணியாரம் வளையல்
பாகிலிட்ட சோகியென
தேனாய் இனிக்கும்
தீன் பண்டம்
செய் தெடுத்து
போய் நின்றாள்.., செய்னம்பின்
தாய் அங்கு முறையோடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையம்பி மனைவிக்கு
இரட்டிப்புச் சந்தோஷம்!
கை கால் ஓடவில்லை.
கதைத்தாள்... கல கலத்தாள்!

"மகனுக்கு வாய்த்த தொரு
மருக் கொழுந்து" என்று சொன்னாள்!
புகழ்ந்தாள் அவள் மகனை
பொருத்தத்தை விரித்துரைத்தாள்!

"புள்ளைக்குக் காணி
பூணாரம் ஊடு" என
எல்லாம் தரு வதுவாய்
இடையிடையே
கதை பேச்சில் சொல்லி வைத்தாள்..
பெண் காரி.

"இல்லாட்டி நாங்க
இல்லெண்டா சொல்லிருவம்
ஒண்டுக்குள் ஒண்டு
ஒரு நாளும் உட மாட்டம்
வய்க்கல்ல விளஞ்சத்த
வய்க்கல்ல கட்டாம"

என்றுரைத்தாள் சம்பந்தம்
எழுந்து விட்டாள் பெண் காரி!

கூட்டி வந்த பெண்டுகளைக்
கூப்பிட்டாள்!
குலவை யிடப் பணித்தாள்!

"மச்சி சொன்ன, சந்தோஷ
மறு மொழிக்கு
ஆலாத்தி எடுங்களங்கா"
அவள் சொல்ல...

சங்கோசப் பட்டிருந்த
சம்பந்தக் காரியினை
எங் கெங்கோ கை போட்டு
இழுத்தார்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கு ஆள் பிடித்து
அவளை இருப்பாட்டிச்
சிரிப்பூட்டி ஆலாத்தி எடுத்தார்கள்!

பிரியமனமில்லாமல்
பிரிந்தாள் பெண்காரி!
பெண்டுகளும் பின்னாலே
பேரணியாய் வந்தார்கள்!

அன்றைய நாள் நிகழ்வை
அப்படியே மனதிருத்தி
வந்திருந்து ஒப்புவித்தாள்
வார்த்தை யொன்றும் தவறாமல்!

சாப்பூட்டுக் கதவைச்
சாத்திவிட்டு வந்தமர்ந்து
கூப்பிட்டுச் சொன்னாள்
நடந்ததையே கணவனிடம்!

மடியினிலே சாய்ந்தபடி
இடையினிலே கை போட்டு
வாய்பார்த்தார் போடி
வார்த்தைகளை அவள் உதிர்த்தாள்!

இடையிடையே மேனியிலே
நடனமிட்ட விரல்களினைத்
தடை செய்த வாறவளே தொடர்ந்தாள் மகிழ்வோடு!

பிரகாசம் முகம் நிறைய
பெண்சாதி பேசியதை
பிரியமாய்க் கேட்டிருந்தார்
பெரியம்பி.. நிறைவோடு!

திருமணத்தின் ஏற்பாடு
குறைவின்றி நடக்கு மென
உறுதி செய்தார் பெரியம்பி
உளம் மகிழ்ந்தாள் பெண்சாதி!

01. செப்பு - திருமணம் பேசுவதற்காக விசேஷமாகச் செய்து எடுத்துச் செல்லும் தீன் பண்டம்.
02. பணியாரம் - பலகாரம்.
03. வளையல் - தீன் பண்டத்தில் ஒரு வகை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ஏர்வை வண்டி இசுமாயில்

ஏர்வைக்கு வண்டி
இழுத்து வரும்
இசுமாயில் -
பார்வைக்கு நல்ல அழகன்!
பரம்பரைத் தொழிலாக
ஏர்வைக்கு வண்டி
இழுப்பதனை ஏற்று விட்ட
ஈர்பத்து வயதான இளைஞன்!

வாப்பா மௌத்தாக
வந்தடைந்த தொழில் -
இதனை,
நேர்த்தியாய்
நேர்மையுடன், தொழில்
தேர்ச்சியுடன் செய்து வரும்
பேர்பெற்ற நல்ல
உழைப்பாளி!

ஏர்வைக்கு வண்டி
இழுப்பதொடு நில்லாது
பெரியம்பிப் போடியவர்
பிரியத்திற் குரிய வராய்
பணி விடைகள் செய்து வரும்
பாட்டாளி!

வயலில் வீட்டில் என
வந்தடையும் வேலைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் முடித்து விடும்
திறமை
சாலிஹான குணம்
சாந்தம்
நேரம் தவறாத தொழுகை
இதனாலே இசுமாயில்
பெரியம்பிப் போடியிடம்
பிரியத்தைப்
பெற்றிருந்தார் !

சின்னப் பருவத்தில்
செய்னம்புப் பிள்ளையினை
பள்ளிக் கூடத்தில்
கொண்டு போய் விடுவதையும்

ஸலவாத்துச் சொல்லி,
ஓதும் -
பள்ளி கலைந்தவுடன்
வீட்டுக்குப் பிள்ளையினை
அழைத்து வந்து சேர்ப்பதையும்
இன்னு மொரு பணியாக
ஏற்றிருந்தார் இசுமாயில்!

போடியார் பெரியம்பி
கூப்பிட்டார்
வண்டிலப் பூட்டென்றார்!
"செய்னம்புப் புள்ளைக்கு
கலியாணம் பேசிரிக்கி
சாமானச் சக்கெட்ட
வாங்கிற்று வா" வென்றார்

போடியார் மனைவியிடம்
போய்க் கேட்டு
சாமான்கள் அவள் சொல்ல
நினைவில் பதித் தெடுத்து
"இந்தா ஆ" என்று
இரைந்தார் இசுமாயில்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நடந்திற்று !
வண்டி கிளம்பிற்று!!
நினைவுகளும்
உணர்வலையாய் ஓடிற்று!

நினைவுகளில்...
சிறுமி செய்னம்பு?!

ஓதும் பள்ளிக்குப்
போகும் இடைவழியில்
கிண்ணம் பழம் கேட்டு
செய்னம்பு சிணுங்குவதும் -

மரத்தில் குதித்தேறி,
பழத்தோடு வந்தவளைப்
பரவசத்தில் ஆழ்த்துவதும்
உருவப் படமாகி
ஓடிற்று நினைவுகளில்!
குமராகி
சில நாட்கள்
கூட்டு வண்டியிலே
பயணித்த வேளைகளில்
பார்வையினைத் தாழ்த்தி அப்
பாவை அமர்ந்திருப்பாள்

இறங்கும் இடம் வந்தால்
"இஞ்ச" எனும் குரலும்
ஏறிக் கொண்டாலோ
"எடுங்க" எனும் குழைவும்
உள்ளே இருந்து வரும்

இப்பொழுதும் அக்குரல்கள் !

"இஞ்ச, எடுங்க"
எனும் குரலோசை
மெட்டெடுத்து
வந்து வந்து காற்றலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதந்து நிரம்பிற்று !

கவர்ச்சியினை வெளித் தள்ளாக்
காந்தப்பூ... செய்னம்பூ !

அவயவங்கள் மூடிநிற்கும்
அடக்கப்பூ..
அமைதியாய்ப் பேசுகின்ற
அழகுப்பூ
வார்த்தைகளை அளந்து திர்க்கும்
வடிவுப்பூ

இப்பொழுது அவர் நினைவில்
ஏன் பூத்தாள் செய்னம்பூ ?
"இந்தா ஆ" என்று
இரைந்தார் இசுமாயில்
மாடு விரைந்திற்று
இடமும் நெருங்கிற்று
நினைவுகளோ உணர்வலையாய்
ஓடிற்று !

01. ஏர்வை காணி விளைச்சலின் பின்னரே கூலி கொடுக்கப்படும் ஏற்பாட்டில் வண்டி வேலைகளைப் பொருத்தத்தில் செய்வது
02. ஸாலிஹ் - நன்னடத்தை
03. ஸலவாத்து அண்ணல் நபி மீது புகழ் மாலை
04. சாமான் சக்கட்டு பொருட்கள்
05. வண்டிலப் பூட்டுதல் - வண்டியில் மாட்டை இணைத்தல்
06. கூட்டு வண்டி - கூடாரம் அமைக்கப்பட்ட வண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. கலியாணம் பேசும் களிப்பு

*பெரியம்பி வந்திருந்தார் !*

*காழியார் அவரோடு*
*கூடிவந்த மரைக்கார் மார்*
*போடிமார் என்று பலர்!*

*மாப்பிள்ளை கேட்டு*
*முறையோடு ஆள் சேர்த்து*
*கலியாண நாள் பார்க்க*
*கதைத்து முடி வெடுக்க*
*பெரியம்பி வந்திருந்தார்!*
*பேசினார் குடி மரைக்கார்...*

*"என்னெண்டு கேட்டயளா*
*இளயம்பி*
*பெரியம்பிப் போடியார்ர*
*புள்ளைக்கு*
*மாப்புள்ள கேக்கத்தான்*
*வந்திரிக்கம்*
*படையாண்ட குடிக்குள்ள*
*மாப்புள்ள தாறயளா"*
*இது கேட்டு*
*வண்டியன் குடி மரைக்கார்*
*வாய் திறந்தார்!*

*"என்னெண்டு நாங்க*
*ஏலாங்கிற*
*கலியாணக் கூட்டு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முட குடிக்குள்ள கூடலவா"

பேசி,
நாள் பார்த்து
விராத்து பிறை 10ல்
கலியாண நாள் குறிக்க..,

வெள்ளைப் புடவை
விரித்திருக்க ..
சபைக்குச் ஸலாம் சொல்லி
மாப்பிள்ளை வந்தமர
மனம் மகிழ்ந்து,
மாமா பெரியம்பி
பரிசுப் பொருள் ஒன்றை
கைக்குள்ளே பொத்தி வைத்து
அடையாளம் தான் இட்டார்
ஆருமினிக் கேட்காமல்!

இதமாய்க் கதை பேசி
இனித்தார் சபையோர்கள் !
இனிப்பாய்த் தேநீரும்
பருகி வாழ்த் துரைத்து
துஆ ஓதி,
மாப்பிளையைத் தனித் தனியாய்
இறுகப் பிடித் தணைத்து
முஸாபஹாச் செய்தார்கள்
சிரித்து முகம் மலர்ந்து!

பெருகி வந்த உவகையுடன்
பெரியம்பி வெளிக்கிட்டார்
பெரிதும் மனம் நிறைந்து!

01. விராத்து - இஸ்லாமிய ஷஃபான் மாதம்
02. ஸலாம் - முகமன் கூறுதல்(சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக எனக் கூறல்)
03. துஆ பிரார்த்தனை
04. முஸாபஹா கைலாகு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. மாற்றி யெடுத்த மருதோண்டி

*விராத்து பிறை 09*
*விழாக்கோலம் ஊர் இன்று!*
*இரு வீட்டு விருந்து*
*இனி நாளை கலியாணம்!*

இல்லற பந்தத்தில்
இணைகின்ற ஈருடல்கள்
"அகமன் - செய்னம்பு

ஆளையாள் பாராமல்
ஆணைப் பெண் அறியாமல்
பேசாமல் புரியாமல்
பிணைகின்ற நாள் நாளை!

பெரியவர்கள் பெற்றார்கள்
உறவினர்கள்
உற்றார்கள் சேர்ந் திருந்து
பொருத்தத்தைச் சொல்லிப்
புகழ்ந் தார்கள்...

குடும்பத்தைக் குடிவழியை
கோத்திரத்தைப் பார்த்தார்கள்
விருப்பத்தை உணர்வுகளை
அறிந்தனரா? கேட்டனரா?

ஈருடல்கள் தான் சேர்க்க
இவர்கள் முயன்றனரா?
ஈருயிர்கள் என்பதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் நினைத்தனரா..?
மறந்தனரா...?

நாளை திருமண நாள்!

மாப்பிள்ளை வீட்டார்
பெண்ணுக்கு
மருதோண்டி இடுவதற்கு
ஆள் கூட்டி வருவதனை
அறிவித் திருந் தார்கள்!

மருதோண்டி மதித் தெடுக்க
மாற்றி யெடுத்து வர
உறவு முறைக் கார ரொடு
பெண் தரப்பார் கூடி வந்து
இடை வழியில் நின்றார்கள்!

வந்த தனைக் குலவையிட்டு
பெண் தரப்பார் தெரிவிக்க...
மாப்பிள்ளைத் தரப்பாரும்
வந்து நிற்கும் இடம் காட்டிக்
குலவையிட...
போட்டிக்கு இருதரப்பும்
ஒரு பாட்டம்

குலவையிட்டுக் குலவையிட்டு
குதுாகலத்தில் ஆழ்ந்தார்கள் - !

"மருதோண்டி மதிங்க ளங்கா"
என்றொருத்தி கூற
மதினிமார் மச்சிகளின்
மடிகளுக்குள் கைபோட்டு
துழாவிப் பெண் வீட்டார்
உரிந் துரிந்து பார்த்தார்கள்!

"மதிச்சாச்சி,
மதினி இவ கொசுவத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதோண்டி இஞ்சரிக்கி"
என்றொருத்தி கத்தி
இழுத்துப் பிரித் தெடுக்க

இரு தரப்பும் -
கூடிக் குலவிக்
குலவையிட்டு
ஆளுக்காள் மருதோண்டி அப்பி
வழி நெடுகச்
சிரித்துக் கதைத்த படி
அத்தர் கம கமக்கும்
மருதோண்டிச் சிமிழோடு
பெண் வீட்டை அடைந்தார்கள்!

வெட்கம் மேனி யெலாம்
விரவிப் படர்ந் திருந்த
செய்னம்பின் -
உள்ளங்கைப் பூந் தட்டைத்
தொட்டு -
மருதோண்டிப் புள்ளிகளும்
பூக்களுமாய்
இட்டே மகிழ்ந்தார்கள்!

01. மருதோண்டி மருதாணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. காவின் பதிந்த கலியாணம்

*விராத்து பிறை 10*
*திருமண நாள்!*
*காழி மரைக்காமார்*
*லெப்பை யென வந்திருந்து*
*காவின் பதிந்தார்கள்!*
*மாப்பிளையைக் கூட்டி வைத்து*
*மஹர்த் தொகையை*
*கேட்டறிந்து கொண்டார்கள்!*
*பெரியம்பி வொலி சொன்னார்*
*அரபுத் தமிழில்*
*அழகாய்ப் பதிந் தெடுத்து*
*நிறைவேற்றி வைத்தார்கள்*
*நிக்காஹை!*
*இளையம்பிப் போடி மகன்*
*அஹமது சாஹிபுக்கு*
*பெரியம்பிப் போடி மகள்*
*செய்னம்பு நாச்சியாரை*
*சபையோர்கள் சாஹிதாக*
*ஹலால் பெண் சாதியாக*

*ஆக்கி வைத்துக் கைப்பிடித்து*
*ஏற்றெடுத்துக் கொண்டீரா*
*எனக் கேட்டு*
*உறுதி பெற்று..*
*பள்ளிப் புத்தகத்தில்*
*பதிந் தெடுத்து ஒப்ப மிட்டு*
*பணி முடித்தார் லெப்பை!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை ஊர் வலத்தில்
மகிழ்ந்தார்!

பொல்லடியும் வாள் வீச்சும்
முன்னாலே கவர்ந் திழுக்க...
பின்னாலே வந்தவர்கள்
பைத் ஓதி
வான் பிளக்க..
வட்டக் குடை பிடிக்க
வந்தமைந் தார் மாப்பிள்ளை!

மண மகளின் முற்றத்தில்
மணமகனை நிறுத்தி வைத்து
வரவேற்றுப் புகழ்ந்து
“விருத்தம்“ படித்து, பின்,

கால் கழுவி, கரம் கோத்து
உள்ளூட்டுக் குள்ளே
ஒளித்தபடி மூலைக்குள்
முகம் பதித்த செய்னம்பை
கையளிப்புச் செய்தார்கள்!
வாப்பா பெரியம்பி..,
தலை தடவி மயிர் பிடித்து
ஒப்புவித்தார் அகமனிடம்!
லெப்பை முடித்து வைத்தார்!.

களிப்போடு முடிந்த தந்தக்
கலியாணம்!
அகமன் - செய்னம்பை
இணைத்த தன்று
மணச் சடங்கு!

01. லெப்பை - கிரியை நடாத்துனர்
02. காவின் - திருமணப் பதிவு
03. வொலி - மகளை மணமகனிடம் பொறுப்புக் கொடுத்தல்
04. அரபுத்தமிழ் - தமிழ் வார்த்தைகளை அரபு லிபியில் எழுதிய மொழி.
05. சாஹிதாக - சாட்சியாக
06. ஹலால் - ஆகுமான
07. நிக்காஹ் - திருமணம்
08. மஹர் - பெண்ணை அடைந்து கொள்ள மணமகனால் வழங்கப்படும் சன்மானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. மனம் பொருந்தாத மணம்!

*காலச் சர்ப்பம்*
*கழற்றிய சட்டை*
*கழிந்தன ஆண்டுகள் ஐந்து!*

*மணச் சடங்காலே*
*இணைந்தனர் இருவர்*
*மனங்கள் இணைந்திட விலையோ?*

*மணப் பொருத்தம் தான்*
*பார்த்தனர் பெரியோர்*
*மனப் பொருத் தம் யார் பார்த்தார்?*

*இத்தனை வருடம்*
*இருந்தனர் ஒன்றாய்*
*ஏன் மனம் பொருந்திட விலையோ?*

*ஒழுங்கு படுத்திய*
*திருமணம், இதனால்*
*இருமனம் இணைந்திட விலையோ?*

*பெரியோர் பார்த்துச்*
*சேர்த்த மனங்கள்*
*நிறைவோ டிருந்தது மிலையோ?*

*ஒழுங்கு படுத்திய*
*திருமண மெல்லாம்*
*உடைந்ததாய் வரலாறுளதோ?*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்துப் பேசிக்
காதலித் தவர்தம்
கலியாணம் நிலைக்கு மென் றுளதோ?

காதலித் தோர்கள்
கட்டிய பின்பு
வேறாய்ப் பிரிந்தது மிலையோ?

காரணம் எதுவோ?
கூறிட லாமோ?
பிரிந்திட முனைந் தனள் செய்னம்!

சொத்துக்கள் சேர்த்துச்
சுகம் பெற லாமோ?
நட்பினைப் பேணுதல் இலையோ?

காதல் கசிவு
என்பது மிலையோ?
கனியா திருப்பது மனமோ?

தட்டிக் கனிய
வைத்திட லாமோ?
பற்றொடு பாசமும் இலையோ?
அதட்டுவர் ஆண்கள்
அடங்குவர் பெண்கள்
அதுவா தொடர்கதை? நீதி?

ஆட்டு விப்பவர்
ஆண்களே தானோ?
ஆடிடும் பம்பரம் பெண்ணோ?

விட்டுக் கொடுப்பவர்
பெண்களே தானோ?
விடாப் பிடி யாளரோ ஆண்கள்?
அகமனின் போக்கில்
அவள் இவை கண்டாள்
ஆதலால் பிரிந்திட நின்றாள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. ஒட்ட முடியாத உடைவு!

பிள்ளையின் குடும்பப்
பிரச்சினை அறிந்து
பெரிதும் வருந்தினார்
பெரியம்பிப் போடி!

உள்ளம் அழுது
உணர்வுகள் அறுந்து
எல்லாம் இழந்ததாய்
எண்ணி ஏங்கினார்!

குடும்ப மானம்
கௌரவம் என்று
இருந்தவை அனைத்தும்
நொருங்கிப் போனதாய்
நொந்தார் போடி!

சமரசம் செய்யப்
பலமுறை முயன்றார்
இளையம்பிப் போடியை
அழைத்துக் கதைத்தார்
மரைக்கார் மாரும்
வந்து பேசினர்!

ஆயினும் எதுவும்
நடந்திட வில்லை
அகமனின் போக்கில்
மாற்றமே இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமும் பொருளுமே
வாழ்வெனக் கொண்ட
அகமன் மனைவியை
அலட்சியம் செய்தான்!

மனமது உடைந்தால்
மெழுகிட லாமா?
இனி அவர் வேண்டாம்
என்றவள் துணிந்தாள்!
பசகினைச் செய்தவள்
பிரிந்து தான்
போனாள்!

கலங்கினார் போடி
கவலையில் தோய்ந்து!
"இலங்குமென் றிருந்த
என் மகள் வாழ்வு
நிலைகுலைந் ததுவே
நிம்மதி போச்சே"

அழுதார் போடி
அவரொடு சேர்ந்து
அழுதது அழுதது
ஊரும் அழுதது!

01. பசகு மனைவியின் மீது கணவனுக்குரிய எல்லா உரிமைகளையும் மனைவியாக முன்வந்து முறித்துக்கொள்வது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. மறுமணம் பூசிய மருக்கொழுந்து

பெருமூச் செறிந்தார்
பெரியம்பிப் போடி!

வீட்டுக் குள்ளே அடைந்து கிடந்து
நாட்களைக் கடத்திய
செய்னம்பு நாச்சியைப்
பார்த்துப் பார்த்து
விழிமழை பொழிந்து...

பெருமூச் செறிந்த
பெரியம்பிப் போடி
முடிவொன் றெடுத்தார்!

"மறுமணம் புரிவது
மகளுக்கு" என்று.

ஏர்வைக்கு வண்டி
இழுத்து வருகிற
இசுமாயில் - அவரின்
நினைவுக்கு வந்தார்!

மறுமணம் குறித்து
மகளிடம் கேட்டார்
மறுத்தாள் முதலில்
செய்னம்பு நாச்சி!

குணத்தினை விடுத்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை குடும்பம்
பார்த்து முடிக்கும்
மறுமணம் எதற்கு
என்றவள் நினைத்தாள்!

இசுமாயில் என்று
எடுத்தவர் சொல்ல
இணங்கிக் கொண்டாள்!

நேர்மையும் உழைப்பும்
நேர்த்தியும் தொழுகையும்
இளமையும் அழகும்
ஒழுக்கமும் நிறைந்த
உருவமொன் றவளின்
கண்களில் தெரிய...
சம்மதம் சொன்னாள்!

பிள்ளையின் சம்மதம்
கேட்டு மகிழ்ந்து,
இசுமாயி லிடத்தும்
இணக்கம் கேட்க
விரைந்தார் போடி
வீட்டினை அடைந்தார்!
பரிதாப நிலையைக் கதையாய்ச் சொல்லி
மறுவாழ் வளிக்கும் படியவர்
வேண்டினார்!

சொத்துகள் காணி
தருவதாய்ச் சொல்லி
மறுவாழ் வளிக்க
வேண்டினார் போடி!

மறுத்தார் இசுமாயில்,
மறுவாழ் வளிப்பதில்
உறுதியாய் இருந்தவர்
சொத்துக்கள் காணியை
மறுதலித் திட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹரினைக் கொடுத்து
செய்னம்பை ஏற்கச்
சம்மதம் சொன்னார்!

மறு வாழ்வு பற்றி
ஊரெலாம் கூறி
மகிழ்ந்தார் போடி
மகிழ்ச்சியில் மிதந்தார்

ஆயினும் அவரை
குடும்பம் எதிர்த்தது
குடிவழி தடுத்தது!

“போடியார் மகளுக்குக்
கூலிக் காரனோ?
காழியார் மகளுக்கு
ஏர்வை வண்டியோ?”
கூடிக் கூடிக்
கேட்டது குடும்பம்!

இணங்கிக் கொண்ட
இரண்டு மனங்கள்
ஊரை விட்டே
போக நினைத்தன.
உள்ள சொத் தெலாம்
பள்ளிக்குக் கொடுத்து
வக்பு செய்த பின்

பள்ளிக் கூடம் அமைத்துப்
பிள்ளைகள்
ஓதவும், படிக்கவும்
உதவும் படியாய்க்
கோரிக்கை வைத்து
ஊரை விட்டே
போக நினைத்தன!

1. வக்பு - இறைவனின் பெயரில் பள்ளி வாசலுக்கு ஒப்படைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. பற்றூரில் இருந்து பயணிப்பு

பற்றூரில் இருந் தவர்கள்
பிரிந் தார்கள்! அங்கிருந்து
பத்து மைல் தொலை தூரப்
பயணிப்பில் வரு மிந்தச்
சிற்றூரை வந்தடைந்து
வாழ்ந்தார்கள்!

புறப்பட்டு, இங்கிருந்தே
போயிற்று மையத்து!

மூத்தம்மா... செய்னம்பு மூத்தம்மா
போய் அடங்கி
மூன்றாம் நாள் -
பற்றூரில் இருந்து பலர்
வந்தார்கள்!

வக்பு செய்த
சொத்துகளால் பயனடைந்த
சிலர் சேர்ந்தும் வந்திருந்து
அவளுக்காய் -
கிரியைகளும், பிரார்த்தனையும்
புரிந்தார்கள்.

மூத்தம்மா ... தோட்டுப்பாய்
மூத்தம்மா?

எங்கிருந்து வந்தாளோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் இங்கு வந்தாளோ?
என்றறிய இருந்தவர்கள்
வந்திருந்தோர் கதை கேட்டு
வியந்தார்கள்

அங்கிருந்து அவர்களுமே
அவளுக்காய்ப் பிரார்த்தித்தார்!

அங்கு வந்து சேர்ந்திருந்த
அனைவருமே ஒருங் கிணைந்து
இங்கு மொரு நிதியத்தை
ஏற்பாடு செய்தார்கள்

வக்பு செய்த
சொத்துகளால் பயனடைந்து
பட்டங்கள் பெற்றவரும்
பதவிகளில் உயர்ந்தவரும்
வந்திருந்து வழிகாட்ட
நம்பிக்கை நிதியத்தை
தாபித்துக் கொண்டார்கள்


"செய்னம்பூ நாச்சியார்
கல்விச் சகாய நிதி"
விண்ணில் படர் இருளும் விலகிற்று !
விண்மீன்கள் புடை சூழ
நிலவு மகள் உலா வந்தாள் !

குளிர் நிலவின்
ஒளி மழையில்
நனைந்திற்றே ஊரெல்லாம் !

நிலவுக்குள் ஒளி முகமாய்
நிறைந்தாளோ செய்னம்பூ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு

பிரார்த்தனை மட்டுமே எஞ்சி யிருந்தது
பேச்சு ஏனோ
அடைபட்டிருந்தது.

சொந்த வீட்டைப் பார்க்க வந்தவன்
சுற்றி வளைப்பில்
அகப்பட் டிருந்தான்.

நெஞ்சுக் குள்ளே சுவர்க் கடிகாரம்
"டிக் டிக்" கென்று
உரத் தொலி செய்தது !

எல்லைப் புறத்தில்
இருந்த தவ்வீடு,
இரண்டு இனங்ளைப் பிரித்ததோர்
வீதி !

இரண்டு இனமா...?
ஏற்க மறுத்து
மொழியின் வழியில் ஒன்றென்பாரும்

இன்பத் தமிழே மொழியென வாயினும்
இஸ்லாம் எங்கள்
வழியென் பாரும்..
இதனால் நாங்கள் -
மொழியால் இணைந்து
வழியால் தனித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு இனமென இயம்பிடு வாரும்
சுற்றி வளைப்பில்
அகப்பட் டிருந்தார் !

சொந்த வீட்டை விட்டுச் சென்று
அந்த ஊரின் மத்திய பகுதியில்
உறவினர் வீட்டில் தஞ்ச மடைந்தவன்,
சொந்த வீட்டைப் பார்க்க வந்து
சுற்றி வளைப்பில் அகப்பட் டிருந்தான்..!

எல்லை வீதி..!

முழங்கும், அதிரும்
குண்டுமாரி பொழிவது கேட்கும்,
வாகனம் உடைந்து
மல்லாந்து படுக்கும்
வீதி இரண்டாய்
வெடித்துக் கிடக்கும்..
வாகனத் தொடரணி
புழுதி கிளப்பும்..
அழுகை ஒப்பாரி
ஊரெலாம் கேட்கும்..!

எல்லை வீதி

வந்தவன் இன்று
மாட்டிக் கொண்டான்
அங்கு-
குனிந்தும் கூனியும்
முட்டுக் காலிலும்
நின்றவரோடு.. நின்றவன் பார்த்தான் !

ஆசிரியர்கள், மாணவர்
தினமும்
கூலித் தொழிலே செய்து
வாயை வயிற்றைக் கட்டிக் கொள்வோர்

வைத்தியர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களுக்கிடையில் -
உறவுப் பாலம்
அமைக்க விரும்பி
சமா தானச் சங்கம் அமைத்தோர்
என்று பலரும் -
இன, பால் வயது வேறுபாடின்றி
அமைதி காக்க என்று வந்த
அந்த நாட்டுப் படையின ராலே
அள்ளப் பட்டனர் !

சொந்த நாட்டில்
சொந்த ஊரில்
சொந்த வீட்டைப் பார்க்க வந்தவன்
அந்த நாட்டுப் படையினராலே
அள்ளப் பட்டான் !

உறுமிக் கொண்டும்
உதைத்துக் கொண்டும்
விரைந்தது வாகனம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.பாம்பை நோக்கிய பயணம்!

அடைக்கப்பட்ட வாகனத்திருந்து
கொட்டப்பட்டன
மனித மூட்டைகள்..!

கிட்ட நெருங்கி,
கீழ் வானத்தே இறங்கி நின்ற
அக்கினிப் புத்திரன்
உச்சந் தலையில்
நெருப்புச் சட்டியை
கெட்டியாய் வைத்தான் !

முட்கம்பி வேலி
முன்னும் பின்னுமாய்
காக்கிச் சீருடை,

"Line UP"
காட்டுக் கத்தல்
கட்டளை யானது !

முக்கி முனகி முண்டி யடித்து
மனித மூட்டைகள்
நிரையில் வந்தன !

பொந்தில் விழியைப்
பொருத்திய படியே
"முகமூடிப் பாம்பு" நோட்டம் இட்டது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் -
நெஞ்சுக் குழிக்குள்
சுவர்க் கடிகாரம் !

பாம்பு
தலையை ஆட்டி
விஷத்தைக் கக்குமா..?
விரலை ஆட்டி விடுதலை தருமா..?

ஞாபகம் வந்த
சூறாக்க ளெல்லாம்
ஓதி முடிந்தன..!

அஸ்மாஉல் ஹுஸ்னா..
அனைத்தையும் மனசு
உள்ளூர மொழிந்தது..!

பிள்ளைகள் பற்றியும்
மனைவி பற்றியும்
எண்ணம் எழுந்தது !

பிள்ளைகள் கதறும்
பேரொலி கேட்டது !
மனைவி-
ஒப்பாரி வைத்தழும்
காட்சி தெரிந்தது..!

"Next"
கண்கள் இறுக மூடிக் கொள்ள,
கால்கள் நடுங்க,
கம்பிக் கோலைப்
பற்றின கரங்கள் !

நடந்தான் ..
பாம்பை நோக்கிய பயணம் !

விழிகளை வலிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்து பார்க்கையில்
விரல் தான் ஆடிய
பகுதியில் நின்றான்..!

கிணற்றுள் இருந்த
பாறையை உடைத்த
நீர்ப்பீ றிடுகை ...!

தொண்டைக் குழிக்குள்,
மூச்சு மீண்டது !

தலையினை அசைத்து
விஷத்தினைக் கக்கி
பாம்பு கொத்திய பகுதியில் நின்றோர்
அடைக்கப் பட்ட வாகன மொன்றில்
அடித்து இழுத்துப் போடப் பட்டனர்

சென்றது வாகனம்...
சென்றனர் சென்றனர்...!
செல்வதறியாச் சென்றனர் அவர்கள் !
மீண்டவ ருண்டோ ..?

விரல்கள் ஆடிய பகுதிக் குள்ளே
மலையொன் றசைந்தது !
"அவங்க வர்றது தெரியுந்தானே
சொல்லலாம் இல்ல"

மலைவாய் பிளந்து ஹிந்தியில் கேட்க
ஈர்க்குச் சீருடை தமிழில் பெயர்த்தது.

இந்தக் கேள்வியை
ஆயுதம் தரித்த
அவர்களும் வந்து
அதட்டிக் கேட்டது
இப்பொழு தவனின்
நினைவுக்கு வந்தது !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதலைக் கொள்ளி
எறும்பு...,
எரிந்தது !

"வந்தால் சொல்லணும்
தெரியுந்தானே...!
வெளியேறுங்க !"

நரக வாயில் படீரெனத் திறந்து
அவர்களை
சுருட்டிக் கசக்கி
வெளியில் எறிந்தது !

• சூறா அத்தியாயம்

• அஸ்மாஉல் ஹுஸ்னா - அல்லாஹ்வின் 99 அழகிய திருநாமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. சிறகுப் பட்டை சிலுப்பிய சேவல்

சிறகுப் பட்டையை
சிலுப்பிப் பார்த்தது
சேவல் !

வேகம் நெஞ்சில் ..!
கோழியைக் குஞ்சைக்
காண விழைந்த
ஆவல் !
ஒத்துழையாமை இயக்கம் நடத்தி
உதவ மறுத்தன
கால்கள்..!

இடுப்பு முறிந்து ..,
இழுத்துக் கொள்ள
கால்கள் கெந்திக் கெந்தி
நடந்தது இருளில் !

கால்கள்
நடந்த பாதையில்
சேவல்
கண்களை மூடித்
தொடர்ந்தது பயணம் !

இரவில் தூங்கா திருந்த
பொழுதுகள்,
அமைதியை இழந்து தவித்த
உணர்வுகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டு மாரி பொழிவது
கேட்கையில்
சிறகுப் பட்டையில்
ஒளித்த குஞ்சுகள்...,

ஏக்கத்தோடு
கண்களில் குளத்தை
ஏந்திக் கொண்டு
இன்னொரு பக்கமாய்
இறக்கை விரித்துக்
குஞ்சுகள் காத்த
துணைவிப் பேடு.
இப்படி கண்களை மூடி
நடந்து செல்கையில்
காட்சிகள் விழுந்தன..!

உறவினர் இடத்தில்
ஒருமரக் கிளையில்
தங்கி யிருக்கும் கோழியும் குஞ்சும்,
தீனியை எங்கு
தேடி இருக்கும் ...?
தீனிக்கு என்னைத்
தேடி இருக்குமா..?

பிடிக்கப் பட்டேன் என்பது தெரிந்து
ஊரைக் கூட்டி
அரற்றி இருக்குமா..?
முடிந்தேன் எல்லாம்
முடிந்தது என்று
முகத்தை வெறித்து வைத்துக் கொண்டு
பேடு அங்கே உட்கார்ந் திருக்குமா..?
பராமரிப் பின்றி..
குஞ்சுகள் சேர்ந்து
வந்தவ ரோடும் சென்றவ ரோடும்
ஓடி இருக்குமா ..?
துடித்தது மனசு
தொடர்ந்தது சேவல் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. காலைத் தைத்த வேலிக்கு வைத்தமுள் !

*வேலிக் கென்று வைத்தி ருந்த*
*முள்,*
*காலைத் தைக்கும்*
*கடூரம்.. உணர்ந்தான் !*

*இருளில் நடந்து வருகிற போது*
*இவனை, இவனே*
*எண்ணிப் பார்த்தான் !*

*நாலா பக்கமும் கடலாய்ச் சூழ்ந்துள*
*இலங்கைத் தீவில்*
*இவனொரு பொதுமகன் !*

*எப்பிழை செய்தான் ?*
*எதனைக் கேட்டான் ?*
*கிழக்கில் பிறந்தான்*
*இது பிழை யாகுமா ?*

*தனிமையில்...*
*இருளில்...*
*நடந்து வருகையில்*
*நெஞ்சைத் துளைத்தன*
*கேள்வி வண்டுகள் !*

*கதிர்கள் அறுக்கும்*
*பணிக்கென வந்தவர்*
*காணி உறுதியைத்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி அலைவதேன் ?

உரிமை கேட்பவர்
மறுப்பவர்க் கிடையில்
அமைதிப் பூவை அவிழ்க்க
வந்தவர் ..,
உள்ளே நுழைந்து
உருட்டி எடுப்பதேன் ?

விடிந்தால் அவர்கள் வீட்டுக்குள் நிற்பதும்
மதில்களின் மேலே ஏறிக் குதிப்பதும்
பெண்டுகள் பிள்ளையை கண்டு நகைப்பதும்
வேலிக்கு வைத்தமுள்
காலுக்கு தைப்பதேன் ..?

பிள்ளையும் கிள்ளி
தொட்டிலும் ஆட்டி
உள்ள நிலைமையை
ஊதிக் கெடுப்பதேன் ..?

தமிழர் முஸ்லிம் சிறுபான்மைக்குள்
பிரிவினைவாத விஷவிதை வளர
உரமிட்டு, அவர்கள்
உறுதுணை யாவதேன் ..?

வேலிக்கு வைத்தமுள்,
காலுக்குத் தைப்பதேன் ..?

இங்குள
காடும் மலையும் தமக்கே யென்று,
இன்னொரு கோஷ்டி
ஆடி வருவதேன் ?

இயற்கை கூடச்
சீற்றம் கொள்வ தேன் ?
காற்றுக்கு, என்ன
மாற்றம் நடந்தது..?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளி யாய்ச்
சுழன்றடித் தெம்மவர்
உடமை களையே
உடைத்துப் போட்ட தேன் ?

அழுக்கம் தொண்டையை
அடைத்துக் கொண்டதாய்
கடலும் அடிக்கடி
கனைத்துக் கொள்வ தேன்?

வானம் முழங்கி
இடியென வெடித்து
பாட்டம் பாட்டமாய்
மழையினைப் பொழிந்து
வெள்ளமாய் நிறைந்து
துயரெனும் ஆடை
கட்டி விடுவதேன் ?

வீதி யெங்கணும்
பீதியே நிறைவ தேன்?
பார்க்கும் இடமெலாம்
பயங்கர மாவதேன் ?

இரவினில் தனிமையில்
கெந்தி கெந்தி
நடந்து வருகையில்

நெஞ்சைத் துளைத்தன
கேள்வி வண்டுகள் ...!

விழிகளைத் திறக்க
விரும்பா தவனாய்
நடந்தே வந்தான்
தனிமையில் ..
இருளில் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பூட்டி இருந்த உறவினர் வீடு

பூட்டி இருந்தது உறவினர் வீடு
ஆட்களைக் காணோம் !

குஞ்சுகள், கோழி
உறவினர் எங்கே ..?
கண்களைத் திறந்து...,
அவர்களை முதலில்
காணலாம் என்று
வந்து சேர்ந்தவன்
நொந்து தான் போனான் !

நத்தை யாகின ..!
அக்கம் பக்க
அயற்புற வீடுகள்..
எட்டிப் பார்த்து
தலையை மெல்ல
இழுத்துக் கொண்டன.
அச்சப்பட்ட தயக்கம்
அதுவா?
வெட்கப்பட்ட சுபாவத்தி னாலா?
விளங்கவே இல்லை !

விசாரித் தறிய விரும்பி
முனைந்தான் ..!
இந்த
வீட்டில் இருந்தவர்
எங்குசென்றார்கள் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியில் தெருவில்
தேடி ஓடினான் ..!
அங்கும் இங்குமாய்
அலைந்து திரிந்தான் ..!
ஆருமே இல்லை ..!

தெருவில் இறங்கி
வந்தவர் கூட
இவனைக் கண்டதும்
சட்டென மறைந்தார் ..

எவரிடம் கேட்பான் ?

பக்கத்து வீட்டுப்
படலையைத் தட்டி
உட் புகுந் தவனே
விளக்கம் கேட்டான் !

ஆயுதம் தரித்த
குழுவினர் அங்கே
அடிக்கடி வந்து
தொல்லை தந்ததை
பிடிக்கப் பட்ட
அவனைப் பற்றி
விசாரித் தறிந்ததை
கேட்டுத் தெரிந்தான் !

அவனால் -ஏதும்
தகவல் கசிந்து
அவர்களில் யாரும்
பிடிக்கப் பட்டால்
தொலைப்போ மென்று
எச்சரித்ததை
சொல்லக் கேட்டான்

அச்சப்பட்ட கோழியும்
குஞ்சும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரைவிட்டே உறவினரோடு
ஒளித்துப் போன பரிதா பத்தை
கூறக் கேட்டுக்
குமுறி அழுதான் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. எல்லை வீதி ! சொந்த வீடு !

*எஞ்சி யிருந்தது*
*பிரார்த்தனை மட்டுமே !*
*எங்குதான் செல்வான் ..?*

எல்லை வீதி, சொந்த வீடு
வந்து சேர்ந்தான்
*நடைப் பிணமாக !*

குப்பை மேடு உயர்ந் திருந்தது,
வீடு -
*அதற்குள் அமிழ்ந் திருந்தது !*
ஓட்டுத் துண்டுகள்
உடைந்து கிடந்தன ..
பொருட்கள் சிதறிப் பரந்திருந்தன !

*மனசை அடைத்த*
வெப்பசாரமும்,
வயிற்றில் மூண்ட அக்கினிப் பசியும்
வாட்டி வதைத்தன !

*கால்களை நீட்டித்*
*திண்ணையில் சாய்ந்தான் !*

பக்கத்து வீட்டுப்
*பார்வதி அக்கா*
*எப்படிக் கண்டாள்*
*எழுந்தோடி வந்தாள் !*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா தம்பி
இப்புடிக் கிடக்கா"
கண்ணீர் மல்கிக்
கசிந்து கரைந்தாள் !

"இன்னாடா தம்பி
ஒழும்பு ஒழும்பு"
என்று அவனைப் பிடித்து
எழுப்பி
உண்ணக் கொடுத்தாள் !

"கண்பட்டுப் பெய்த்திடா
தம்பி
என்னமா இருந்தம்
ஒருதாய் வகுத்துப்
புள்ளைகள் போல ..!"

பார்வதி அக்கா பலதையும்
நினைத்தாள் !
ஊரினில் இனங்களின்
உறவுகட் கிடையில்
பேதம் வளர்ந்து பிரிந்ததை எண்ணி
வேதனைப் பட்டாள்
விரிசலை நொந்தாள் !

பேரெடுத் திந்த ஊரினில் வாழ்ந்த
பெரியவர் அண்ணரின்
பேத்திஇப் பார்வதி
"பரிசாரி அண்ணன்"
பிரபலமான பெயர்!
பிள்ளைத் தாச்சியின்
நாடியைப் பிடித்து
பிள்ளை பிறக்கும் நேரம்
கணித்தவர் !
வாகடக் குறிப்பைப் பாடலாய்ப் பாடி
மருந்தும் கொடுத்தவர் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவா பகலா..?
தமிழரா முஸ்லிமா ?
எந்த வேளையில்
எவர் வந்து அழைப்பினும்
சென்று அங்கெலாம்
சேவை புரிந்தவர்
இலவசச் சேவை புரிந்த
பெருமகன் !

வண்ணக்க ராகவும் இருந்து,
கோயிலின்
வளர்ச்சிக் காகப் பணிபல
புரிந்தவர்,
வாகடம் படிக்கையில்
வரலாறும் சொன்னவர்

வண்டிக்கார முஸ்லீம்கள்
தமிழர்
ஒன்றாய்ச் சேர்ந்து
ஒற்றுமை யாகவே
காட்டினிற் சென்று
கம்புகள் வெட்டி

கோயிலைப் பள்ளியைக்
கட்டிக் கொண்டதை ...
ஒருவருக் கொருவர்
உதவி வாழ்ந்ததை
இவ்வூர் -
கோயிற் பள்ளிக் குறிப்புகள் சொல்வதாய்
அப்பொழு தவரோ அடிக்கடி சொல்வார் !

பரிசாரி அண்ணர் பிரிந்த
நாளினில்-

இறுதிக் கிரியையில்
இணைந்த மக்களில்
நிறைந்து நின்று முஸ்லிம் மக்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி அழுது கதறிய காட்சி
பதிந்தே இருந்தது பார்வதி மனதில் !

தந்தையை இழந்த
தனயர்க ளாகவும்
சொந்த இரத்த உறவின ராகவும்
அந்த மக்கள் அவரொடு கொண்ட
அன்பும் மதிப்பும்
அளவிலாப் பாசமும்
இன்றும் அவளின் நினைவுக்கு வந்தது !

பள்ளி வாசலில் கந்தூரி ஆக்க
கொள்ளி தறித்துக்
கொடுத்து மகிழ்ந்ததும்,
தாமரை இலையைத் தமிழருஞ் சேர்ந்தே
தேடி அதற்குச் சேர்த்து எடுத்ததும்..
கோயில் வைபவக் கலைவிழா நிகழ்ச்சியில்
பேதம் இன்றி,
முஸ்லிம் கலைஞரும்
கூடிக் கலந்து
குதுகலித் திருந்ததும்
பார்வதி மனதில்
பசுமையாய் இருந்தது !

இந்தத் தம்பியின் மனைவியும் அவளின்
சொந்தச் சகோதரி போலவே
இருந்தாள்
பிள்ளையின் "பெரிய பிள்ளைச்" சடங்கில்
எல்லாப் பணியிலும்
முன்னின் றுழைத்தாள் !

இப்பொழு தவளின் நினைவு வரவே
இவனிடம் கேட்டாள் !

"ஒன்ட பொஞ்சாதி
சீதேவி எங்க
என்னக் கண்டா உட்டிருவாளா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னில அவவுக்கு
சீவண்டா தம்பி"

பதிலெது மில்லை
பெருமூச் செறிந்தான்
மனைவியை நினைக்க
மனசு அதிர்ந்தது !

மனைவி.. பிள்ளைகள்..?
கூட்டிச் சென்ற உறவினர்
ஐயோ..?

எங்கெங் கெல்லாம்
அலைகின் றனரோ..?
எந்த ஊரைச் சென்றடைந் தனரோ?
அந்த ஊரில்
அவர்களுக் கோரிடம்
ஆர் கொடுத்தாரோ..?
இடமே யின்றி ..
இன்னும் இன்னும்
தவிக்கின்றனரோ ?

மனசு கலங்கி
கடலெனப் பொங்க
மழையெனக் கண்ணீர்
பொழிந்தன கண்கள் !

பார்வதி அக்கா
பாரத்தாள் அவனை..
சேர்ந்து கண்ணீர்
சிந்தி அழுதாள் !
ஊரிதில் உள்ள நிலைமைகள்
அறிவாள்
ஆதலால் -
ஒழும்புடா தம்பி "போ போ" என்றாள் !

பிரிந்து பிரிந்து குழுக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகி
ஒருவரை ஒருவர் பகையுடன் நோக்கி
இழுத்துச் சென்று "போட்டு" விடுவதை
அறிவாள் அதனால்
"போ போ" என்றாள்

இடையில் சிலநாள் இல்லா திருந்த
இவனின் முகத்தை…,
புதிதாய் வந்த குழுவினர் பார்த்துப்
பிழையாய் நினைத்தால்..?
உளவாளி என்று நினைத்துக் கொண்டு
இழுத்துச் சென்றால் ..?
பயந்தாள் பார்வதி
"போ போ" என்றாள் !

"பிரிஞ்சி பிரிஞ்சி போனதுந் தானே
காரணம் இஞ்சொரு
முடிவு வராம"
என்று மெல்ல முணுமுணுத்தவள்
"போ போ" என்று
அவசரப் படுத்தினாள்

அக்கா காட்டும் அன்பும் பரிவும்
அவனின் மனசில்
பூப்பூக்க வைத்தது !

அவளின் முகத்தை பார்த்துக் கொண்டு
அவளின் நட்பில்
கட்டுண்ட வனாய்
இருக்க நினைத்தான் !

"இருந்திர்றன் அக்கா
இருந்து இஞ்சயே
மகுத்தாப் போறன்

என்ன நான் செஞ்ச
அந்தப் படையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குழுக்களும்
என்னப் போட்டு
இப்புடி வதைக்குதே" ..!

விக்கி விம்மி
விழுந்தன வார்த்தைகள் !

அக்கறையோடு
அவனைப் பார்த்தாள் அக்கா !

தலையை அக்கா
தடவிக் கொடுத்தாள் ..!
முடிச்சை அவிழ்த்துக்
காசும் கொடுத்தாள் ..!

"சும்மா..,
உசிர ஏண்டா
வீண்பலி குடுக்கோணும்
ஓடு ஓடு" என்று விரட்டினாள் !

தட்ட முடியா
நட்புக் கட்டளை !

ஏற்றுக் கொண்டு
எழும்பி நடந்தான்
இலக்கே இன்றி
நடந்தன கால்கள் !

• மகுத்து மரணித்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. உறைந்து போய் இருந்த ஊர்

"பஸ் தரிப்பு நிலையம்"
பெயர்ப்
பலகையில் இருந்தது !
பஸ்களைக் காணோம் !
ஆட்கள் நிற்கும் அரவம் கூடக்
கேட்கவு மில்லை !

நண்பன் கபே
ஸ்ரார் ஹொட்டேல் ...
ஷண்முகா விலாஸ் ...
எல்லாக் கடைகளும் மூடி இருந்தன !

உறைந்து போய் இருந்தது
ஊர் !
பேய் அறைந்த தாய் !

விழிகளை அசைத்து
எட்டுத் திக்கிலும்
பார்வையைத் திருப்பினான் !
கண்ணுக் கெட்டிய தூரம்
வரையில் - ஒரு
காகக் கறுப்பைக்
காணவுமில்லை !

தனிமை...
எப்படிப் பயங்கரமானது ..?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று அசையும்
மெல்லிய ஒலியை
இரைச்ச லாகவே உணர்ந்தன
செவிகள் !

கட்டடங்களை நிமிர்ந்து
நோக்கையில் ..
தூண்கள் ஒவ்வொன்றும்
தோன்றின அரக்கராய் !

கிளையைப் பிரிந்த
இலையொன் றவனின்
முகத்திற் பட்டுக்
கீழே விழுந்தது !
காற்றில் வந்த கடதாசி
அவனின் -
காலிற் சிக்கிக்
கழன்று போனது !

ஏன்.. ஏன் ? ஏன்.. ஏன் ?
இரைச்சல் ? அரக்கர் ..?
இலை விழல் ..?
.. .. .. .. ?
காரண காரியத் தொடர்புள தாவென
மனசு
ஆராய்ந் தறிய
அல்லற் பட்டது !

ஏகாந்தமாக ...?
இந்த மதிய வேளையில்,
இப்படி வந்து மாட்டிக் கொள்ள,
மனசு...
ஏனேன் கேள்வியில்
குழம்பி இருந்தது !
அச்சப்பட்ட உடம்பு வியர்த்தது !

ஓடி முடித்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிலோ மீட்டர் தூரம் !

வடக்குத் திசையில்
ஒரு கிலோ மீட்டர்
ஓடி முடித்தவன் ....
வங்கி வளைவில்
வாகை நிழலில்
நின்று பார்த்தான்

கூட்டம் இருந்தது
பேச்சடி பட்டது ..!

அந்தப் பக்கம்
நேற்று,
கோழி வாங்கச் சென்ற காக்கா
ஊரை வந்து
சேர வில்லை யாம் !

இந்தப் பக்கம்
மேசன் வேலையாய் வந்த இருவர்
பணயக் கைதியாய்
பிடிபட் டிருப்பதாய்
காற்று வந்து காதில் சொன்னது !
கேட்டு மனசு
துடியாய் துடித்தது !

அப்பாவிகளும் தொழிலாளர் களும்
அடிக்கடி இப்படி
அமுங்கிப் போவதை
அகதி யாவதை
எண்ணிப் பார்த்து
மனசு துவண்டது ..!

தன்னைப் பற்றியும்
எண்ணம் எழுந்தது ..!
என்னபிழை நான் செய்திருக் கின்றேன்
இனத்தின் பெயரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர்க்குத் துன்பம்
இழைத்திருக் கின்றேன் !
எல்லை வீதியில்
இருந்தேன் என்பதா ?

முடுக்கி விட்டவர்
தடுக்கி விழாமல்
இருக்கும் இடத்தில் இருந்து கொள்ள
பாதிப்படைகிற மக்களை நினைக்க
வேதனைப் பட்டு
மேனி சுட்டது

பிரித்து வைத்தவர் யார் யார் ?
பிரிந்து நின்றவர் ..
யார்.. யார் ?
மோத விட்டவர் யார் யார் ?
மோதிக் கொண்டவர்
யார் .. யார் ..?

துளைகள் இட்டன
கேள்வி வண்டுகள் !
அருவி வெட்டின
கண்கள் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. கோழிக் காக்கா குஞ்சு முகம்மது

கோழிக் காக்கா
குஞ்சு முகம்மது
நாலுந் தெரிந்த
நல்ல மனிதர் !

வேலை யில்லை என்று சொல்லி
வீணே காலம்
கழிக்க மாட்டார்
வேலை எதையும் மிச்ச மென்று
விட்டு வைத்து
எழும்ப மாட்டார் !

புல்லும் சாகா நடத்தைக் காரர்
பொறுமை காப்பார்
தளம்ப மாட்டார் !

பிள்ளை மூன்றும்
பட்டம் பெற்று
நல்ல நிலையில் உள்ள போதும்
சும்மா இருந்து உண்ண மாட்டார்
சொன்னால் அதனைக்
கேட்க மாட்டார் !

சொத்தி இல்லை கை, கால்
அதனால்-
சக்தி உடம்பில் உள்ள
வரையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தம் நித்தம் உழைத்து
உண்ண
சித்தம் கொண்ட
சீர்மை யாளன் !

நெருப்புத் தின்று
கறுத்த மேனி

உறுதி பெற்று
உழைக்கும் நெஞ்சு
முயற்சியாளன் திறமை சாலி !

தேன்குழல்..
மஸ்கத்..
மிட்டாய் வகைகள்
செய்து விற்று வியாபாரியாகி..
ஊரில் நன்கு அறிமுகமாகி..
பிரதேச மிதற்குள்
பிரபலமாகி
பெயரொடு வாழ்ந்தார் குஞ்சு முகம்மது !

கடின வேலை ஆதலினாலே
விடுங்கள் அந்த
வேலையை என்று
பிள்ளைகள் எல்லாம் சொல்லக் கேட்டு
விட்டார் அதனை, ஆயினும் காக்கா
வேறொரு தொழிலைத் தொடங்கி கொண்டார் !

கோழி வாங்கி விற்கும்
தொழிலால்
கோழிக் காக்கா வாகிப் போனார் !

நம்பிக்கை யோடு நடந்தார் காக்கா
நல்ல பணிகள் எதிலும்
கலந்தார் !
ஊரில், மேலும் தமிழர் பகுதியில்
செல்வாக்கோடு சிறப்பாய் இருந்தார் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி வாங்கிக் கொடுப்பத னோடு
பால் பழம் வாங்கிக்
கொடுப்பதும் அவரே !
கோயிற் கடமை கிரியைகட் கெல்லாம்
தேவைப் பட்ட பொருட்களை வாங்க
காக்கா வினையே நாடிச் செல்வர் !

கலப்பில்லாத பால்
பழுதில்லாப் பழம்
மனசு விரும்பிக் கேட்டுப் பெறுவர்
மதிப்புட னிருந்தார்
கோழிக் காக்கா !

கலியாணப் பேச்சுக் கதைகளுக் குள்ளும்
கலந்து நின்று
உழைப்பவர் காக்கா !
ஊரின்- மூலை
முடுக்குகள் அறிவார்
ஆளை அறிவார் !
அவரின் குடும்ப நிலவரம் அறிவார்

லண்டன் மாப்பிள்ளை
லங்கேஸ் வரனை
தங்கேஸ் வரிக்குப்
பேசிக் கொடுத்தார் !
சாதி இழுபறி, ஆயினும் முயன்று
சாதித் திருந்தார்.. திருமணம் நடந்தது !

ஆயினும் -
காக்கா கடத்தப்பட்டார் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.மாசிலா மணி மேசன்

*மாசிலா மணி மேசன் .. !*
*மனசு நிரம்பிய*
*பாசம் உடையவன்*
*பாகுபாடுகள்*
*சிறிதும் அற்றவன் !*

*மேசன் தொழிலிலே*
*நேர்மை யானவன்*
*யாதும் ஊர் என*
*நம்பி வாழ்பவன்,*

*ஊர் இதனிலும்*
*அவன் -*
*கைபடா ததாய்*
*ஏதும் வீடுகள்*
*இல்லை யென்பதாய் ..*
*பேரும் பெற்றவன்*
*பிரபல மானவன் !*

*பழகும் விதத்தினில்*
*பண்பு சேர்ப்பவன்*
*இளகும் மனத்தினன்*
*இரக்கம் கொள்பவன்,*

*உறவு பேணலில்*
*உளத் -*
*தூய்மை காப்பவன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன
பேதப் போதையை
ஏற்க மறுப்பவன்,

மாசிலா மணி
மனந் திறந்தவன்
இவ்வூர்
மக்களுக் கெலாம்
நன்கு தெரிந்தவன் !

ஆயினும்-
பிடிபட் டிருக்கிறான்
மாசிலா மணி
அடைபட் டிருக்கிறான்
பணயக் கைதியாய் !

பிடிபட் டிருப்பவர்
இருவராம்
அதில்
இவனும் ஒருவனாம் தகவலே

அருவி வெட்டிய கண்களில்
பேராறு வந்தது
கேட்டதும் !

பள்ளியில் இவன் தோழனாய்
அவன்
படித்திருக் கிறான்
ஒரு வகுப்பிலே !
நல்ல நண்பனாய் இருந்தவன்
நட்பினில் உயர்
குன்றவன் !

பாடசாலைகள் அன்றெலாம்
பிரிந் திருக்கவே இல்லையே !
கூடிப் படித்தனர் பிள்ளைகள்
கலந்து, பேசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தனர் !

சிறுவர் மனதிலே விஷவிதை
தூவி விட்டது யார்பிழை?
இனத்தின் பெயரிலே பள்ளியை
ஏன் பிரித்தனர் ?
கொடுமையே !

வண்ணமணி ஐயா "தலைமை சேர்"
இன்னும் நினைவிலே
நிற்கிறார்,
நாகமணி ஐயாப் பண்டிதர்
நமது மனங்களை
வென்றவர்

அபுல் மாஸ்டரோ இலக்கிய
அமிர்தம் வார்த்தவர்
ஊற்றினார்
தமிழர் பண்பினை நட்பினை
தரத்தில் உயர்ந்ததாய்ப்
போற்றினார்

கல்வி தந்தவர் அன்றெலாம்
கருத்தில் ஒற்றுமை
கூட்டினார் !
நல்ல அறநெறிக் கொள்கையை
நமது நெஞ்சினில்
ஊட்டினார் !

சந்தை பிளந்தது, இன்றெலாம்
சங்கம் பிரிந்தது,
ஊரிலே !
மைதானத்தையும் வெட்டியே
எல்லை போட்டனர்
வேலியால் !

விளையாட் டாகவும் சேர்வதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்ப வில்லையோ
மேய்ப் பர்கள் !
பிரித்துப் பிரித்துத் தான்
வைக்கிறார்
சேர்த்து வைப்பதும்
நடக்குமோ..!

கேள்வி வண்டுகள் அரித்தன,
ஆழ் மனத்திலும் ஓட்டைகள்
கேவிக் கேவி
அழுகிறான் !
கூடி விட்டனர் ஊர்ச்சனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. எடுபிடிகளும் கெடுபிடிகளும்

விழிகள் மூடியே இருந்தன
வழிந்து
வடிந்தது விழி மழை !

"ஆரடிச்சவர் கூறெனு"
குழுமி நின்றவர்
கேட்கிறார்.

நீண்ட நேரம் எடுத்தது
விழி திறந்தது
பார்க் கிறான் !

கைகள் பொல் தடி
கொண்டவர்,
கண்கள் சிவந்தவர்
நிற்கிறார் !

ஒன்றிரண்டு பேர்
தெரிந்தவர்,
இன்னும் இருப்பவர்
யாரெவர் ?

தெரிந் திருந்தவர் கெடுபிடி
அரசிய லாளரின்
எடுபிடி !

விழுந்த அடியினைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லலாம்...
விளங்கிக் கொள்வரோ ..?
புரியுமோ ..?

படித் தறிந்தது,
கேட்டது,
பட்டறிந்தது,
சொல்லலாம் !

ஆணிவே ரெது கூறலாம்
அதைக் கேட்கும்
நிலையிலா உள்ளனர் ?

"சும்மா" என்றவன் கண்களை
துடைத்துக் கொள்கிறான்
நெளிகிறான் !

ஆயினும் -
மாசிலா மணி மனசினில்
மாறி மாறியே
வருகிறான் !

"மாசிலா மணி நல்லவன்
ஆள உடுங்களன்"
கேட்கிறான் !

"முஸ்லி மாடா நீ
பயந்தவன்"
முன்னால் நின்றவன்
துப்பினான் !

"கோழி வாங்கப் போனவர்
ஆளே இல்ல.. இதுவர.. !
பயந்து நாங்க உர்றதா?"

"ஒண்டுக் கிஞ்ச ரெண்டுடா
சொன்னா உன்னையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவம்"

என்ன கேட்கலாம் இன்னுமாய்
எஞ்சி யிருந்தது..
பிரார்த்தனை !

இருகை ஏந்திட உயர்ந்தது,
ஈரலித்தது உள் மனம் !
இறைவ னிடத்திலே கேட்டது
இரண்டு தரப்புக்கு மாகவே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11.வேலி போட முடியாத நட்பு

ஊருக் குள்ளே உறுமிக் கொண்டு
வாகனத் தொடரணி !
புழுதி கிளப்பி முறைத்துக் கனைத்து
கவசக் கனரகம் !

பயந்து, பதுங்கின
பருந்து கண்ட குஞ்சுகள் !

"ஓட வேணாம்
வாங்க வாங்க,
அங்கால இருந்த
ஆளக் கொண்டாந்திற்றம்
இங்கால பிடிச்ச வங்க
எங்கப்பா?

வார்த்தைகள் தெறித்தன
வாகனத் திருந்து,
சப்பாத்துக் கால்கள்
தரையில் இறங்கின..!

பின்னால் இருந்து
கோழி மெல்ல
இறங்கி நின்றது..
"கோழிக் காக்கா.. !"

"கோழிக் காக்கா வந்திற்றார்ரா .."
மின்னல் வேகமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது வழியே
பரந்தது செய்தி

கோழி
கூவவு மில்லை..
விடிந்தது.. புதிய பொழுது
புலர்ந்தது !

சோக இருள் தூர விலக..
ஊர் -
பதற்ற ஆடை கழற்றி எறிந்து,
புதிய ஆடை
மாற்றிக் கொண்டது !
சந்தோசப் பவுடர்
அப்பிக் கொண்டது
முகத்தில் !

சிரிப்பொலி கேட்டது
மெல்ல மெல்லக்
கண் விழித்தன
கடைகள் !

இருகரம் ஏந்தி
இறைவனைக் கேட்டவன்
இதனைப் பார்த்தான்

மகிழ்ந்து போனது மனசு !
இளைய இரத்தம்
பாய்ச்சி யதான புதிய தெம்பு

பிரார்த்தனை மீண்டும் !
இருகரம் ஏந்தினான்
"கண்பட்டு விடக்
கூடாது" என்று !

"அவங்க எங்கப்பா?"
அவசரம் தொனித்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனம் இரைந்தது

வாகனத் தருகே
வந்தடைந் தார்கள்
மாசிலா மணியும் மற்றப்
பையனும்

கூசின கண்கள்
மாசிலா மணியைப்
பார்க்கக் கூசின !

மறைந்து விடவே
நினைத்தான் - ஆயின்
மாசிலா மணி பார்ப்பது
தெரிந்தது.

கிட்ட நெருங்கி,
"மன்னிச்சிரு மச்சான்
என்னால முடியல" என்றவன்
சொன்னான் !

"எனக்குத் தெரியுண்டா கேட்டிருப்பாய் நீ
நம்முட நட்புக்கு
வேலி போட ஏலாது"

மாசிலா மணியும்
மற்றப் பையனும்
ஏறிக் கொள்ள,
அவனின் கைகள் அசைந்தன
வாகனம் சென்று
மறைந்த பின்னரும் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. சமாதான சக வாழ்வு!

கூட்டம்
சுற்றி வளைத் திருந்தது !
கோழிக் காக்கா
மத்தியில் நின்றார்
ஆட்கள் அவரிடம் அனுபவம்
கேட்டனர் !

"கடத்தப் பட்ட கதையது மெய்யா ?
கடத்திச் சென்ற குழுவினர்
எவர்கள் ?

அவர்கள் கடத்திய காரணம்
என்ன ?
அவர்கை இருந்த
ஆயுதம் எதுவோ ?
ஏகே நாற்பத் தேழே தானோ ?
எஸ்எம் ஜீயும்
வைத்திருந் தாரோ ?"

விழுந்த விழுந்த
வினாக்களுக் குள்ளே
தெளிந்தவை யாகத்
தெறித்தவை இவைதான் ?

கண்களை மூடிக்
காக்கா திறந்தார்
சொன்னார் பதிலை ..,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கி எடுத்தால் ..

"என்னை வந்து இருவர்
அழைத்தனர்
எந்தக் குழுவினர் என்றுநான்
அறியேன் !
வந்தவர் ஆயுதம்
வைத்திருந் தார்கள்
குண்டுகள் துப்பாக்கி
என்றுதான் அறிவேன்
எந்தரகம் அவை
என்றுநான் அறியேன்"

என்பதாய் அமையும்

கேட்டவர் மேலும்
துளைத் தெடுத் தார்கள்
மூச்சு விடாமல் கதைத்தார்
காக்கா !

விசாரணைக் கென்று
அழைத்துச் செல்ல ..,
வியாபாரப் போட்டி
காரண மானதை
நடந்து முடிந்த
திருமணத் தாலே
பொறாமைப் பட்டோர்
உரமிட் டிருந்ததை
ஒவ் வொன்றாகவே
உரைத்தார் அங்கே !

கூட்டிப் போன சங்கதி
கேட்டு,
ஊரே கூடித் திரண்டு
நின்றதை,
ஏனேன் என்று விளக்கம்
கேட்டதை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி வளர்ப்புச் சங்கப்
பிள்ளைகள்
ஓடித் திரிந்து
காரியம் பார்த்ததை
பெருமை பிடிபடச்
சொன்னார் காக்கா !

வண்ணக்கர், முறிவு
வைத்தியர் வாழையர்
சின்னாச்சி அக்கா
செபமாலை அண்ணர்
பொன்னையா மாஸ்டர்
புறப்பட்டு வந்தனர் !

"காக்கா நல்லவர் விடுங்கள்"
என்று
கேட்டு அவர்கள்
மன்றாடி நின்றனர் !

பொய்யும் வதந்தியும்
பொறாமையும் சேர்ந்து
இயல்பு வாழ்க்கையை
சீர் குலைத் திடுவதை
எண்ணி வருந்தினர் !

சமாதான மாகச்
சகவாழ்வு வாழவே
அவர்கள் விரும்பினர்

காக்கா சொன்ன
கதைகளி னூடே
வார்த்தைகள் இவையும்
வடிவம் பெற்றதை
கூட்டத் தோடு
கூட்டமாய் நின்று
கேட்டான் அவனும் ..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான சகவாழ்வு..?

அதிகாரத்திற்கும்
ஆயுதத் திற்கும்
அச்சப்பட்டு
அடங்கி இருப்பதா,
அன்றேல்-
ஒருவரை ஒருவர்
புரிந்து கொண்டு
ஒற்றுமைப் பட்டு
இணங்கி வாழ்வதா ?

"தனித்துவம் பேணல்"
என்று சொல்வது
பிரிந்து பிரிந்து வாழச் சொல்வதா?
அன்றேல்-
தங்கள் தங்கள்
தனித்துவ மான அடையாளங்களை
மிளிரச் செய்து
வாழ்கிறபோதும்
மற்றவரோடு இணங்கி இணைந்து
ஒற்றுமையாக
வாழச் சொல்வதா?

"விட்டுக் கொடுத்தல்"
"சகிப்புத் தன்மை"
என்பது எப்படி ?
பயத்தினால் வருவதா ?
பரிபூரண சம்மதத்திலா ..?

அவனின் மனசு
அங்கு மிங்குமாய்
பாய்ந்து பாய்ந்து அல்லாடியது
கடிவாளம் இடப் படாத
குதிரை யாகவே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.விழித்துக் கொண்ட பஸ் தரிப்பு நிலையம்

*பின்னரும்*
*அவன் வந்து நின்றான் !*
*பஸ் தரிப்பு நிலையம்.*

*பெயர்ப்*
*பலகை இருந்தது*
*பஸ்களும் நின்றன.*
*கடைகளும் அகலக்*
*கண்திறந் திருந்தன.*

*சனசந்தடி இருந்தது*
*பிளந்தே இருந்த*
*சந்தைக் குள்ளும்*
*சனங்கள் -*
*மாறி மாறிச் சென்று*
*வந்தனர் !*

*மனசு கேள்வியால்*
*நிரம்பி வழிந்தது*
*வயிறு பசியால்*
*கொதிநிலை அடைந்தது !*

*எந்த பஸ்ஸில்*
*ஏறிச் கொள்வது.?*
*எந்த ஊரில்*
*இறங்கிக் கொள்வது..?*
*குஞ்சுகள், கோழி உறவினர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கி இருக்கும்
ஊர்தான் எதுவோ ?
தவித்தது மனசு !

கண்கள் மங்கின
பசி கடித்தது !

அக்கா தந்த காசு இருப்பதை
தொட்டுப் பார்த்து
கைகள் உணர்த்தின !
"நண்பன் கபே"க்குள்
நடந்தன கால்கள்

ரொட்டியும் சம்பலும்
உண்டு முடித்து
பின்னராய்-
பஸ்ஸில் ஏற
எண்ணிச் செல்கையில்-

முன்னால் வந்த அந்த உருவம் ..?

உற்றுப் பார்த்தான்
உறவினர் நின்றான்
குஞ்சுகள், கோழி ..?
ஐயோ.. அவர்கள் !!

கண்ணீர் வெள்ளமாய்க்
கரைபுரண் டோட...
கட்டிப் பிடித்துக்
கதறி யழுதான் !
என்ன நடந்தது
எங்கே அவர்கள் ..?

ஆயுதம் தரித்த
அந்தக் குழுவினர்
அடிக்கடி வந்து
தொல்லை தந்ததை ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைக் கேட்டுத்
துளைத்து எடுத்ததை ..
ஒவ்வொரு பொழுதும்
இரத்தம் உறைந்து
பிள்ளைகள் கிடந்ததை
இதனால்,
கிழக்கை விட்டும்
பிரிந்து போனதை ...

ஒவ்வொரு ஊராய்
அலைந்து திரிந்து
"ஓணே கமே" வை
சென்று அடைந்து
அங்கொரு தூர
உறவினர் வீட்டில்
தங்கி இருப்பதை...

இங்கு பார்த்து
ஏதும் கிடைத்தால்
கொண்டு செல்லலாம்
என்று வந்ததை
துயரத்தோடு சொன்னார்
உறவினர் !

என்னை அவர்கள்
தேடிய தேனோ ?

பிழை சரி சொல்லிப்
பேசிக் கதைத்தது
பிழையாய் அவர்களைச்
சென்றடைந் திருக்குமோ ?
பிடிக்கப் பட்ட என்னால்
ஏதும்-
தகவல் கசிந்து
அவர்கள் -
பிடிபடக் கூடும்
என்ற அச்சமோ ..?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் கதி
அதோ கதியாகி
அகதி வாழ்வே
ஊர்ஜித மானதாய்
எண்ணி எண்ணி
ஏங்கி அழுதான் !

ஊரை விட்டு
ஓடிச் சென்று
கோழி.. குஞ்சொடு
கூடி இருப்பதா ?

தேடும் குழுவைத்
தேடிச் சென்று
உண்மை நிலையை
விளக்கி வைப்பதா ?

ஓடிச் செல்வதா ?
தேடும் குழுவைத்
தேடிச் செல்வதா ,
ஊரை விட்டு
ஒளித்துச் சென்ற
கோழியைக் குஞ்சைக் கூட்டி வருவதா ?

துளைத்தன நெஞ்சைக்
கேள்வி வண்டுகள் !
அழுது அழுது
வீங்கின கண்கள்

எஞ்சி யிருந்தது
பிரார்த்தனை மட்டுமே !
இருகரம் ஏந்தினான்.

புரிந்து ணர்வோடு வாழ்வதற்கான
சரிசமமான சமதானம் நாடியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞரின் நூல் வரிசை...**

- பதம் - **1987** கவிதைத் தொகுப்பு
- சந்தனப் பொய்கை - **2009** கவிதைத் தொகுப்பு
- கொந்தளிப்பு - **2010** குறுங்காவியம்
(இலங்கை அரச சாஹித்ய மண்டல சான்றிதழ் பெற்றது)
- தோட்டுப்பாய் மூத்தம்மா - **2011** குறுங்காவியம் (இலங்கை அரச சாஹித்ய மண்டல விருது, கொடகே சாஹித்ய மகாகவி உருத்திரமூர்த்தி விருது, இலங்கை இலக்கிய பேரவை (யாழ்ப்பாணம்) சான்றிதழ் பெற்ற நூல்)
- எஞ்சியிருந்த பிரார்த்தனை - **2012** குறுங்காவியம்
- பாலமுனை பாறூக் குறும்பாக்கள் -**2013**
- வலைக்குள் மலர்ந்த வனப்பு - **2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாவேந்தல் பாலமுனை பாறூக் இலங்கை அம்பாறை மாவட்டம் பாலமுனையில் பிறந்தவர். தந்தை: மீராலெவ்வை மரைக்கார் முகம்மது லெவ்வை ஜே.பி. தாய்: ஆதம்லெவ்வை முஹல்லம் அலிமா நாச்சி. இலங்கை வங்கியில் பிரதி முகாமையாளர் தரத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஐம்பதாண்டுக் கால இலக்கிய அனுபவத்தில் இலங்கை அரசின் கலை இலக்கிய உயர் விருதான கலாபூஷண விருது, கிழக்கு மாகாண வித்தகர் விருது என்பன பெற்றவர். நூல்களுக்காக இலங்கை அரசின் சாஹித்ய மண்டல விருது வென்றவர். நவீன காவியங்கள், குறும்பாக்கள், கவிதைகள், வலைப்பூக்கள் என ஏழு நூல்களைத் தந்தவர். இலங்கை.இந்திய மலேசிய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் பங்கேற்றிருப்பவர். மேடை, வானொலி, தொலைக்காட்சி கவியரங்குகளுக்கு தலைமை தாங்குபவர். கரவாகு இலக்கிய சந்தி கல்முனையில் நடத்திய இந்திய இலங்கை கலை இலக்கிய உறவுப்பாலம் நிகழ்ச்சியை தலைமை ஏற்று நடத்தியவர். பிரான்ஸில் இருந்து மாதாந்தம் வெளிவரும் தமிழ்நெஞ்சம் மின்னிதழின் ஆசிரியர் குழு உறுப்பினர். கலை இலக்கிய செயற்பாடு களுக்கும் மேலதிகமாக பல்வேறு சமூக நல நடவடிக்கைகளுக்கான சங்கங்களிலும் நலனோம்பு நிறுவனங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தலைமை வகித்துச் செயற்படுபவர். இவரது 'கொந்தளிப்பு' இலங்கை அரச சாஹித்ய சான்று பெற்ற நூல். மேலும் 'தோட்டுப்பாய் மூத்தம்மா' இலங்கை அரச சாஹித்திய மண்டல விருது, கொடகே சாஹித்திய மஹாகவி உருத்திர-மூர்த்தி விருது, யாழ்இலக்கியப் பேரவை சான்றிதழ் என்பன பெற்றது.

ISBN 978-955-0958-35-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org